

மௌனம் ஏன்?

கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...

KALKI ● 30.05.2010 ● ரூ.10.00 ● 96 பக்கங்கள்



று வாரப்போட்டி அதிரடி!
தங்கக்காசு பரிசு!

தவறவிடாதீங்க...

ம்மர் செலக்ஷன்!

கோடைக்கால
கொண்டாட்டம்!
ஃபேஷன்
ஸ்பெஷல்



சிறுநீர் கசிவு பிரச்னையா?

இன்னும் ஏன் தயக்கம்?

நீங்கள் அணுக வேண்டிய சிறப்பு மருத்துவர்

UROGYNECOLOGIST

இருமினாலோ,
தும்மினாலோ
சிறுநீர் கசிவு
ஏற்படுகிறதா?

விரைவில் பெங்களூருவில்...

“சிலிங் சிகிச்சை”

வலியில்லாமல், இரத்தக் கசிவில்லாமல் ஒரே நாளில் வீடு திரும்புங்கள். அமெரிக்காவில் UROGYNECOLOGY FELLOWSHIP பட்டம் முடித்த மருத்துவர்கள் உள்ள இந்தியாவில் முதல் ISO 9001:2000 Certified சிறப்பு மையம்

இப்போது கோவையில்

பாலா மெடிக்கல் சென்டர் அண்டு ஆஸ்பிட்டல்,
901, திருச்சி ரோடு,
இராமநாதபுரம்,
கோயம்புத்தூர் 641 045.
0422-2323456, 2323333

தங்கள் பிரச்னையை மேற்படி மையத்திலுள்ள முறையான பயிற்சி பெற்ற நபரிடம் தொலைபேசியில் தெரிவித்து கவுன்சலிங் அல்லது ஆலோசனை பெறலாம். ஆலோசனைக்குக் கட்டணம் எதுவும் கிடையாது!

GUNA ASSOCIATES IN UROGYNECOLOGY & RESEARCH FOR INCONTINENCE (GAURI)

1, Crescent Park Street, T.Nagar, Chennai - 600 017. Ph : 24341055, 24322591

E-mail : gunasek@gmail.com Web : www.urogynecology.in

கல்கி

30.05.2010





வயல்வெளி to வெள்ளித்திரை

விவசாயம் செய்யும் இளைஞன் கோடம்பாக்கத்தின் கதாநாயகன் ஆகியிருக்கிறார். நம்ப முடியவில்லையா... ஆனால் மெய்யாலுமே மெய். திட்டக்குடி படத்தின் நாயகன் ரவிதான் அந்த அதிர்ஷ்டசாலி. இயக்குநர் சுந்தரன் கதைக்கான நாயகனைத் தேடி அலையும் போதுதான் 'திட்டக்குடி'யிலேயே சிக்கியிருக்கிறார் ரவி. வறட்சியையும், வறுமையையும் சுமந்து திரியும் ஒரு விவசாயியின் வீரமும் காதலும்தான் கதையாம்.

(சுந்தரனால் ரவிக்கு சுக்ரதசையா...?)



* இந்தியாவிலேயே அதிகமான டீ.வி. எபிசோட்களை இயக்கியதால், இயக்குநருக்கான நந்தி விருதை இரண்டு முறை பெற்ற எஸ்.வி.சோலை ராஜா இயக்கும் முதல் படம் 'நீயும் நானும்'.
* ஒளிப்பதிவில் தங்கப் பதக்கம் பெற்ற ப்ரேம் சங்கர், படத்தின் காட்சிகளை லேட்டஸ்ட் 35mm பிலிம் கேமராவிலும், பாடல்களை சூப்பர் 16mm கேமராவிலும் படம்பிடித்துள்ளாராம்.
* நாயகி சேத்னா. தேசிய அளவில் பாட்மிட்டன் வீராங்கனையாம்; ஜிம்னாஸ்டிக்கும் தெரியுமாம். அதனால், பாடல் காட்சிகளில் ஜிம்னாஸ்டிக் செய்து அசத்தினாராம்.
* முதன் முறையாக படத்தின் இசை 3டியில் வெளிவருவது 'நீயும் நானும்' படத்துக்குத்தானாம்.
* பின்னணி இசையில் ஏ.ஆர். ரஹ்மானின் சிஷ்யன் கே.சத்யா, பாடல்களில் ஸ்ரீராம் விஜய் காம்பினேஷன் கலக்கியிருக்கிறதாம்.
* சாக்லேட் வில்லன் சம்பத்துக்கு கதை பிடித்துப் போனதால் சம்பளம் வாங்கவில்லையாம்!

(அட, சம்பத்தா சமர்த்துப்பத்தா!)

பயாஸ்கோப்

இந்த வாரம் இவர்தான்!



இந்த வார சம்மர் ஃபேஷன் ஸ்பெஷலைத் தயாரித்து வழங்குபவர் நளினி சம்பத் குமார். சிங்கப்பூரின் 'தமிழ் முரசு' செய்தித்தாளில் எழுதத் தொடங்கியவர்; அடுத்து அமெரிக்காவின் 'தென்றல்' பத்திரிகையில் பணி. பின்பு, அமெரிக் காவின் 'தென்றல்' வானொலி வழியாகப் பல தமிழ் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கி, அதன் பிறகு சிங்கப்பூரின் தமிழ் வானொலியான 'ஒலி-96.8'ல் சிறப்புச் செய்தியாளராகப் பணியாற்றி யவர். 2006 முதல் இந்தியத் தலைநகர் டில்லி யிலிருந்தும், சென்னையிலிருந்தும், கட்டுரைகள், பேட்டிகள், கதைகளை... 'கல்கி', 'மங்கையர் மலர்' பத்திரிகைகளில் எழுதி வருகிறார். மேலும், சென்னை 'பொதிகை' தொலைக்காட்சியிலும் மருத்துவம் சார்ந்த நிகழ்ச்சிகளை வழங்கிக் கொண்டிருக்கிறார்.

கல்கி அலுவலகம் வந்த ஊர்வசி

கலகலன்னு பேசுனாங்க...

இப்ப ஐ - பாட் வாங்கிருக்காங்க

எதுக்கு?

சஸ்பென்ஸ் தாங்கலையா?

அட... கொஞ்சம் பொறுங்க

சீக்கிரமா சொல்லிடறோம்..



கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : சீதா ரவி

உதவி ஆசிரியர்கள் :
கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், பா.கோபால்

தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899

ஆசிரியர் குழு :
044 - 4343 8822
kalki@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.500/-
வெளிநாடு : ரூ.3,800/-

கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு கல்கி நிர்வாகம் பொறுப்பல்ல.



நாம் அணியும் பர்ஃப்யூம் நம்மைப் பற்றிப் பேசும்... இதோ, செண்ட்டுலகப் பிரதிநிதி சுயவரலாறு பேசுகிறது:

வாட்டி எடுக்கும் வெயிலில், வியர்வையும், வாடையுமாகப் போனால், நன்றாகவா இருக்கும்?! அந்தப் பிரச்னையை ஜெயிக்கவே என்னை இப்பூவுலகில் கண்டுபிடித்தார்கள்'' என்கிறது செண்ட்.

பெர்ஃப்யூம் என்று செல்லப் பெயரிட்டுத்தான் இன்று உலக மக்கள் எல்லோருமே என்னை அழைக்கிறார்கள். perfume என்றால் லாட்டின் மொழியில் புகையின் வழியாக என்று பொருள்.

எகிப்திய நாடுகளில் நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கி, பெர்ஷியா, ரோம் எனப் பல உலக நாடுகளில், என் வாசம் வீச ஆரம்பித்த பின், இந்தியாவிலும் நான் மெல்ல வாசம் செய்ய ஆரம்பித்தேன்.

பூக்களிலிருந்தும், பழங்களிலிருந்தும், மரங்களிலிருந்தும், ஏன் தேன் கூடுகளிலிருந்தும்கூட என்னைத் தயாரிக்கிறார்கள். இசையில் எப்படி உச்ச ஸ்தாயி, மத்யம ஸ்தாயி, கீழ் ஸ்தாயி என்று சொல்லப்படுகிறதோ, அப்படித்தான் செண்டிலும், டாப் நோட், மிடில் நோட், பேஸ் நோட் என்று உண்டு. செண்ட் பாட்டிலைத்



கம கம ஸ்டேட்மெண்ட்!

திறந்தவுடனேயே நீங்கள் நுகரும் அந்த வாசனைதான் டாப் நோட்.

''நல்ல சென்டைத் தேர்ந் தெடுப்பது ஒரு கலை. ஒரு சென்டை போட்டுக் கொண்டு பத்து நிமிடங்கள் வரை பொறுத் திருந்துதான் அந்த சென்டை வாங்க வேண்டும். உலகில் நூறுக்கும் மேற்பட்ட வகைகள் இருக்கின்றன. அவற்றை எல் லாம் வாஞ்சையாக வாசம் பார்த்துப் பாசமாக வாங்கிச் செல்வது என்பது உங்கள் மூக்குகளில்தான் இருக்கிறது.

என் பெருமையைப் பற்றித் தெரிஞ்சுக்கணும்னா நீங்க ஹாலிவுட் பக்கம் வரணும். எவ்வளவோ செலப்ரிட்டி ஸ்டார்கள் அவங்க பேர்ல ஏதோ படங்கள் வெளியிடறா மாதிரி, ஏகப்பட்ட அமர்க்களங் களோட என்னை வெளியிடறாங்க தெரியுமா? ஜெனிஃபர் லோப ஸோட, 'ஜே லோ க்ளோ', எலிசபெத் டெய்லரோட 'வொயிட் டைமண்ட்ஸ்', நம்ம ஊரு ஷில்ப்பா ஷெட்டியின் 'S2' இப்படி அடுக்கிக்கிட்டே போக லாம்.

அளவுக்கு மிஞ்சினால் அமிர்த மும் நஞ்சுங்கறா மாதிரி வியர்வை யின் வாடையிலிருந்து தப்பிக்க ஓவரா என்னை ஓவர் டைம் செய்ய வெச்சீங்கன்னா, அது உங்க ஆரோக் கியத்தை ரொம்பவே பாதிக்கும். ஏதோ லேசா, லேசா சென்டைத் தெளிச்சுகிட்டோமா, அது போதும்னு நடையைக் கட்டி கிட்டே இருக்கணும். சரி, சரி, யாரோ என் பாட்டில் மூடிய திறக்க வர் றாங்க... வர்ட்டா... ஹாப்பி, சென்டட் சம்மர். ●

சாம்ராட்!



எத்தனையோ சென்ட் வகைகள் இருந்தாலும், சில ப்ராண்டுகள் மட்டுமே சென்ட் சாம்ராஜ்யத்தின் சாம்ராட்டுகளாக விளங்குகின்றன. அவற்றில் ஒன்றுதான் Gucci. உலகில் Gucci நுழையாத நாடே இல்லை என்னும் அளவுக்குப் புகழ்பெற்ற பெயர் இது. பெண்களுக்கு எனத் தனியாக சென்ட் ரகங்கள், ஆண்களுக்கு எனத் தனி ரகங்கள் என்று ரகம் வாரியாக, ரேட் வாரியாக விற்கப்படும் இந்த சென்ட் வகைகளை வாங்க ஏகக் கிராக்கி. விலை கொஞ்சம் அதிகம் என்றாலும், நான் ஒரு gucci சென்ட் ரசிகை அல்லது ரசிகர் என்று சொல்லிக்கொள்வது பிரபலங்களின் ஸ்டைல். மூக்கைத் துளைக்காத ரம்மியமான பூக்களின் வாசம், நீலக் கடலின் வாசம், என வருஷத்துக்கு வருஷம் ஏகப்பட்ட புதுவித வாசங்களை Gucci கண்டுபிடித்துக் கொண்டே இருக்கிறது.



குரு சிஷ்யன்



✱ சுந்தர்.சி.யும் ஷக்தி சிதம்பரமும் கைகோத்திருக்கும் மற்றுமொரு படம் 'குரு-சிஷ்யன்' - அவ்வளவுதான். சிலாகிப்பதற்கென்று ஒன்றுமில்லை.

✱ வழக்கம் போல சத்யராஜ் லொள்ளு பண்ண, அவர் கூட இருந்தே குழிபறிக்கிறார் சுந்தர்.சி. என்கிற அரதப் பழசான கதை.

✱ ஏற்கெனவே தாம் எடுத்த படங்களிலிருந்து அங்கொன்றும் இங்கொன்றுமாய் ஸீன்களை உருவி ஒப்பேத்தியிருக்கிறார் ஷக்தி சிதம்பரம்.

✱ கவர்ச்சிக்கு ஸ்ருதி. கோடம்பாக்கக் குலவழக்கப்படி கடற்கரையில் டூ பீஸ் உடையில் டூயட் பாடி, வெறுப்பேற்றுகிறார்.

✱ சந்தானத்தின் காமெடியில் 'ஏக'வசனம் ஏகபோகம்.

✱ பாடல்களில் தடவிக்கொடுத்துப் பின்னணி இசையில் காதைக் கிழித்த தினா, எப்போது புதுசா மியூஸிக் கொடுக்கப் போகிறாரோ?

✱ ஆக்‌ஷன, ஏடாகூடம், கலகலப்பு என, படத்தை நகர்த்தும் முயற்சியில் எல்லை மீறும் காட்சிகள், லாஜிக்கை மேஜிக் ஆக்கும் திரைக்கதை, காலாவதியான வசனங்கள் என்று...

குரு-சிஷ்யன் - பழைய மொந்தை; பழைய கள்!

- மகிமைராஜன்



கோரிப்பாளையம்

★ உறங்கா நகரமான மதுரையில் உறக்கத்தைத் தொலைத்துத் திரியும் கூட்டாளிகளின் கதை.

★ பார்ப்பவர்களின் உறக்கத்துடன் உற்சாகமும் தொலைந்து போகும் அளவுக்கு இவ்ளோ... ரத்தக்களறி ஏன்?

★ ஏற்கெனவே மதுரையைப் பின்னணியாகக் கொண்டு வந்து வெற்றி பெற்ற படங்களையும், அந்தப் படத்தின் கேரக்டர்களையும் ஞாபகப்படுத்துவது முக்கியமான குறை.

★ உபரியாக, அபத்தமான காட்சிகளும், வசனங்களும் கண்களையும் காதுகளையும் மூடிக் கொள்ள வைப்பது கூடுதல் குறை!

★ எல்லாத் தப்பையும் பிள்ளைகளைச் செய்ய விட்டுவிட்டுப் பெற்றவர்களைக் குத்தம் சொல்வது... இயக்குநர் ராசு மதுரவன் ஸார், எந்தவிதத்தில் நியாயம்?

★ மயில்சாமி - சிங்கம்புலி காமெடி, திரையையும் தியேட்டரையும் கலகலப்பாக்குகின்றன.

★ ஒளிப்பதிவு, எடிட்டிங் இதையெல்லாம் பேசாமல் விடுவதே நல்லது.

★ அழகுக் காட்டேரியே... என்ன இந்த மாற்றமோ... இரண்டு மெலடிகளும் படத்தின் மென்மையான பக்கங்கள்...

★ வழி தவறும் கூட்டாளிகளைப் படம்பிடிக்க வந்த ராசுமதுரவன், எங்கே ஆரம்பிப்பது எங்கே முடிப்பதெனத் தெரியாமல் தொலைந்துபோயிருக்கிறார்!

கோரிப்பாளையம்- வரைபடத்தில் இல்லாத வில்லங்கச் சிற்றூர்!

- கமலி

அஞ்சலி

அணுக்கமான அனும்மா

வரவேற்பறையில், அகல அலமாரியை நிறைக்கும் தமிழ்ப் புத்தகங்கள். அதன் மேல் அன்னை - அரவிந்தர் படங்கள்; கல்கி விநாயகர் பொம்மை, அருகிலேயே தமது டிரேட் மார்க் புன்சிரிப்புடன் அனுராதா ரமணன் - வண்ணப் படமாக. அதைச் சுட்டிக் காட்டிச் சொன்னார் அவரது சகோதரி ஜெயந்தி சுரேஷ்.

''எப்பவும் சிரிச்சுக்கிட்டே இரு...ன்னு அனும்மா பேசினதுதான் கடைசி வார்த்தைகள். வாழ்க்கையில அவர் அளவுக்கு பாஸிடிவ்வா இன்னொருத்தரைப் பார்க்கிறது கஷ்டம்...''

நினைவுகளில் தோய்ந்த ஜெயந்தி தொடர்ந்தார் - ''முதல் கதை 1977ல் 'மங்கை' இதழில் வெளியாச்சு. அப்போ அனும்மாவுக்குச் சொந்தப் பெயரில் எழுத பயம். மங்கை ஆசிரியர் சாரதி 'வாசகர்கள் கேட்கறாங்க' என்று வற்புறுத்தியதன் பெயரில் 'சாம்பவி' என்றொரு புனைபெயரைக் கொடுத்தார் அனும்மா... அங்கேயிருந்து எழுத்தாளர், நாவலாசிரியர், பத்திரிகையாளர், விமர்சகர், பல பேருக்கு கவுன்ஸெலிங் தரும் அணுக்கமான ஆலோசகர் என்கிற வளர்ச்சியை அனும்மா கூடவே இருந்து பார்த்தது பெரிய அனுபவம்...

மேட்டூரில் வசித்தபோது, கூட்டுக் குடும்பம். அவருக்கென்று தனி அறை எதுவும் இல்லை. நடு ஹாலில் மற்றவர்களின் சத்தமான பேச்சு அவருக்குத் தொந்தரவாக இருந்ததேயில்லை. ஹாலின் ஒரு மூலையில் உட்கார்ந்து தன்பாட்டுக்கு எழுதிக் கொண்டிருப்பார்.

நெல்லைப் பகுதியில், தாய் வீட்டுக்குப் பிரசவத்துக்கு வந்த ஓர் அப்பாவிப் பெண்ணைத் தவறான வழி சொல்லி, ஆள் அரவமில்லாத ஒரு கட்டுமான வேலை நடக்கும் இடத்தில் பஸ்ஸிலிருந்து இறங்கச் செய்து, சில இளைஞர்கள் பாலியல் பலாத்காரம் செய்தார்கள். அந்தப் பெண்ணைப் புகுந்த வீட்டிலும் சரி, பிறந்த வீட்டிலும் சரி, நிராகரித்து விட்டார்கள். இந்தக் கொடூரமான சம்பவத்தை பேப்பரில் படித்தபோது, பதறிப் போனார் அனும்மா. இந்தச் சம்பவத்தை வைத்து அவர் எழுதிய கதைதான் 'சிறை'. (திரைப்படமாகவும் வந்தது.)



அந்தக் கதை வெளியானபோது, பத்துப் பனிரெண்டு பேர் கோபாவேசமாக அவரைத் தேடிக் கொண்டு மேட்டூரில் வீட்டுக்கே வந்துவிட்டார்கள். ஆனால் பதற்றப்படாமல், 'நீங்கள் எந்த நோக்கத்துக்காகவும் என்னைத் தேடி வந்திருக்கலாம்; ஆனால் நீங்கள் எங்கள் வீட்டு விருந்தாளிகள்; முதலில் உட்காருங்கள் என்று சொல்லி, காபி கொடுத்து உபசரித்த அவரது நிதானம் , எல்லோருக்கும் வந்து விடாது...'' நெகிழ்ந்து பேசினார் ஜெயந்தி சுரேஷ்.

தொகுப்பு:
எஸ்.சந்திரமௌலி

மைலாப்பூர் மற்றும் காஞ்சிபுரம்

Sree Annamalayar Thunai



SKS

ஹாண்ட்லூம் வேர்ல்டு

ஸ்ரீ காமாட்சி சில்க்ஸ்®

SILK MARK®

திருமண பட்டுச்சேலைகளின் பிறப்பிடம்

Rs. ~~1350~~ Rs. 950	Rs. ~~1600~~ Rs. 1150	Rs. ~~3700~~ Rs. 1850	Rs. ~~5800~~ Rs. 2900	Rs. ~~8400~~ Rs. 4200	Rs. 9800 Rs. 4900	Rs. 13200 Rs. 6600



பழைய வெள்ளி ஜரிகை காஞ்சிபுரம் பட்டுச்சேலைகள் எந்த நிலையிலும் எக்ஸ்சேஞ்ச் செய்யப்படும்

10% to 50% தள்ளுபடி

சென்னை: எண். 13/7, (அடி தளம்) வடக்கு மாட வீதி, மயிலாப்பூர், சென்னை - 4. (கபாலீஸ்வரர் கோயில் அருகில்) போன்: 044 - 2493 3097, 2461 0444

காஞ்சிபுரம்: எண். 20, ரயில்வே ரோடு, அருணா தியேட்டர் எதிரில், காஞ்சிபுரம் - 631 501 போன்: 044 - 2722 0248 Cell: 94440 07925

தவணை விற்பனை உண்டு

Master & Visa Card Accepted



வேத சாஸ்திர ரக்ஷணத்திற்கு ஓர் வேண்டுகோள்.

அத்வைத வித்யாசார்ய மஹாராஜா ஸார்வபௌம

ஸ்ரீ கோவிந்த தீக்ஷித புண்யஸ்மரண ஸமிதி (Regd.)

"ஸ்ரீ கோவிந்த தீக்ஷித கடிகாஸ்தானம்"

29-30, East Iyen Street, KUMBAKONAM, Thanjavur Dt. Tamil Nadu-612 001. India.

E-mail : rajavedapatasala@dataone.in

Website : www.rajapatasala.in

☎ Off : (0435)
2425948
2401789
Patasala :
2401788
2422866

"வேதாத்யயனம் செய்யும் பாக்யமில்லாதவர்கள், வேதாத்யயனம் செய்துவரும் குழந்தைகளை போஷித்து ரக்ஷிப்பதன் மூலம் ஓரளவாவது தனது கடமையை நிறைவேற்ற முடியும். ஒரு வேதக் குழந்தையின் படிப்பு பராமரிப்பு செலவை ஒரு குடும்பம் எடுத்துக்கொண்டால், பேருபகாரமாக இருக்கும்" என்று காஞ்சி ஸ்ரீ மஹாஸ்வாமிகள் உபதேசித்துள்ளார்கள். அவரின் மூதாதயர்களான ஸ்ரீ நாகமாம்பா ஸமேத பகவான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் அவர்களால் கி.பி. 1542-ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து 467 ஆண்டுகளாக நடந்துவரும் ராஜா வேத காவ்ய பாடசாலையை மேற்படி ஸமிதியானது தாய்போல் இயங்கி காப்பாற்றி வருகிறது. தற்பொழுது 210 மாணவர்களுக்கு 20 வேத, சாஸ்திர அத்யாபகர்கள் புராதனமான குருகுல முறைப்படி ரிக் வேதம், கிருஷ்ண, சுக்ல யஜுர் வேதம், ஸாம வேதத்தை போதித்து வருகிறார்கள். இப்புனித பாடசாலையை ரக்ஷிக்க கீழ்கண்ட திட்டங்களில் அனைவரும் பங்குகொண்டு ஸ்ரீ வேத மாதாவின் அனுக்ரஹத்தால் ஸகல ச்ரேயஸ்களையும் அடைய வேண்டுகிறோம். புதிய பாடசாலை கட்டிடம் **ஸ்ரீ கோவிந்த தீக்ஷித கடிகா ஸ்தானம்** என பெயரிடப்பட்டு 21-6-2004 திங்கள்கிழமை ஸ்ரீ காஞ்சி காமகோடி ஜகத்குரு ஸ்ரீ ஜெயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் திறந்து வைத்து வேத அபிவிருத்திக்கு அர்ப்பணித்தார்.

தங்கள் கடிதத்தில் தங்கள் பெயர் (with STD Code)/போனை எண்ணை குறிப்பிடும் படி கேட்டுக்கொள்கிறோம்.

நன்கொடை திட்ட விபரங்கள்	நன்கொடை தொகை	நிரந்தர வைப்பு நிதி "Corpus Fund"
ஒரு வேளை ஸமாராதனைக்கு (பகுதி தொகை)	Rs.700/-	Rs. 9,000/-
Special Samaradhana	Rs. 2,500/-	Rs. 30,000/-
Rice & Dhal	Rs. 1,600/-	Rs. 20,000/-
வேதம் பயிலும் ஒரு மாணவனின் பராமரிப்பு ஒரு மாத செலவு ரூ.1000/-	Rs. 12,000 P.A	Rs.1,50,000/-

நன்கொடைக்கான தொகையை Cross செய்யப்பட்ட D.D./Cheque-ஐ A.V.M.S.G.D.P.S. Samithi என்ற பெயரில் அனுப்பக் கோருகிறோம்.

கிருஷ்ண யஜுர் வேத அத்யாபகர்கள் விண்ணப்பிக்கவும்.







தலையாய ரீமிக்ஸ்

சம்மரில் தலையைக் கவனிப்பது தான் நமது தலையாய கடமை. சூரியனின் நேரடித் தாக்குதலுக்கு உள்ளாகப் போவது பாவம், நம் தலைவர் தலையார் தான்! அவரைக் கூலாக, ஸ்டைலாக வைத்து கொண்டாலே போதும், மற்றவை எல்லாம் தானாகவே சரியாகிவிடும். சம்மர் ஹேர் கட்கள் மற்றும் ஹேர் ஸ்டைல்கள் என்பது உலகப் பிரசித்தி பெற்ற சமாச்சாரம்(!) அந்த தலையாய விஷயத்தைக் கொஞ்சம் தெரிஞ்சுக்கங்க...

பாப் ஹேர் ஸ்டைல்: 1960 - 70களில் தொடங்கி பிரபலமாக ஆரம்பித்த பாப் கட்டைத்தான் இப்படி புது பாப் ஹேர் ஸ்டைல்னு பெயரிட்டு, ரீ மிக்ஸ்



பாட்டுக்கள் மாதிரி திருப்பி, திருத்தி சொல்லிக்கிறாங்க, ஃபேஷன் ப்ரும்மாக்கள். சும்மா இல்லீங்க, தலையைக் குடுத்தோம்மா, கம்முன்னு வந்தோம்மாங்கற கதை எல்லாம் இங்க கிடையாது. பாப் கட்னா, அதுல ஷார்ட் கட் பாப் வேணுமா, இல்ல க்ளாசிக் கட் வேணுமா அல்லது புதிய கோண கட் (new angled bob) வேணுமான்னு தீர யோசிச்சு வெச்சுகுங்க. முடி பிரச்னை என்பதால், உங்க முடிவு ரொம்ப தீர்மானமா இருக்கணும்.

பிக்ஸி ஹேர் கட் 2010: யெஸ், இந்த ஆண்டின் கோடை ஃபேஷன் மந்திரம் இதுதான். லேட்டஸ்ட் ஹேர் ஸ்டைல் விரும்பிகள் தாராளமாகத் தங்கள் தலையை இதற்குக் கொடுக்கலாம், எப்படிப்பட்ட முகபாவமும், மனோபாவமும் கொண்டவர்களுக்கும் ஏற்ற வகையில் ஏற்றத்துடன் அமைந்த ஹேர் ஸ்டைல் இது. வெயிலில் இந்த ஹேர் ஸ்டைலைச் சமாளிப்பதும் சுலபம் என்பதாலேயே, ப்யூட்டி பாலர்களில் அதிக ஹேர் நேயர்கள் விரும்பிக் கேட்கும் ஹேர் ஸ்டைல் இது.

நியூ பஸ் ஹேர் கட்: இதுதான் உலக அழகர்கள் பெரிதும் விரும்பித் தங்கள் தலைக்கு ஆசையுடன் சூடிக்கொள்வது. ஏகப்பட்ட பில்ட் அப்புகளோடு வரும் இந்த ஹேர் ஸ்டைல், ஒரு ஷார்ட் அன்ட் ஸ்மார்ட் சம்மர் ஹேர் கட்; அவ்வளவு தான்! எவ்வளவுக்கெவ்வளவு தலை முடி ஒட்ட வெட்டப்பட்டுள்ளதோ, அவ்வளவுக்கவ்வளவு நீங்கள் ஸ்மார்ட்டானவர் எனப் பெயர் எடுத்து விடலாம். அப்போ கஜினி மாதிரி ஹேர் ஸ்டைல் வெச்சுகிட்டா உலக மஹா மெகா ஸ்மார்ட் கய்ன்னு பெயர் கிடைச்சுடுமான்னு நீங்க மனசுக்குள்ள கேள்வி கேட்பது எனக்குக் கேட்டுடுச்சு. உங்க ஊரு சம்மருக்கு அது ஓகேன்னா அதையே ஃபாலோ பண்ணுங்க..

ஸ்பைக்கி ஹேர் கட்: சம்மரில், சன்னை நோக்கி, தலையை காண்பிக்கும் நேரம் மட்டும் இதை நீங்கள் செய்து கொள்ளலாம். ஷாம்பூ கொண்டு அலசிய உங்கள் தலையில், ஜெல்லை மெல்லத் தடவி, அப்படியே உங்களுக்குப் பிடித்த விதத்தில் தலையை கன்னாபின்னாவென்று கலைத்துக் கொண்டால், ஸ்பைக்கி ஹேர் ஸ்டைல்! ஸ்பைக்கி ஹேர் ஸ்டைல் நீண்ட நேரம் அப்படியே நிலைத்து நிற்க, கொஞ்ச நேரம் ஹேர் ட்ரையரை தலைப் பக்கம் காண்பியுங்கள், அவ்வளவுதான்.. யூ ஆர் ரெடி ஃபார் சம்மர்!



சம்மர் சட்டையர்!





ஜோக்ஸ் : பிள்ளை





கல்கி



2010 மே 30
விக்ருதி வைகாசி 16
மலர் : 68
இதழ் : 44


தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்


பெருகிவிட்ட புறம்போக்கு வியாபாரம்!

"சிறுதாவூரில் உள்ள ஜெயலலிதாவின் பங்களா நத்தம் புறம்போக்கு நிலத்தில் அமைந்ததல்ல'' என்று சிவசுப்ரமண்யம் கமிஷன் அறிக்கை தீர்மானமாகச் சொல்லவில்லை. எனினும், அப்பகுதியில் உள்ள வேறொரு நிலப்பரப்பு, ஏழைகளுக்குப் பட்டா செய்து தரப்பட்டது என்றும், அவர்களிடமிருந்து இளவரசி, சுதாகரன் ஆகியோரால் வாங்கப்பட்டது என்றும் அதே கமிஷன் உறுதிப்படுத்தியிருக்கிறது.

ஜெ.பங்களா இடம்பெற்றுள்ள பகுதி குறித்த விசாரணையை, புறம்போக்கு ஆக்கிரமிப்புச் சட்டத்தின் அடிப்படையில் நிகழ்த்த ஜெ.தரப்பும் அரசு தரப்பும் பரஸ்பரம் ஒப்புக் கொண்டன. இதனால்தான் சிறுதாவூர் பங்களா நிலம் குறித்து சிவசுப்ரமண்யம் கமிஷன் அறிக்கை தீர்மானமாக எதையும் கூறவில்லையே தவிர, ஆக்கிரமிப்பையோ தவறு நிகழ்ந்ததையோ அக்கமிஷன் அறிக்கை மறுக்கவில்லை; ஏற்கவுமில்லை. இந்த நுணுக்கமான பாகுபாடை மக்களால் உணர முடியாது என்கிற துணிவில், ஜெயலலிதா தாம் குற்றமற்றவர் என கமிஷன் அறிக்கையில் அறிவிக்கப்பட்டதாகவே சித்திரித்து வருகிறார். சிறுதாவூர் பங்களா தமக்குச் சொந்தமானதே அல்ல; வாடகை இடம் என்றும் கூறி வருகிறார்.

இளவரசியும் சுதாகரனும் சசிகலாவின் உறவினர்கள்; ஜெயலலிதாவுக்கு நெருக்கமானவர்கள் என்பதை உலகறியும். மக்களை நிர்ப்பந்தித்து நிலத்தை வாங்க, அவர்கள் தங்கள்





செல்வாக்கைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பதும் தெளிவு. இந்நிலையில், தாம் குற்றமற்றவர் என்பது போலவும், கருணாநிதி தம் மீது அபாண்டம் சுமத்துவதாகவும் அனல் பறக்கப் பேசுவது, ஜெயலலிதா பாணி கண்துடைப்பு அரசியல்.

புறம்போக்கு ஆக்கிரமிப்புச் சட்டப்படியான விசாரணையை விரைவில் நடத்தி முடித்து, சிறுதாவூர் பங்களா உள்ள நிலம் ஆக்கிரமிப்பா இல்லையா என்பதை உறுதிப்படுத்துவது இரு தரப்புக்கும் முக்கியம். இலவசமாகப் பெறப்படும் எதையுமே மக்கள் மதிப்பது கடினம். இதே புறம்போக்கு நிலத்தைப் பகுதியளவேனும் பணம் செலுத்தி வாங்கும் ஒரு நபர், அதை எளிதில் கைவிடத் துணியமாட்டார். ஆகவே கூட்டுறவு முறையிலோ அல்லது பங்குதாரர் என்ற முறையிலோ, சிறிதளவேனும் மக்களின் முதலீட்டைப் பெற்று, புறம்போக்கு நிலங்களை மேம்பாடு செய்து, அதன்பிறகு அவர்களுக்கே அதைப் பட்டா செய்து கொடுப்பது உசிதமாக இருக்கும்.

பல தனியார் நிறுவனங்கள், தேவைக்கு அதிகமான நிலத்தை மிகக் குறைந்த விலையில் அல்லது இலவசமாக அரசிடமிருந்து வாங்கி, கொள்ளை லாபம் அடைகின்றன. கல்வி நிறுவனங்கள் நான்காயிரம் ஏக்கருக்கும் மேலாக நில ஆக்கிரமிப்புச் செய்துள்ளதாக, சமீபத்தில் அமைச்சர் பெரியசாமியே சட்டமன்றத்தில் கூறியுள்ளார்.

புறம்போக்கு நிலம் அரசு தர்மகர்த்தாவாக இருந்து நிர்வகிக்கவேண்டிய மக்களின் பொதுச் சொத்து. பொது நிலங்களை வளைத்துப் போடும் தனியார்களுக்கும் சரி, நிறுவனங்களுக்கும் சரி, கடுமையான தண்டனையை விரைவான விசாரணைக்குப் பின் வழங்குவது மிக அவசியம். ஆனால், இதற்கு அரசு மிக மிகத் தயங்கக் கூடும். காரணம், புறம்போக்கு ஆக்கிரமிப்பாளர்கள், பாகுபாடின்றி அனைத்துக் கட்சிகளிலும் இடம்பெற்று, மக்கள் சொத்தைச் சுரண்டிக் கொண்டிருக்கிறார்களே! ●



கடவுள்-சில விவாதங்கள்!

கடவுளைப் பற்றிய பிரச்னைகளில் மிகவும் முக்கியமானது. 'கடவுள் உண்டா, இல்லையா? என்பதுதான். மனிதன் தோன்றின காலத்திலிருந்து இந்தப் பிரச்னையும் இருந்துவருகிறது. ஒரு சாரார் ''கடவுள் இல்லை'' என்கிறார்கள். ஆனால், இரு சாராரும் கடவுள் இல்லாதது போலவே காரியம் செய்கிறார்கள்!

கடவுள் இருந்தாலும் சரி, இல்லாமற் போனாலும் சரி, அவர் மனிதனுடைய காரியங்களில் தலையிடுவதாகத் தெரியவில்லை. அப்படித் தலையிட்டாலும் தம்மிஷ்டப்படி தலையிடுகிறாரேயன்றி, மனிதனுடைய வேண்டுகோளை முன்னிட்டுத் தலையிடுவதாகக் காணப்படவில்லை.

சுவாமிக்கு வேண்டுதல் செய்து கொள்வதில் எவ்வளவோ விநோதங்கள் இருக்கின்றன. ''திருப்பதி வேங்கடாசலபதி! என் பிள்ளைக்கு நூறு ரூபாய் சம்பளத்தில் உத்தியோகம் ஆகட்டும், உன் உண்டியலில் ஒரு ரூபாய் போடுகிறேன்'' என்று தாயார் வேண்டிக் கொள்கிறாள். இங்கே கடவுள் உத்தியோகத் தரகர் ஆகிறார். ஒரு சதவிகிதம் அவருக்குக் கமிஷன். உத்தியோகஸ்தர் ஒருவர் தமக்கு வரும் 'மேல் வரும்படி'க்கெல்லாம் ரூபாய்க்குக் காலணா விதம் உண்டியலில் சேர்ப்பிக்கிறார். இதன் மூலம் லஞ்சம் வாங்குகிற பாவத்தை, முழுவதும் பகவான் மேலேயே போட்டு விடுவதாக அவர் எண்ணம்!

இதனாலெல்லாம் ''கடவுள் வேண்டாம்'' என்று நான் சொல்வதாகத் தயவு செய்து நினையாதீர்கள். அதற்கு மாறாக, கடவுள் மிகவும் உபயோகமானவர் என்று நினைப்பவர்களில் நான் ஒருவன்.

முதலாவதாக, கடவுள் நம்பிக்கையுள்ளவர் ஆயுள் இன்ஷியூரென்ஸ் செய்ய வேண்டியதில்லை. இது எவ்வளவு பெரிய சௌகரியம் பாருங்கள்! எத்தனையோ இன்ஷியூரென்ஸ் ஏஜண்டுகளுக்கு நான் டிமிக்கி கொடுத்து வந்திருப்பதெல்லாம், கடவுளிடம் எனக்குள்ள நம்பிக்கையினால்தான்.

கடவுளின் மற்றொரு பெரிய உபயோகம் என்னவென்றால், அவருடைய பெயரால் பொய்யையும் மெய்யாக்கி விடலாமென்பதே. முக்கியமாக, கோர்ட்டுகளில் பொய்ச் சாட்சி சொல்வோருக்குப் பகவானுடைய திருநாமம் இன்றியமையாத சாதனமாக இருக்கிறது. உண்மையில் கடவுள் பேராலன்றித் தற்காலக் கோர்ட்டுகளில் பொய்யே சொல்லக் கூடாது. அப்படிச் சொன்னால் அது சாக்ஷியாக ஒப்புக் கொள்ளப்படமாட்டாது.

- ஆனந்த விகடன், 15.4.1933


"போர்டு எழுதியவரை ஏன் ஜோசியர் அடிக்கிறார்?"
இங்கே எல்லா சந்'தோஷங்களும்' நீக்கித் தரப்படும்.
"இங்கே எல்லா சந்'தோஷங்களும்' நீக்கித் தரப்படும்னு போர்டு எழுதினாராம்."
அ.இ.ராக்கப்பன்

மணிரத்னம் நேரடியாக மீடியாவிடம் பேசவில்லை. என்றாலும், படத்துக்கான முன்னோட்டத்தை நடத்திவிட்டார். 'ரகசியங்கள் பாதுகாக்கப்பட்ட, வதந்திகள் வலம் வந்த 'இந்தி' ராவண், 'தமிழ்' ராவணன் (தெலுங்கில் : வில்லன்) ஜூன் பதினெட்டாம் தேதி ரிலீஸ். வழக்கமாக எல்லோரும் இசை வெளியீட்டு விழா நடத்துவார்கள். ஆனால், மணிரத்னமோ மும்பையில் 'இந்தி'க்கு விழா நடத்திவிட்டு, 'தமிழு'க்கு ஓர் இசை நிகழ்ச்சியையே நடத்தினார். மற்றவர்கள் படத்தின் பாடல் காட்சிகளைத் திரையிட்டுக் காட்டுவார்கள் என்றால், மணி, மேடையிலேயே காடு செட் போட்டு, லைவ் ஆக ஹீரோ விக்ரமைத் துணை நடிகர்களுடன் ஆடச் செய்துவிட்டார்.

ஏற்கனவே கர்ணன்-துரியோதனன் கதையை மாடர்ன் செய்து 'தளபதி'யாக்கிய மணிரத்னம், இராவணனை ஆரம்பித்தது முதலே இது ராமாயணக் கதை என்று மீடியா யூகித்தது. கதைதான் என்ன?

மூன்று கதாபாத்திரங்களைச் சுற்றிப் பின்னப்பட்டிருக்கிறது. வீராதான் ஹீரோயிக் வில்லன். யாரும் அவனை எதிர்த்து நிற்கப் பயப்படுவார்கள். அவனுக்குச் சட்டம் ஒழுங்கு பற்றி எல்லாம் கவலை இல்லை. காட்டுப் பகுதியில்தான் அவனுக்குக் குடியிருப்பு. பிரதாப் ஒரு போலீஸ் அதிகாரி. கடமைதான் உயிர். சட்டத்தை நிலை நிறுத்துவதுதான் தனது ஒரே கடமையாய் நினைக்கிறவர். ராகினி ஓர் அழகான டான்சர். பிரதாப், ராகினியைக் காதலித்துத் திருமணம் செய்து கொள்கிறார். வில்லன் வீராவின் ஆக்கிரமிப்பு உள்ள பகுதியில் பிரதாபுக்கு போஸ்டிங் வருகிறது. சட்டத்தைத் தன் கையில் எடுத்துக் கொண்டு ஆட்டம் போடும் வீராவை அடக்கி, அங்கே சட்டத்தின் ஆட்சியை நிலை நிறுத்தத் தலைப்படுகிறார் பிரதாப்.

பிரதாப்பின் ஆரம்பகட்ட அதிரடி நடவடிக்கைகளால் வீரா ஆடிப்போகிறான். அடிபட்ட புலி சும்மா இருக்குமா? தந்திரமாகத் திட்டமிட்டு, ராகினியைக் கடத்திக் கொண்டு போய்விடுகிறான். வீராவை ஒடுக்கி, ராகினியைத் தேடி, மீட்கும் ஒற்றைக் கல்லில் இரண்டு மாங்காய் அடிக்கும் நோக்கத்துடன் 'ஆபரேஷன் வீரா' ஆரம்பமாகிறது. பிரதாபுக்குப் போலீஸ் படையின் பலம் என்றால், வீராவுக்கு துணிச்சலான மலைப்பகுதி கிராம மக்களின் சப்போர்ட். அடர்ந்த காட்டுப்பகுதியில் போலீஸ் படையை மிரட்டும் சவால்கள். வனப்பகுதி போர்க்களமாகிறது. இரண்டு பக்கமும் பலத்த சேதங்கள்.

கிளைக்கதையாகக், கடத்தப்பட்டு வீராவின் கட்டுப்பாட்டில் இருக்கும் ராகினி முதலில் வீராவை வெறுத்தாலும், படிப்படியாக அவனது லட்சியப்பிடிப்பைப் புரிந்துகொண்டு, அவன் பக்கத்து நியாயத்தையும் பார்க்கத் தொடங்குகிறாள். ராமன்-ராவண யுத்தத்தில் சீதை எந்தப் பக்கம்? என்ற கேள்வி எழுகிறது. இங்கே மணிரத்னம் சொல்லும் செய்தி : 'காதல் போரில் ஜெயிப்பவர் யாருமில்லை;



- ப்ரிவியூ
பர்ஃப்யூம்
ராமனும் நானே...
ராவணனும் நானே...

ஆனாலும் எல்லோரும் போரிட்டே ஆக வேண்டும்! இந்த ராவணன் மட்டும் விதி விலக்கா என்ன?'

இந்தி, தமிழ் இரண்டிலும் ஐஸ்வர்யா தான் ஹீரோயின். இந்தியில் சீதைக்கு ராமனாக நடிக்கிறார் விக்ரம். ராமனுடன் மோதும் ராவணனாக நடிக்கிறார் ஐஸின் நிஜக் கணவரான அபிஷேக் பச்சன். தமிழில் ராமன் ரோலுக்கு பிரித்விராஜ், ராவணன் ரோலுக்கு விக்ரம். "மணி ரத்னம் படத்தில் நடிப்பதே ஓர் அரிய அனுபவம்; அதுவும் இந்தியிலும், தமிழிலுமாக இரண்டு நேரெதிர் கேரக்டர்களில் நடித்தது உண்மையிலேயே வித்தியாசமான அனுபவம் தான்!" என்றார் படத்தின் முன்னோட்ட நிகழ்ச்சியில் ஆட்டம் ஆடியதால் மூச்சு வாங்கிய படியே பேசிய விக்ரம். மணிரத்னத்தின் அக்னி நட்சத்திர ஹீரோக்களுக்கு இதில் சைடு ரோல். விக்ரமின் சகாவாக பிரபு; பிரித்விராஜின் சகாவாக கார்த்திக்.



ராமாயணக் கதையெல்லாம் இல்லை; கோபத் கண்டி என்கிற நக்ஸலைட் தலைவரது வாழ்க்கைதான் ராவணன் என்றும் ஒரு தகவல் உலவுகிறது. யார் இந்த கோபத் கண்டி? கண்டி ஒரு பிரபலமான நக்சலைட் (மாவோயிஸ்ட்) இயக்கத் தலைவர். எவ்வளவோ முயன்றும் நக்சலைட் இயக்கம் தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா, மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் வேரூன்றவில்லை என்பதால், இப்பகுதிகளில் இயக்கத்தை வளர்க்கும் பொறுப்பு அவருக்கு அளிக்கப்பட்டது. மிக வசதியான குஜராத்தி, பார்சி குடும்பத்தில் பிறந்த கண்டியின் அப்பா, கிளாக்ஸோ கம்பெனியில் உயர் பதவியில் இருந்தவர். கோபத் கண்டி படித்தது பிரபல டூன் பள்ளியில். கல்லூரிப் படிப்பு மும்பை செயின்ட் சேவியர்ஸ். அடுத்து லண்டனுக்குச் சென்று சார்ட்டர்டு அக்கவுன்டென்சி படித்தவர். லண்டனில் இடதுசாரி இயக்கங்களுடன் மிக நெருக்கமாக இருந்ததால் 1992-ல் கைது செய்யப்பட்டு, கட்டாயமாக இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டார்.

இந்தியா வந்த கண்டி, கம்யூனிஸ்ட்டும், சோஷியாலஜி புரொபசருமான மனைவி அனுராதாவுடன் மலைவாசி மக்களுக்கு சேவையில் தொடங்கி மாவோயிஸ்ட் இயக்க பொலிட்பீரோ உறுப்பினராக உயர்ந்தவர். பிரபல நக்சலைட் தலைவரான கொண்டபள்ளி சீதாராமையாதான் இவரது ஆதர்ச புருஷர். 2008-ல் மலேரியா தாக்குதலுக்குள்ளாகி அனுராதா இறந்தார். கமல், ஆசாத் ஆகிய பெயர்களிலும் உலவி வந்த கண்டியை, 2009-ல் டெல்லியில் வைத்துக் கைது செய்தது போலீஸ். ஆனால், மணிரத்தினத்தின் வீரா, கண்டியைப் போல மெத்தப் படித்த அறிவுஜீவி இல்லை; படிப்பறிவில்லாத முரடன் என்கிறது ஒரு மெட்ராஸ் டாக்கீஸ் பட்சி.

- கௌதம்ராம்

பச்சை நிறமே...
பச்சை நிறமே...




'கோ க்ரீன்' என்ற ஒரு புதிய மந்திரம் இன்று பரவலாகப் பலராலும் ஓதப்படுகிறது. ஃபேஷன் உலகிலும் இந்த 'க்ரீன்' மந்திரம் மெல்ல பரவ ஆரம்பித்துள்ளது. சருமத்துக்கும் சுற்றுச் சூழலுக்கும் கேடு விளைவிக்காத மூங்கில், சணல், சோயா மற்றும் ஆர்கானிக் முறைப்படிப் பயிரிடப்பட்ட நார் பொருட்களை அடிப்படையாகக் கொண்டு நெய்யப்படுவதுதான் க்ரீன் ஃபேஷன் துணிகள். இப்பச்சை துணி ரகங்களில் ரசாயனம் மற்றும் ப்ளீச்சிங் என்ற பேச்சுக்கே இடம் இல்லை.

ஜீன்ஸ் உலகின் நம்பர் ஒன்னான levis தயாரிப்பாளர்களின் க்ரீன் ஐட்டமான ஈகோ ஜீன்ஸ்தான் இப்போதைய ஃபேஷன் விரும்பிகளின் ஷாப்பிங் சாய்ஸ்.

பச்சை ஃபேஷனின் மற்றோர் அங்கம், வேகன் (vegan) பேஷன். விலங்குகளின் தோல் பொருளைச் சிறிதளவும் பயன் படுத்தாமல், தயாரிக்கப்படும் ஆடைகள் வேகன் ஃபேஷன். வேகாத வெயிலில் வேகன் உடைகள் போடுவதும் இப்போ ஃபேஷன்! ஹாலிவுட்டின் டாப் ஸ்டார்களான பமீலா ஆண்டர்சன், அலிசியா சில்வர்ஸ்டோன் கூட வேகன் ஃபேஷன் பக்கம் மாறிக்கிட்டு இருக்காங்க.

ஈக்கோ (eco) ஃபேஷன் இந்தியாவில் மெல்ல பரவ ஆரம் பித்துள்ளது. உற்பத்தி என்பது சற்றே குறைந்த அளவில் இருப்பதால், இதன் விலை அதிகப்படியாக இருக்கிறது என்பதே இவற்றின் மேல் உள்ள ஒரே குற்றச்சாட்டு. குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை என்பது போல, குற்றச்சாட்டுக்கள் பார்ப்பின், சுற்றுசசூழலின் வளம் இல்லை என்று எடுத்துக்கொண்டு, கோடை தொடங்கி, க்ரீன் ஃபேஷனுக்கு பச்சைக் கொடி காட்டி வரவேற்போம். நாலு வாங்கும் இடத்தில் ஒன்று வாங்கி மகிழ்வோம்!

கிரேஸியைக் கேளுங்கள்!



● ஸ்வேதா, தஞ்சை

சமீபத்தில் நீங்கள் படித்த புத்தகம்?

தனது அடுத்த சினிமா அவசரத்துக்கு நடுவிலும் கமல் ஸார் கட்டாயக் கல்வியாக ஜெயமோகனின் ''இன்றைய காந்தி'' புத்தகத்தைக் கொடுத்து வாசிக்கச் சொன்னார். வாசித்தேன் என்பதைவிட மகாத்மாவோடு வசித்தேன் என்பதுதான் என் அனுபவம். ''காந்தி கணக்கு காந்தி கணக்கு'' என்கிறோமே, அந்த மகாபுருஷரின் ''மனக் கணக்கை'' ப்ளஸ் டூ மாணவன் சிரத்தையோடு, எல்லா வழிகளையும் போட்டு ஸால்வ் செய்திருக்கிறார் ஜெயமோகன். ஏற்கெனவே இவரது ''கொற்றவை'' பற்ற வைத்த அக்னிக் குஞ்சு இதில் அண்ணாமலை தீபமாக கொழுந்துவிட்டு எரிந்தது. மகாத்மாவைத் தரிசிக்க ஸ்பரிசிக்க விரும்புவோர் அவசியம் படிக்க வேண்டிய ஆய்வு இந்நூல். க்ரேஸி மோகனை இப்புத்தகம் ''ஜெயமோகன் கரம்சந்த் காந்தி தாஸனாக்கி''விட்டது.

● ஜி.மகாலிங்கம், காவல்காரப் பாளையம்

எழுத்தாளனுக்கும், படைப்பாளிக்கும் என்ன வித்தியாசம்...?

சுஜாதா எழுத்தாளர்; நாம் பெரிதுவக்க ஈன்று சான்றோன் சுஜாதாவை நமக்களித்த அவரது தாயார் படைப்பாளி!

● நெல்லை த.ஞான செல்வன், பிரியம்மாள்புரம்

கடவுளை நேருக்கு நேர் பார்க்க முடியுமா?

பாரதியாரைப் போல் காக்கைச் சிறகிலும், தீக்குள் விரல் வைத்துத் தீண்டுகையிலும் ''நேருக்கு மாறாகப்'' பார்க்கலாம்!

● பா.அசோக், திருவில்லிப்புத்தூர்

காதலின் ஆழம் என்ன?

ஜெயித்தவர்களுக்குத் தாலி கட்டும் கழுத்தளவு; தோற்றவர்களுக்குத் தாடி வளர்க்கும் தாடை அளவு!

● எம்.அசோக்ராஜா, திருச்சி

மரணத்துக்குப் பின்பு என்ன நடக்கிறது?

கண் முழித்த பின்பு கனவில் என்ன நடக்கிறது!

● ஜி.எம்.மஞ்சரி, கிருஷ்ணகிரி

சிறு குழந்தைகள் கேட்கும் கேள்விகளுக்கு எப்படிப் பதிலளிப்பது?

எனது மகன் நான்கு வயதிருக்கும் போது ''அப்பா உன்னோட திருமண ஆல்பத்தில் ஏன் என் போட்டோ இல்லை'' என்று கேட்டான். ''எப்படிடா இருக்க முடியும். போட்டோ எடுத்ததே நீதானே'' என்ற என் பதில், அவனுடைய சந்தேகத்தைத் தீர்க்காவிட்டாலும் சந்தோஷத்தைக் கொடுத்தது!

● எம்.மிக்கேல்ராஜ், சாத்தூர்

'இளமையில் கல்' என்கிறார்கள். முதுமையில் கற்க முடியாதா?

''அதற்குத் தக நிற்க'' தெம்பில்லாத முதுமையில் ''கற்றதனால் ஆய பயனென்'' சொல்!

● ச.ஆதிகேசவன், கோவில்பட்டி

'ரெண்டுங் கெட்டான்' என்பது போல, மூன்றுங் கெட்டான்' நாலுங் கெட்டான்' உண்டா?

பக்தர்களைக் காப்பதற்காக இமை கொட்டாமல் இருக்கும் முக்கண்ணன்

பரமசிவன் 'மூன்றும் கெட்டான்'... நான்கு கை மகாவிஷ்ணுவாய் இருந்தும், கண்ணனாக வந்தபோது ''பால், தயிர், வெண்ணெய், நெய் ஆகிய நாலும் இருக்கும் உறி எட்டாமல், நண்பர்கள் முதுகில் ஏறித் திருடிய போது 'நாலும் எட்டான்'.. ஐம்புலன்களால் அழியும் நாம் 'ஐந்துங்கெட்டான்கள்'!



● **பி.சிவா, பாளையங்கோட்டை**

நந்தி என்றால் தடை என்று பொருளா?

என் பதில் 'விடை' நந்தனாருக்கு பரம்பொருளை மறைத்த நடை...!

● **வரத.சண்முக சுந்தர வடிவேலு, வாழப்பாடி**

வாதம், பித்தம், கபம் என்று சித்த மருத்துவர்கள் மூன்று நாடிதானே பார்க்கிறார்கள். அது என்ன சப்த நாடி?

வாதத்தினால் ''அய்யோ அம்மா'' பித்தத்தினால் ''ஏப்பம்'', கபத்தினால் ''இருமல்'' என்று சப்தம் போடுவதால், ''சப்த நாடி''- மௌனத்தை நாடினால் நிசப்தநாடி!

● **ஆர்.லக்ஷ்மி, கர்னாடகா**

கோடை காலத்தில் வெய்யிலுக்குப் பயந்து ஊட்டி, கொடைக்கானல் செல்லலாம். குளிர் காலத்தில் எங்கு செல்வது?

என்னமோ 'சுவிட்சர்லாண்டில்' இருப்பது போலக் கேட்கிறீர்களே... வெந்த உடலில் வேர்வையை பாய்ச் சாதீர்கள்!

காதலின் ஆழமென்ன?

சராசரி தமிழ்மகன்கள் அணியும் கறுப்புக் கண்ணாடிகளுக்கு அரசியல் அடையாளங்கள் இல்லை; அக்னி உச்சத்தில் இருப்பது மட்டுமே அடையாளம்!

''சன் க்ளாஸை யார் வேண்டுமானாலும் வாங்கிச் செல்லலாமா, கண் மருத்துவரின் பரிந்துரை தேவையில்லையா?'' - சன் க்ளாஸ் கடை நடத்தி வரும் குணசேகரனிடம் கேட்டோம்.

''என்னோட பதினைஞ்சு வருஷ சர்வீஸ்ல பார்த்தவரைக்கும், யாருமே டாக்டர்கிட்ட போய் தங்கள் கண்களுக்கு எப்படிப்பட்ட கூலிங்க்ளாஸ் வேணும் என்று கேட்டுக் கொண்டு இங்கே வருவதில்லை. தங்கள் கண்களுக்கு ஏற்ற மாதிரி என்பதைவிட, முக அமைப்புக்கு ஏற்ற மாதிரி வாங்க வேண்டும் என்றுதான் பார்க்கிறார்கள். கண்களுக்கு குளிர்ச்சி, கடும் வெயிலில் ஏற்படக்கூடிய எரிச்சல் மற்றும் உறுத்தல் இவை எல்லாவற்றிலிருந்தும் தப்பிக்க, மக்கள் முதலில் நாடுவது கூலிங்க்ளாஸ்களைத்தான்'' என்கிறார்.

''அறுபது ரூபாயில் தொடங்கி, பதினைந்தாயிரம் ரூபாய் விலை வரை இருக்கு. நடுத்தர மக்களின் நம்பர் ஒன் சாய்ஸ் அறுபது ரூபாயில் விற்கப்படும் க்ளாஸ்கள்தான். நூறு வகையான கம்பெனிகள் சன் க்ளாஸ் தயாரிப்பில் ஈடுபட்டு இருக்கின்றன. க்ரே கலர் கொண்ட கண்ணாடி, சூரியனின் பிரகாசத்தைக் குறைக்கும். அதே சமயம் மற்ற பொருட்களின் நிறத்தையும் அதிகம் மாற்றிக் காட்டாத தன்மை வாய்ந்தது. UV மற்றும் Infra red கதிர்களிலிருந்தும் கண்களைக் காக்கக்கூடிய தன்மை வாய்ந்தது இந்த க்ரே நிறக் கண்ணாடி. மஞ்சள் நிறம் என்பது ஃபேஷனுக்காக உபயோகப்படுத்தப்படுவது. பச்சை நிறமும் வெயில் காலத்துக்கு ஏற்றதுதான்.



✱ டாக்டர் வசுமதி வேதாந்தம்



முகத்துக்கு ஏ.ஸி!



ரோஸ் நிறக் கண்ணாடி நீச்சல் பயிற்சியில் ஈடுபடுவோருக்கு ஏற்றது.

குடும்பத்தினர் அனைவருமே முகத்துக்கு ஏ.ஸி. வாங்கி மாட்டிக் கொள்வதும் மே மாதத்தில்தான். குறிப்பாக டூ வீலர்களில் செல்பவர்கள், குழந்தைகளுக்குக் கூட கூலிங் க்ளாஸ் வாங்கிக் கொடுக்கிறார்கள். பெண்களுக்கு என்று இருக்கும் சன் க்ளாஸை விட ஆண்களுக்கான சன் க்ளாஸ்தான் அதிக அளவில் விற்பனை ஆகிறது'' என்றார் குணசேகரன்.

கண் மருத்துவர் வசுமதி வேதாந்தம், சன் க்ளாஸ் வாங்குவதற்கு முன் பொது மக்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயங்கள் குறித்துச் சொல்கிறார். ''ஒரு கூலிங் க்ளாஸ் வாங்குவதற்கு முன் அதில் நூறு சதவிகிதம் UV protection லேபிள் உள்ளதா என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அது இல்லாத கூலிங் க்ளாஸ்களைத் தவிர்த்தல் நல்லது. அதைப் போலவே, ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக கூலிங் க்ளாஸ்கள் வைத்திருக்க வேண்டும். இதனால், தொற்றுப் பரவாது! பரம்பரைக் கண் நோய் உள்ளவர்கள் அல்லது, கலர் விஷன் என்று சொல்லக்கூடிய குறைபாடு உள்ளவர்கள், கண் மருத்துவரின் ஆலோசனை இல்லாமல் கூலிங் க்ளாஸ் வாங்கக் கூடாது,'' என்கிறார்.

★ குணசேகரன்





நாடாளுமன்ற நடவடிக்கைகளில் நமது தமிழ் நாட்டு உறுப்பினர்களின் பங்களிப்பு எப்படியிருக்கிறது? நடந்து முடிந்த பட்ஜெட் தொடரில், எல்லா நாட்களும் கலந்துகொண்டு 109 கேள்விகள் கேட்டு, பதினொரு முறை விவாதங்களில் பங்கு பெற்று சபாஷ் பெறுபவர், நெல்லை பாராளுமன்ற காங்கிரஸ் உறுப்பினர் எஸ்.எஸ்.ராமசுப்பு. தென்காசி இந்திய கம்யூனிஸ்ட் உறுப்பினர் லிங்கமும், வடசென்னை தி.மு.க. உறுப்பினர் டி.கே.எஸ். இளங்கோவனும், மக்களவையில் எல்லா நாளும் ஆஜர். இந்த வரிசையில் அதிர்ச்சியளிப்பவர் திருமாவளவன். அவருடைய வருகை பதினான்கு சதவிகிதம்தான்! ஒரே ஒரு கேள்வியைத்தான் கேட்டிருக்கிறார். தமிழகம் - பாண்டிச்சேரியைச் சேர்ந்த மற்ற உறுப்பினர்களின் பங்களிப்பும் வருகையும் மிக மிகக் குறைவு.

''அசத்திட்டீங்க'' என்று ராமசுப்புவைப் பாராட்டிவிட்டு விவாதங்களில், ''என்ன தான் பேசினீங்க'' என்று கொக்கியைப் போட்டோம்.

மௌனம் காத்த திருமா!



★ தமிழுக்கு முன்னேற்பாடுகள்...

''நான் பாராளுமன்றத்துக்குத் தேர்வானது இதுவே முதல் முறை. ஜாம்பவான்கள் இருக்கும் சபையில் நாம் ஜொலிச்சிட முடியுமா? என்ற தயக்கம் இருந்தது. ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் தான் முதலில் பேசினேன். காஷ்மீர் முதல் குமரி வரை தேசிய நெடுஞ்சாலைகள் எப்படி இந்தியாவை இணைக்கிறதோ, அதேபோன்று தேசிய ஆறு ஒன்றை செயற்கையாக வெட்ட வேண்டும். அந்த ஆற்றில் ஏற்கெனவே இருக்கும் ஆறுகளின் உபரித் தண்ணீரையும், வெள்ளக் காலங்களில் கடலில் கலக்கும் தண்ணீரையும் திருப்பிவிட வேண்டும். இப்படிச் செய்தால், மாநிலங்களில் எந்த எதிர்ப்பும் இருக்காது என்றேன். மிக நல்ல வரவேற்பு. காய்கறி பயிர் செய்யும் நமது விவசாயிகளுக்கு, குறைந்த பட்ச ஆதார விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்தேன். நாடு முழுவதும் உள்ள மாநிலங்களில் மின் உற்பத்தி, பயன்பாடு, பற்றாக் குறை குறித்த கேள்விக்குக் கிடைத்த பதில், நமது நிலையை உணர்த்தியது. சுற்றுச்சூழலைக் காப்பதற்கு நாடு முழுவதும் ஒரே தரத்திலான பிளாஸ்டிக் கப்புகளைத் தயாரிக்க வேண்டும் என்பதும் எனது மற்றொரு வேண்டுகோள்'' என்று சொல்லும் ராமசுப்பு, வங்கி ஊழியராக இருந்தவர். ஜி.கே.மூப்பனாருடன் நெருக்கமாக இருந்த காங்கிரஸ் குடும்பம். ''தொகுதியில் நாங்குனேரி சிறப்புப் பொருளாதார மண்டலம் விரைந்து செயல்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினோம். மதுரை - குமரி இரட்டை ரயில் பாதை அவசர, அவசி

யத் தேவை என்பதையும் பேசினேன்'' என்னும் ராமசுப்புவுக்குக் கொஞ்சம் ஹிந்தியும் தெரியும். ''இவ்வளவு பிரச்னைகளை எடுத்துப் பேச முடிகிறது என்றால், அதற்கு ஊக்கம் கொடுத்தவர்கள் நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர்கள் நாராயணசாமியும் பன்சலும்தான்,'' என்கிறார்.

''எனக்கு வாய்ப்பு கொடுத்தால், தமிழகம் மற்றும் ஈழப் பிரச்னைகளை மக்களவையில் எடுத்து வைத்து தீர்வு காண்பேன்'' என்ற தொல்.திருமாவளவனின் பாராளுமன்ற பங்களிப்பு இவ்வளவு பலவீனமாக அமைந்தது ஏன்?



* நதி கோரிக்கை - எஸ்.எஸ்.ராமசுப்பு

''இந்த ஒரு வருட காலத்தில், நான் ஐந்து முறை பேசியிருக்கிறேன். ஆங்கிலத்தில் இரண்டு முறை, தமிழில் மூன்று முறை. முதல் பேச்சே ஈழப் பிரச்னைதான். தமிழர்களை அழித்தொழித்த இலங்கை அரசுக்கு, இந்திய அரசு செய்த உதவிகள் என்ன என்று கொள்கை அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினேன். தாழ்த்தப்பட்டவர்களையும் அரவணைத்து ஒருங்கிணைந்த வளர்ச்சி என்று சொல்லும் பிரதமர், முதலில் 'ஊர், சேரி' என்று தனித்தனியாகப் பிரிந்து கிடப்பதை ஒன்று படுத்தட்டும் என்றேன். கோதாவரி - கிருஷ்ணா படுகை இயற்கை எரி வாயுவை தமிழ்நாட்டுக்குக் கொடுக்க வேண்டும்; விழுப்புரம் - மயிலாடுதுறை அகல ரயில் பாதையை விரைவு படுத்த வேண்டும் என்பதெல்லாம் என் சென்ற வருடப் பேச்சுக்களில் இடம் பெற்றவை.

நாடாளுமன்றத்தில் உள்ள நடைமுறைகள் காரணமாக, என்னைப் போன்ற ஒற்றை உறுப்பினர் கட்சிக்குப் பேச வாய்ப்பு கிடைப்பது அபூர்வமாகவே இருக்கிறது. அதுவும் மூன்று நிமிடம் கொடுக்கிறார்கள். அதிலும் தமிழில் பேச நிறைய முன்னேற்பாடுகள் செய்ய வேண்டும். டிசம்பரிலிருந்து, பட்ஜெட் தொடர் முடியும் வரை நான் மக்களவைக்குச் சென்ற நாட்கள் குறைந்து போனதில் எனக்கும் வருத்தம். ஆனால், என் தந்தை உடல்நலமில்லாமல் போனதே அதற்குக் காரணம். பலமுறை அவர் ஆபத்தான கட்டங்களை அடைந்ததால், நான் அருகிலேயே இருக்க வேண்டியதாயிற்று. இன்னமும் அவர் மருத்துவமனையில்தான் இருக்கிறார். அப்படியிருந்தும், நான் தில்லி சென்ற பல நாட்களில் பல்வேறு பிரச்னைகள் காரணமாக அவை ஒத்தி வைக்கப்பட்டது. நான் போகாத நாட்களில் அவையில் நடப்பதை கவனித்துக் கொண்டிருக்கிறேன். மற்றபடி மௌனம் காக்க வேண்டிய அவசியம் இல்லை,'' என்கிறார் திருமாவளவன்.

- ப்ரியன்



இந்திய கிரிக்கெட் அணி 20-20 உலகக்கோப்பை ஆட்டத்தில் மிக மோசமாகத் தோற்றுப்போய் வெளியேறிய தினத்தில், டொபலோவைத் தோற்கடித்து நான்காவது முறையாக உலக சாம்பியன் ஆனார் விஸ்வநாதன் ஆனந்த். விளையாட்டு ரசிகர்களுக்கு கிரிக்கெட்டால் உண்டான வருத்தமும் கோபமும் ஆனந்தின் வெற்றியால் மறக்கடிக்கப்பட்ட நாள் அது.

உலக சாம்பியன்ஷிப் போட்டி ஆரம்பிப்பதற்கு முன்னால், ஆனந்துக்குப் பல சங்கடங்கள் ஏற்பட்டன. ஐஸ்லாந்து நாட்டில் எரிமலை வெடித்து உண்டான எரிமலை சாம்பலால் விமானங்கள் ரத்தாகி, ஆனந்தால் குறித்த நாளில் போட்டி நடைபெறும் பல்கேரியாவுக்குச் செல்ல முடியவில்லை. 40 மணி நேரம் சாலை வழியில் பயணம் செய்து, ஆட்டம் நடைபெறும் சோஃபியாவுக்கு வந்தடைந்தார் ஆனந்த். இந்த அலைச்சலில் ஆடியதால் முதல் ஆட்டத்தில் தோல்வி அடைந்தார்.

போட்டி தொடங்குவதற்கு முன்பு, 'நான் தான் நிச்சயம் ஜெயிப்பேன். ஏனென்றால் ஆனந்தை விடவும் ஐந்து வயது இளையவன்' என்று பேட்டிகள் மூலம் ஆனந்துக்குத் தாக்குதல் தொடுத்தார் டொபலோவ். மூன்றாவது ஆட்ட முடிவில், சம்பிரதாய கை குலுக்கலையும் அவர் தவிர்த்தார். எரிமலை சாம்பலினால் உண்டான தடங்கல்கள், டொபலோவின் திமிரான நடவடிக்கைகள், முதல் தோல்வி என்று போட்டி ஆரம்பத்தில் அழுத்தம் கொடுக்கப் பல விஷயங்கள் இருந்தும், ஆனந்த் நிதானம் தவறாமல் இருந்தார். கூடுதல் வயதும் அனுபவமும் அந்தச் சமயங்களில் ஆனந்துக்குக் கை கொடுத்தன.

11வது ஆட்ட முடிவில் ஆனந்தும் டொபலோவும் சமநிலையில் இருந்தார்கள். இறுதி 12-வது ஆட்டத்தில் டொபலோவுக்கு வெள்ளைக் காய். எனவே, செஸ் விமர்சகர்கள் டொபலோவின் வெற்றியை எதிர்பார்த்தார்கள். ஆனால், அந்த ஆட்டத்தில் டொபலோவ் ஆடிய தவறான நகர்த்தல்களைச் சாமர்த்தியமாகப் பயன்படுத்தி ஜெயித்தார் ஆனந்த். 'என் வாழ்க்கையில் நான் ஆடிய கடுமையான ஆட்டம் இதுதான்' என்றார் இறுதியில். உலக சாம்பியன்ஷிப் போட்டியில் வெற்றி பெற்ற ஆனந்துக்குக் கிடைத்த பரிசுத்தொகை, ஏழே கால் கோடி. நாக் அவுட், ரவுண்ட் ராபின், நேருக்கு நேர் என்கிற செஸ்ஸின் மூன்று வடிவிலான போட்டிகளிலும், உலக சாம்பியன் பட்டத்தை வென்ற ஒரே வீரர் ஆனந்த் என்பது குறிப்பிடத்தக்கது.

பலசமயங்களில் செஸ் ஆட்டம், முப்பது நகர்த்தலுக்குள் டிரா ஆகிவிடும். ஆனால் பல்கேரியா விதிமுறைப்படி, ஒரே மாதிரியான மூன்று தொடர் நகர்த்தலுக்குப் பிறகே டிராவுக்குச் சம்மதிக்க வேண்டும். இதனால் இந்தப் போட்டியின் ஆட்டங்கள் பல மணி நேரங்கள் கடந்து, 60 நகர்த்தல்கள்வரை சென்று, செஸ் ஆர்வலர்களுக்கு 'எண்ட் கேம்' எனப்படுகிற இறுதிக்கட்ட ஆட்ட நுணுக்கத்தைக்

கற்றுத்தரும்படி அமைந்தன.

40 மணி நேர சாலைவழிப் பயணம் மேற்கொண்டும், அது குறித்து ஆனந்த் எந்தவொரு கூப் பாடும் போடவில்லை. அதுதானே முதல் தோல்விக்குக் காரணம் என்று கேட்டால், திட்டவட்டமாக மறுத்துவிடுகிறார். ஒரு விளை யாட்டு வீரர் தன் தோல்விகளுக்குச் சாக்குபோக்கு சொல்லித் தப்பிக்கக் கூடாது என்பது அவருடைய கொள்கை. எப்போதும் தன் எதிரி கள்மீது அதிக மரியாதை வைத் துத்தான் மற்றவர்களிடம் பேசுவார். மற்றும் செஸ்ஸுக்கு வெளியே அவர் கவனம் சென்றது கிடையாது. பார்ட்டிகள், பெண்களுடனான சகவாசம், சர்ச்சைப் பேட்டிகள் என்று எந்த வளையத்துக்குள்ளும் அவர் விழுந்தது இல்லை. இந்திய கிரிக்கெட் வீரர்கள் ஆனந்திடம் இருந்து கற்றுக்கொள்ளவேண்டியது நிறைய இருக்கிறது.

ஆனந்துக்கு செஸ்ஸை அறி முகம் செய்துவைத்து அவரைச் சாத னையாளராக்கி அழகு பார்த்ததில் அவர் அம்மா சுசிலா விஸ்வ நாதனுக்கு நிறையப் பங்கிருக்கிறது. இன்றைக்கும், ஆனந்தின் ஆட்டங் களைத் தவறாமல் இணையம் வழி யாக லைவாக கவனித்து வருகிறார். தமிழகத்தின் பொக்கிஷமான ஆனந்தின் வெற்றி குறித்து அவர் சொல்வது - 'யார் வேண்டு மானாலும் சிறந்த விளையாட்டு வீரராக ஆகலாம். ஆனால் என் மகன் எல்லோரும் விரும்பும் பிள்ளையாக இருப்பதே எனக்குக் கூடுதல் சந்தோஷத்தைத் தருகிறது.'

- ச.ந. கண்ணன்



● **கே.தெய்வசிகாமணி, சென்னை-5**

? எம்.எல்.ஏக்கள் தொகுதி மேம்பாட்டு நிதியை ஒன்றே முக்கால் கோடி ரூபாயாக உயர்த்தியுள்ளாரே முதல்வர்?

! அதுமட்டுமா? அவர்களுக்கு வீடு கட்டிக் கொள்ள மனைப்பட்டா வேறு வழங்கியுள்ளார்! சமீபத்தில் பிரிட்டனில் கூட்டணி ஆட்சி உருவானதும் முதல் காரியமாக, அமைச்சர்கள், எம்.பிக்கள் சம்பளம் குறைக்கப்பட்டது! ஓராண்டு ஊதியம் நிலுவையில் வைக்கப்பட்டது! இனி தார்மிக பலத்துடன் வேறு பல சிக்கன நடவடிக்கைகள் எடுக்கப்படும்! ஹூம், அது பிரிட்டன்; இது இந்தியா!

● **அ.அப்துல் காதர், சென்னை-45**

? "மக்கள் பணி செய்யவே தி.மு.க.வில் சேர்ந்துள்ளேன்" என்ற குஷ்புவின் ஸ்டேட்மெண்ட் பற்றி...?

! நவீன அரசியல் அரிச்சுவடியைக் கற்றறிந்திருக்கிறார். எல்.கே.ஜியில் பாஸ்!

● **எஸ்.கருணையானந்தம், உசிலம்பட்டி**

? பணத்துக்காக ஆடியபோது காட்டிய வேகமும் விறுவிறுப்பும் நாட்டுக்காக ஆடியபோது நழுவியது ஏனோ?

! அளவுக்கு அதிகமான கிரிக்கெட்; அளவுக்கு அதிகமான பார்ட்டிகள்; அளவுக்கு அதிகமான தொலைதூரப் பயணங்கள்; மைதானத்துக்கு உள்ளேயும் வெளியேயும் காப்டனுடைய அளவுக்குக் குறைவான வழிகாட்டல்கள். பிரதான காரணம், பணமல்ல.

● **எம்.சரவணன், மின்னல்** ★

? நிர்வாக வசதிக்காக மாவட்டங்களைப் பிரித்தல், தாலுகாவைப் பிரித்தல், புதிய ஆட்களை அவற்றில் நியமித்தல், கம்ப்யூட்டர் வசதி - இத்தனையும் இருந்தும் பல துறைகளில் பணி சுணக்கம் நீடிப்பது எதனால்...?

! பிரிப்பது சுணக்கத்தை ஒழிக்க அல்ல; ஒன்றுக்கு இரண்டான இடங்களில் சுரண்டுவதைச் சுலபமாக்க என அறிக!

● **ஆர்.செந்தில் முருகன், பெண்ணாடம்**

? திருமணத்துக்கு முன் பாலுறவு - சரியா? தவறா?

★ சாணக்கியம் அவசியம்

தராசு



நீங்கள் கேட்டவை

! 02.05.2010 இதழில் இந்திரா பார்த்தசாரதி கட்டுரை படிக்கவும்: **கற்பு எனப்படுவது யாதெனில்...?**

● **ஜி.மாரியப்பன், சின்னமனூர்**

? இளைஞர் காங்கிரஸில் கோஷ்டிப் பூசல்களே இருக்கக்கூடாது என கட்டளை போட்டுள்ளாரே ராகுல் காந்தி...?

! உட்கட்சி ஜனநாயகம் செயல்பட்டால் கோஷ்டிப் பூசல்கள் மறைந்துவிடும் என்கிற பொதுவிதியைக் கூடப் பொய்யாக்கும் திறமை தமிழக காங்கிரஸுக்கு உண்டு என்பதை இப்போதுதான் உணர்ந்திருக்கிறார் ராகுல்!

● மு.பெரியசாமி, விட்டுக்கட்டி

? ''கூட்டணிக்குத் தயார்!'' என்று தே.மு.தி.க. அறிவித்தும், எந்தக் கட்சியும் கூட்டணிக்கு நெருங்கி வரவில்லையே?

! தேர்தல் நெருங்கும் போது கூட்டணிக் கட்சிகளைத் தேர்வு செய்யும் நிலைமை அவருக்கு உருவாகும். அப்போது அவர் காய்களைச் சாணக்கியத்துடன் நகர்த்துகிறாரா என்பதே முக்கியம்.

● டி.முருகேசன், திருவாரூர்

? ''குடோன்கள் நிரம்பி வழிகின்ற நிலையில், உணவுத் தானியங்களை எப்படிச் சேமித்து வைப்பது என்பதே எனக்குக் கவலையாக இருக்கிறது'' என்கிறாரே சரத் பவார்?

! ஒரு பக்கம், உணவு உற்பத்தி அதிகரிக்க, சேமிக்கப் போதிய கிடங்குகள் இல்லை! இன்னொரு பக்கமோ, சரியான சேமிப்பு முறை இல்லாததால் ஏராள தானியங்கள் பாழ்; கப்பல் கப்பலாக உணவுத் தானியங்கள் இறக்குமதி; மூன்று ஆண்டுகளில் 3450 விவசாயிகள் தற்கொலை! பாவம் பவார்! குழப்பத்தில் சிண்டைப் பிய்த்துக் கொள்ளக்கூட அவரால் முடியாது!

● **என்.காளிதாஸ், சிதம்பரம்**

? இந்தியாவில் நர்ஸ்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என அமைச்சர் குலாம் நபி ஆசாத் தெரிவித்துள்ளாரே?

! நர்ஸிங் படித்தவர்கள் வெளிநாடுகளில் கூடுதல் சம்பளத்துக்கு வேலை பார்க்கப் போவதால் இந்நிலை. அரசு மருத்துவமனைகளில் நர்ஸ்களின் ஊதிய நிர்ணயத்தை மேம்படுத்தலாம். இதைவிடக்



* கசக்கும் உண்மை!



* விளம்பர விரயம்!



* பலவீன வழிகாட்டல்



* எல்.கே.ஜி. பாஸ்!

செம்மொழி மாநாடு பாடல் எப்படி?

கலவரம் தரும் செய்தி, அரசு மருத்துவமனைகளில் துப்புரவுப் பணிக்கு ஆட்கள் கிடைக்காததால் அசுத்தம் பெருகுகிறது என்பதே!

● **கு.அருணாசலம், தென்காசி** ❑

? கடந்த மூன்றாண்டுகளில் உ.பி.யில் பகுஜன் சமாஜ் கட்சி அரசின் சாதனைகளை தமிழக தினசரி களில் விளம்பரம் செய்திருப்பது பற்றி...?

! மத்திய - மாநில அரசுகள் விளம்பரப் போட்டியில் மக்களின் வரிப்பணத்தை வாரி இறைக்க, சில நாளிதழ்கள் காட்டிலே செம மழை! குற்றவாளி மாயாவதி மட்டுமல்ல... மெய்யான முன்னேற்றத்துக்கு விளம்பரம் தேவையில்லை. மக்கள் அதைத் தாங்களாகவே உணர்வார்கள்.



✱ உயர்த்திய நிதி!



✱ அதைவிட அபாயம்...!

❑ **ரூ.150 பரிசு பெறுபவர்: கு.அருணாசலம், தென்காசி**

✱ **ரூ. 75 பரிசு பெறுபவர் எம்.சரவணன், மின்னல்**

● **த.சத்தியநாராயணன், அயன்புரம்**

? கலைஞர் எழுதிய செம்மொழி மாநாடு பாடல் எப்படி...?

! என்னதான் ஹிந்து பத்திரிகை முதல் பக்கத்தில் முதல் செய்தியாக நாலு பத்தியில் புகைப்படத்துடன் வெளியிட்டாலும், கலைஞரே கூறியதுபோல், அது செம்மொழி மாநாட்டைப் பிரபலப்படுத்தும். அதன் பிறகு...? கேள்விக்குறிதான்.

● **பவானி கிருஷ்ணா, பெங்களூரு**

? அ.தி.மு.க.வின் நெருங்கிய தோழமைக் கட்சியாக இருந்த காங்கிரஸ், 1986-ல் மேலவையைக் கலைப்பதற்கான தீர்மானத்தை ஆதரித்தது. இன்றோ, தி.மு.க. வுடன் நெருங்கியிருப்பதால், மேலவையைத் திரும்பி நிறுவும் தீர்மானத்தை ஆதரிக்கிறது. காங்கிரஸுக்கு என்று சுயமாக எந்தக் கொள்கையும் கிடையாதா?

! நேற்றைய நிலையிலிருந்து இன்று மாறுபடுவது தவறல்ல. அது தவறைத் திருத்திக் கொள்வதாக இருந்தால் வரவேற்கப்பட வேண்டியதே. அறிவு வளர்ச்சியின் அடையாளம். ஆனால், தமிழக காங்கிரஸின் நிலைப்பாடு இப்படிப்பட்டதாகத் தோன்றவில்லை. தோள் கொடுத்தால், அதில் சவாரி செய்பவரின் கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டியதுதான்.

● **என்.வி.ரமணி, சென்னை-28**

? பத்திரிகைகளின் பணி மக்களுக்கு அறிவிப்பதா? அறிவுறுத்துவதா? அகமகிழ்வுறச் செய்வதா? அனைத்துமேவா?

! அனைத்தும்தான்; மூன்றினைக் காட்டிலும் நான்காவது முக்கிய பணி.

● **மல்லிகை மன்னன், மதுரை**

? "பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும்போது அத்வானியும் சோனியாவும் ஒருவர் மீது மற்றொருவர் அன்பு மழை பொழிவதைப் பார்க்கப் பார்க்க எனக்குப் பொறாமையாக இருக்கிறது" என்கிறாரே கருணாநிதி?

! அன்பு மழையெல்லாம் ஒன்றுமில்லை; பொது இடத்தில் காண்பிக்க வேண்டிய குறைந்தபட்ச நாகரிகம் தான். அதுகூடத் தமிழகத்தில் இல்லை எனும்போது, தமிழக மக்கள் காட்டும் பொறுமை, கருணாநிதியின் பொறாமையை விடப் பல மடங்கு உயர்ந்தது.

அருள்வாக்கு

ஆதார சக்தி



குழந்தைகளுக்குத் தாய் ஸ்தன்யபானம் பண்ணுவிக்கிற மாதிரி, லோகமாதா அத்தனை ஜீவராசிகளுக்கும், தாவரங்களுக்குங்கூட ஸூர்ய சந்திரர்களின் கிரண தாரைகளால் பாலூட்டுகிறாள். தாவரங்களுக்கும் ஜீவன் உண்டு.

'ஸூர்ய சந்திரர்களின் பிரகாசத்தால் உணவூட்டுகிறாள்: உயிரூட்டுகிறாள்' என்றால் என்ன அர்த்தம்? ஸூர்ய ரச்மியிலிருந்துதான் தாவரங்கள் ஜீவன் பெறுகின்றன என்பது தெரிந்த விஷயம். ஸூர்ய வெளிச்சமில்லாத இருட்டான இடத்தில் விதை போட்டால் செடி வராது. தாவரங்கள் நேராகத் தாங்களே ஜீவ ஸத்தை ஸூர்யனிடமிருந்து பெறுகின்றன. அதோடு நிற்காமல் பரோபகாரமாக, இப்படி நேரே ஸூர்யனிடமிருந்து ஜீவஸத்தைப் பெற முடியாத நமக்காகவும், தாவரங்களே நாம் அடுப்பு மூட்டிச் சமைக்கிற மாதிரி, ஸூர்ய உஷ்ணத்தில் அந்த ஸூர்ய சக்தியையே நமக்கு ஜீர்ணமாகிற மாதிரி ரூபத்தில் சேமித்து வைத்துக் கொள்கின்றன. 'ஸோலார் குக்கர்'! காய்கறிகளையும், அரிசி முதலான தானியங்களையும் நாம் சாப்பிடும்போது, இந்த ஸூர்ய ப்ரஸாதமான சக்திதான் நமக்கு உள்ள போய் ஜீவஸத்தைத் தருகிறது.

ஸூர்யனுடைய வெளிச்சத்திலே, ஓயாமல் ரிலீஸாகிக் கொண்டிருக்கும் சக்தி, ஸகல அணுக்களுக்குள்ளேயும் வியாபித்தும், தாவர வர்க்கத்தில் மேலே சொன்னாற்போல 'ஃபோடோஸிந்தஸிஸ்' உண்டாக்கியுந்தான் ஜீவ ப்ரபஞ்சத்தை நடத்துகிறது என்று, இப்போது ஸயன்ஸில் சொல்வதை எத்தனையோ யுகம் முந்தியே, நம்முடைய வேத சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறது. தாவரம் மாதிரியே நாமும் நேரே அந்த சக்தியைப் பெறுகிறதற்குத்தான் காயத்ரி முதலான மந்த்ரங்களைக் கொடுத்திருக்கிறது. (ஸயன்ஸுக்கும்) பல படி மேலே போய், தேஹ சக்தியோடு நிறுத்திக் கொள்ளாமல் புத்தி சக்தி, பாரமார்த்திகமான ஸாதனா சக்தி ஆகியவற்றையும் அவனிடமிருந்து க்ரஹித்துக் கொள்வதற்கு காயத்ரியைக் கொடுத்திருக்கிறது. அங்கே 'ஸவிதா', 'ஸாவித்ரி' என்று நம்மைப் பெற்றெடுத்து வாழ்வு தருகிற ப்ரியமான தாயாகவே ஸூர்ய சக்தியைச் சொல்லியிருக்கிறது. இந்த சக்தியும் ஆதி சக்தியான பராசக்தி என்ற மூலமான தாயாரின் அங்கந்தான் - பாலூட்டும் அங்கந்தான் - என்கிறார் ஆசார்யாள்.

- ஜகத்குரு காஞ்சிகாமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

சுசிலாவை, கிருஷ்ணபாரதி அங்கே எதிர்பார்க்கவில்லை. கூடவே இந்த ராஜன் மங்களூரு வேறு இருக்கிறான். சுசிலா பார்த்திருப்பாளோ? மெல்ல நழுவி கேட் பக்கம் போய் விடலாமா? வரிசையாகப் போடப்பட்டிருக்கிற நாற்காலிகளில் கடைசியில் உட்கார்ந்தால், அங்கிருந்து பார்க்க சுசிலாவுக்குத் தெரியாது. அவர்களுக்குள் பேச்சு மும்முரமாக நடைபெறுகிறது. பிரேமாவைப் பற்றி ஒன்றும் பிரச்னையில்லை. இந்தச் சுசிலாவும், ராஜன் மங்களூரும்தான். ராஜன் மங்களூரு பேசியே கொன்றுவிடுவான். எதிராளி நம் பேச்சைக் கவனிக்கிறானா, இல்லையா என்பதெல்லாம் அவனுக்குத் தேவையில்லாத விஷயம். ஓய்வு ஒழிச்சல் இல்லாத பேசும் இயந்திரம் அவன். இவ்வளவு ரசனைக் குறைவானவன், இங்கிதமற்றவன் எப்படிக் கவிதையெல்லாம் எழுதுகிறான் என்று அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

சுசிலாவும் பேசுவாள்; ஆனால், அவள் எதிராளியின் முகக் குறிப்பையும் கவனிப்பாள். மற்றவர்களுக்கும் பேச வாய்ப்பளிப்பாள். ராஜன் மங்களூருவிடம் அவள் மாட்டிக் கொண்டது நல்லதுதான். நம்மைக் கவனிக்க மாட்டாள் என்று நினைத்துக் கொண்டே, தொலைவிலிருந்த இரும்பு நாற்காலியில் உட்காரப் போனான்.

''பாரதி, கிருஷ்ண பாரதி...'' என்று சுசிலாவின் குரல் கேட்டது. காதில் விழாதவன் மாதிரி இருக்க முயன்றான். அதற்குள், அவளே கூப்பிட்டுக் கொண்டே அவனிருக்கும்



உள்ளும் புறமும்

வண்ணநிலவன்



இடத்துக்கு வந்து கொண்டிருந்தாள். பிரேமாவும் அவள் பின்னால் வந்தாள். ராஜன் மங்களூரு ''ஹலோ... கிருஷ்ண பாரதி...'' என்று சொல்லிக்கொண்டே சுசீலாவுடன் வேகமாக அவனை நோக்கி வந்து கொண்டிருந்தான். தர்மசங்கடத்துடன் சிரித்து வைத்தான் கிருஷ்ண பாரதி. அவனருகே காலியாகக் கிடந்த நாற்காலியில் சுசீலா உட்கார்ந்தாள். ராஜன் மங்களூருவும், பிரேமாவும் அவர்களுக்கு எதிரே நின்று கொண்டிருந்தார்கள். பிரேமா ஒரு லேசான தயக்கத்துடன் நின்று கொண்டிருந்தாள். பிரேமாவின் இங்கிதம் கிருஷ்ண பாரதிக்குப் பிடித்தது. ராஜன் மங்களூருவை உட்காரச் சொல்லாமல், பிரேமாவைப் பார்த்து ''உட்காருங்க...'' என்றான். அவள் லேசாகச் சிரித்துக் கொண்டே ''இல்ல... பரவாயில்ல'' என்றாள்.

''என்ன, ரகசியமா படம் பார்க்க வந்துட்டீங்களா?'' என்று கேட்டாள் சுசீலா.

''என்ன ரகசியம்?'' என்றான் கிருஷ்ண பாரதி.

''அப்போ ஆபீஸ்லே மீட் பண்ணினப்போ கூட சாயந்தரம் ஷோவுக்கு வருவேன்னு சொல்லலியே...''

''ஏற்கெனவே பார்த்த படம் தானே?''

''ஏற்கெனவே பாத்திருக்கீங்களா? அதானே! பாத்திருப்பீங்க. எக்ஸலண்ட் மூவி. பெர்மானோட ஒன் ஆஃப் த பெஸ்ட் ஒர்க். எத்தனை தடவை பார்த்தாலும், பார்த்துக்கிட்டே இருக்கச் சொல்ற படம். நம்பர் ஒன் க்ளாஸிக். நான் ஆறாவது தடவையா பார்க்கிறேன். இந்தப் படம் பார்த்த இன்ஸ்பிரேஷன்லே ரெண்டு பொயட்ரி எழுதியிருக்கேன்...'' என்றான் ராஜன் மங்களூரு...

''உங்களுக்குக் கொஞ்ச நாளைக்கி இன்ஸ்பிரேஷன் வராம இருந்தா நல்லது'' என்றாள் சுசீலா. அதை கிருஷ்ணபாரதி ரசித்தான்.

''ஏன்... ஏன்...'' என்று அவசர அவசரமாகக் கேட்டான் ராஜன்.

''உங்களுக்கு எத்தனை வயசாகிறது ராஜன்?''

''முப்பத்தி ரெண்டு...''

''முப்பத்திரெண்டு வயசிலே ஒரு பத்துப் பதினாலு தொகுப்பு கொண்டு வந்துட்டீங்களே!...''

''பதினாலு இல்லே, பதினெட்டு'' என்று திருத்தினான் ராஜன் மங்களூரு.

''அதனாலேதான் சொல்றேன். உங்களுக்கு இனிமே இன்ஸ்பிரேஷனே வர வேண்டாம்... இவ்வளவு தொகுப்பு எழுதித் தமிழுக்குச் சேவை செஞ்சது போதும்.''

''பயப்படாதீங்க... இன்னொரு தொகுப்பு ப்ரஸ்லே இருக்கு'' என்று, தன் சிகரெட் கறை படிந்த முன்னம் பற்கள் தெரியச்சிரித்தான்.

''தமிழ் தாங்காதுடா சாமி...'' என்று சொல்லிச் சிரித்தாள் சுசீலா.

''தமிழ் நாட்டிலே எல்லா இலக்கியப்

பரிசும், விருதும் வாங்கிட்டேன். எப்படியாவது சாகித்ய அகாடமி வாங்கணும். அதுதான் என் ஆசை...''

''அதுவரை எழுதறதை நிறுத்த மாட்டீங்களா? அப்போ, சாகித்ய அகாடமி அட்வைஸரி போர்டிலே யார்கிட்டேயாவது பேசிப் பார்ப்போம்... அது ஒண்ணும் பெரிய சமாச்சாரம் இல்லே. என்ன பாரதி?'' என்று அவன் இடுப்பில் அடித்தாள் சுசிலா. கிருஷ்ண பாரதிக்கு மனோகரி ஞாபகம் வந்தது. ஒப்புக்குச் சிரித்து வைத்தான்.

''உங்களைப் பிடிச்ச இரண்டு இலக்கிய வி.ஐ.பி.க்கள் ஜூரிகளா வந்துட்டா, இந்த வருஷம் உங்களுக்குச் சாகித்ய அகாடமி கிடைச்ச மாதிரிதான்'' என்று மீண்டும் கிருஷ்ண பாரதியை இடித்தாள் சுசிலா. அவன் நெளிந்தான். இதை மனோகரி பார்த்தால் என்ன ஆகும்? சுசிலாவின் மண்டையில் இரும்புக் கம்பியால் மனோகரி அடிப்பதைப் போல் ஒரு கற்பனை விரிந்தது. கிருஷ்ண பாரதியின் முகம் சுருங்கியது. மொபைல் ஃபோன் அடித்தது. ஃபோனை எடுத்துப் பேசினான்.

''ஹலோ!''

''யாரு... கிருஷ்ணனா?'' என்று அப்பாவின் குரல் கேட்டது. அப்பா ஃபோனே பேச மாட்டாரே. ஆச்சரியமாக இருந்தது.

''ஆமாப்பா..''

''எங்கே இருக்கே? உடனே வீட்டுக்குப் புறப்பட்டுவா... வருண் ஸ்கூல்லே கீழே விழுந்துட்டான்டா... கையிலே ப்ராக்சர்'' என்றார் சண்முகம்.


''என்னது?... ப்ராக்சரா?...'' என்று பதறினான் கிருஷ்ண பாரதி. சுசிலா ''யாருக்கு பாரதி?...'' என்று பதற்றத்துடன் கேட்டாள். பிரேமா சுசிலாவின் அருகில் வந்து நின்று கிருஷ்ண பாரதியின் முகத்தையே பார்த்தாள். ராஜன் மங்களூரு சிகரெட்டைப் பற்ற வைத்தான்.

''ஆமா... உடனே கிளம்பிவா...'' என்றார் சண்முகம்.

''இதோ வர்றேம்பா...'' என்று ஃபோனை ஆஃப் செய்தான். ''நான் வீட்டுக்குப் போகணும்... வருண் கீழே விழுந்து ப்ராக்சர் ஆயிட்டுது'' என்று சொல்லிக்கொண்டே எழுந்தான் கிருஷ்ண பாரதி.

''பிரேமா! நீ படத்தைப் பாரு. நான் பாரதி கூடக் கௌம்பறேன்...'' என்று சுசிலாவும் புறப்பட்டாள்.

''நீ எதுக்கு சுசிலா? நான் போயிடுவேன். நீ பிரேமா கூடப் படத்தைப் பாரு...'' என்றான்



கிருஷ்ண பாரதி. ராஜன் மங்களூரு ஆழமாக இழுத்துப் புகையை ஊதிக் கொண்டிருந்தான். பிரேமா என்ன பேசுவதென்று தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தாள்.

''நோ... நோ... நானும் வர்றேன் பாரதி... கொழந்தையை நானும் பார்க்கணும்...'' என்றாள் சுசிலா.

ஏற்கெனவே வருண் கீழே

விழுந்து கையை முறித்துக் கொண்டிருக்கிறான். மனோகரிக்கு அப்பா ஃபோன் செய்திருப்பாரோ என்னவோ? சுசிலாவுடன் அவனையும் சேர்த்துப் பார்த்தால், மனோகரியின் கோபம் கட்டு மீறிப் போய் விடுமே என்று பயந்தான். காலையில் ஹிஸ்டீரியா வந்தவளைப் போல் மனோகரி கூச்ச லிட்டது ஞாபகத்துக்கு வந்தது.

தனது லொள்ளு பேச்சால் எந்தக் காலத்துக்கும் திரையில் நிற்கும் சத்யராஜ். அவ்வப்போது **ஒன்பது ரூபாய் நோட்டு, பெரியார்...** போன்ற பரீட்சார்த்த முயற்சிகளில் இறங்குவதுண்டு. இவரிடம் எவ்வளவு லொள்ளுத் தனம் உண்டோ அவ்வளவுக்கு அவ்வளவு சீரியஸ் பார்ட்டி. குரு-சிஷ்யன் படத்தில் வில்லன் போன்ற கேரக்டரில் நடித்திருக்கும் சத்யராஜுக்கு 'கலகம்' படத்திலும் ஏறக்குறைய வில்லன் ரோல்தானாம். ஹீரோ வேஷம்தான் கட்டுவேன்னு அடம்பிடிக்காமல், காலத்துக்கேற்ப மாறுவதும் சத்யராஜ் ஸ்டைல் தான் போல!

- நீலா

என்ன சொல்லி சுசிலாவைத் தடுப்பது என்று தெரியவில்லை. ஏன் இப்படி இங்கிதம் இல்லாமல் இருக்கிறாள் இந்த சுசிலா?

"வாங்கோ... கொழந்தை என்ன பாடு படறானோ?..." என்று, தன் இயல்பாகப் பேசினாள் சுசிலா. கிருஷ்ண பாரதிக்கு தலையை வலிப்பது போலிருந்தது. மனோகரிக்கு விஷயம் தெரியுமோ, என்னவோ? அப்பாவிடம் கேட்க மறந்து விட்டோமே. மொபைலை எடுத்து மனோகரி நம்பரைப் போட்டான். எங்கேஜ்ட் ஆகவே இருந்தது. மீண்டும் முயற்சித்தான். கால் போகவில்லை. எரிச்சலுடன் மொபைலை ஆஃப் செய்தான். சுசிலாவை அழைத்துக் கொண்டு போகவே முடியாது. மனோகரியால் அவளைத் தாங்க முடியாது.

"சுசிலா... எதுக்குச் சொல்றேன்னா... நான் பைக்லே வேகமா போயிடுவேன். உன்னாலே ஸ்கூட்டியிலே அவ்வளவு வேகமா வர முடியாது" என்றான் கிருஷ்ண பாரதி.

"அதெல்லாம் முடியும்... பாவம் வருண்... கேட்டதிலே இருந்தே எனக்கு மனசு ஓடலை. நீங்க வேணா முன்னாலே வேகமா போங்கோ... நான் பின்னாடியே வர்றேன். என்னாலே நிம்மதியாப் படம் பார்க்க முடியாது..."

அவளுடைய திடீர் அந்நியோன்யம் அவனுக்கு எரிச்சலைத் தந்தது. இவ்வளவு சொந்தம் பாராட்டுவதற்கு இவள் யார்? வெறும் ஸ்நேகிதி. நீ சொந்தம் பாராட்ட இதுவா நேரம்? என் மகன் மேல் உனக்கென்ன அவ்வளவு அபிமானம்? என்னைப் பாடாகப் படுத்துவதற்கென்றே என்னுடன் வீட்டுக்கு வருவேன் என்கிறாயா? பார்த்தா சொன்னது சரிதான். சுசிலாவைக் கட் பண்ணிவிட வேண்டியதுதான். இப்படி அட்டை மாதிரி ஒட்டிக் கொள்கிறாளே.

எரிச்சலுடன் மனோகரிக்கு மீண்டும் ஃபோன் போட்டான். லைன் கிடைத்தது. அவன் நம்பரைப் பார்த்ததுமே மனோகரி பேச ஆரம்பித்து விட்டாள்.

"உங்க ஃபோன் ஏன் எங்கேஜ்ட்டாவே இருக்கு... உங்களுக்கு விஷயம் தெரியுமா...? மாமா சொன்னாங்களா... எனக்கும் இப்போதான் சொன்னாங்க... சரி... சரி... உடனே வாங்க... நானும் கௌம்பிட்டேன்..." என்றாள்.

பிரேமாவிடமும், ராஜன் மங்களுருவிடமும் சொல்லிவிட்டு வெளியே நடந்தான் கிருஷ்ண பாரதி. சுசிலாவும் அவன் பின்னே சென்றாள்.

(தொடரும்)

ஃபேஷன் பிரம்மாக்கள்



ஃபேஷன் டெக்னாலஜி படிக்கும் மாணவ மாணவிகளைப் பார்த்தால் சுட்டெரிக்கும் வெயில் கூடக் கொஞ்சம் குளிர்ந்துவிடும்! அவ்வளவு ஜில்லுன்னு இருக்கு, சென்னை தரமணியில் உள்ள நேஷனல் இன்ஸ்டிட்யூட் ஆஃப் ஃபேஷன் டெக்னாலஜி.

ஸீஸனுக்கு ஏற்ற மாதிரி, தோதா ட்ரெஸ் பண்ணிக்கிட்டீங்கன்னா..., எல்லா நாளுமே ஒரே ஜில்ஜில்தான்' என ஜில்லீராகப் பேச ஆரம்பித்த வருங்கால ஃபேஷன் ப்ரும்மாக்கள் உதிர்த்த சில சம்மர் ஃபேஷன் அட்வைஸ்கள் இவை. அப்ளை பண்ணிப் பாருங்க:

''காட்டன் டீ ஷர்ட்டுக்கள், டெனிம்மால் செய்யப்பட்ட ஜீன்ஸ் மற்றும் ஷார்ட்ஸ், harem pant குறிப்பா dungarees (இது ஒரு ஸ்டைலிஷான ட்ரெஸ்) இவைதான் கோடைக்கான ஃபேஷன் ஆடைகள். இதுல எங்கள மாதிரி நாளைய ஃபேஷனை இன்றே வரவேற்கும் பெண்கள் விரும்பி அணிவது கோடு



கோடு போட்ட ஷர்ட்டும்... க்யூட் குதிரை வாலும்..!



போட்ட ஷர்ட்கள்தான். அதிலும் நல்ல ஃபுல் கை வெச்சு, பாக்கெட்ஸ் எல்லாம் வெச்சுப் போடறதுதான் இப்போ ரொம்ப ரொம்ப ஃபேஷன்... (ஒரு சீக்ரெட் என்ன தெரியுமா, தொன்றுதொட்ட காலத்திலிருந்தே ஆம்பளைங்க மாதிரி பொம்பளைங்க ட்ரெஸ் பண்ணிக்கறதும், பெண்கள் மாதிரி ஆண்கள் ட்ரெஸ் பண்ணிக்கறதும்தான் 'லேட்டஸ்ட்' ஃபேஷனா ஏற்கப்பட்டிருக்கு!'') என்கிறார் அனுபா.

சன் ஸ்க்ரீன் லோஷனா, சன் ஸ்க்ரீம் லோஷனா?

''நல்லா முகத்துக்கு சன் ஸ்க்ரீன் லோஷனைத் தாராளமா போட்டுக்கிட்டு, அவங்கவங்க இஷ்டம் போல ஷார்ட்ஸ் அல்லது லூஸ் ஃபிட்டிங் உள்ள பாட்டியாலா இல்லாட்டா குர்த்தா போட்டுக்கிட்டு சென்னை சம்மரை நல்லா என்ஜாய் பண்ணணும். அது என்ன மாயமோ புரியல, இப்படி ட்ரெஸ் பண்ணிக்கிட்டுப் போனா, சுத்தமா சூரியனே உரைக்கறதில்லப்பா.. காலேஜ்லாம் வேற லீவு விட்டுடறாங்களா! அதனால, மத்த காலேஜ் பாய்ஸ்கிட்டேயிருந்து பறந்து வர்ற கமென்ட்ஸ்களுக்கு இப்போ லீவு...'' என்று கண்சிமிட்டுகிறார் தீபா.

''சம்மர்ல கலர் தேர்ந்தெடுப்பது என்பதும் ரொம்ப ரொம்ப முக்கியம். மஞ்சள், வெள்ளை, பச்சை இப்படி கண்ணுக்கு மைல்டா இருக்குற கலர்ஸ்லதான் ட்ரெஸ் பண்ணிக்கணும். சித்திரை, வைகாசிலேயே ஏதோ அம்மனுக்குக் கூழ் ஊத்த கிளம்பிட்டா மாதிரி சிவப்பு, ஆரஞ்சு, கறுப்பு, பளிச் ப்ளூ, அடிக்கற பிரவுன் கலர்ல எல்லாம் ட்ரெஸ் பண்ணிக்கிட்டா, ரோட்ல தேமேன்னு போய்க்கிட்டு இருக்குற மாட்டையும், வீட்டுக்குள்ளே கூப்பிட வெச்சிடும்'' மிரட்டுகிறார் கவிதா.

வாவ் குதிரை வால்ஸ்?

''யெஸ்... சம்மர் வந்தவுடனேயே நீங்க செய்ய வேண்டியது இதுதான் கேர்ள்ஸ்... உங்க ஹேரைத் தூக்கி கட்டி, ஒரு க்யூட்டான குதிரை வால் போட்டுக்குங்க. கலர்ஃபுல்லான ரப்பர் பேண்ட் ஸும் சேர்த்துக் கட்டிடுங்க. ஓ கே வா.. ''பையன்களுக்கு?'' என அடுத்த கேள்வி நீங்க கேட்பதற்கு முன், பாய்ஸ், உங்க ஹேரை ஷார்ட்டாக கட் பண்ணிடுங்க... தொப்பி, தொப்பி... அது ரொம்ப முக்கியம்'' என்று டிப்ஸ் தருகிறார் சிமி.

அட்டைப்படம் : **ஸ்ரீஹரி**

மேஷம்: நன்மைகள் வந்து தாலாட்டும் வாரம். வீடு/மனை வாங்கத் தகுந்த காலம். சிலருக்குத் திருமணம் நடக்கும். இல்வாழ்க்கை நன்றாக இருக்கும். கடன் சுமை தீரும். புதிய தொழில் தொடங்கினால், வெற்றி வந்து சேரும். சிலருக்குப் பதவி உயர்வு வாய்ப்புகள் கிடைக்கும். வெளியூரிலிருந்து நற்செய்திகள் கிடைக்கும்.

ரிஷபம்:
முயற்சிகள் வெற்றிபெறும் வாரம். வேலைப்பளு அதிகரித்தாலும், முடிவில் நன்மைதான். குடும்பத்தில் விட்டுக் கொடுத்தல் நல்லது. திருமணத் தடை ஏற்பட்டுப் பின் கைகூடும். எல்லா விஷயங்களிலும் முன்னெச்சரிக்கை இருந்தால், நல்லன நிறைவேறும். கடவுள் வழிபாடு கைகொடுக்கும்.

23.05.2010 முதல்

சிம்மம்: கொஞ்சம் தொய்வான பலன்கள் கிட்டும் வாரம். உடல்நலத்தில் கவனம் தேவை. பணவரவு தாமதமாகலாம். சிலருக்கு உத்யோக இடமாற்றம் உண்டு. சிலபேர் வீடு மாற்றக்கூடும். சிலருக்கு, வியாபாரக் கூட்டாளிகள் விலகும் சூழல் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் இருந்தாலும், கடவுள் வழிபாட்டால் விலகக் கூடும்.

கன்னி: தடைகள் விலகித் தெம்பு கிடைக்கும் வாரம். சிலருக்குத் திருமணத் தடைகள் விலகி, நல்லது நடக்கும். எதிர்ப்புச் சக்திகள் விலகிடும். மனஉளைச்சல் நீங்கும். கடன் சுமை நீங்கும். சிலருக்குத் திடீர் பணவரவும் உண்டு. வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். சிலருக்குப் புதிய பணி கிடைக்கும் வாய்ப்பு வரும்.

நடக்குமென்பார்; நடக்கும்

மிதுனம்:
நினைப்பது நிறைவேறும் வாரம். சுப காரியங்கள் நிறைவேறும் காலம். பணத் தட்டுப்பாடு நீங்கும். தொழிலில் சாதிப்பீர்கள். வெளியூரில் இருந்து இனிப்பான தகவல்கள் வரும். குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். சிலருக்குப் பதவி உயர்வு கிட்டும். கடன் சுமைகள் பறந்தோடும். திடீர் வரவுகள் உண்டு.

கடகம்:
நல்லதே நடக்கும் வாரம். தடைபட்ட காரியங்கள் நிறைவேறும். சிலருக்குப் பணியிட மாற்றமுண்டு. நீண்ட கால நிலுவையிலிருந்த நல்ல காரியம் நடக்கும். மகிழ்ச்சி நிலவும். சுபச்செலவுகள் இருந்தாலும், பணவரவு சரளமாக வந்து ஈடுகட்டும்.

துலாம்:
ராசிதாரர்களுக்கு மேன்மையான வாரம். திடீர் பணவரவு காத்திருக்கிறது. புதிய தொழில் முயற்சிகள் வெற்றி பெறும். கடன்கள் கட்டுக்குள் இருக்கும். உறவினர்கள் மூலம் சில நன்மைகள் உண்டு. குடும்பத்தில் மகிழ்வும், வளமும் பெருகும். சிலருக்கு வரவேண்டிய நிலுவைகள் வசூலாகும். வியாபாரத்தில் வெற்றிகள் கிட்டும்.

விருச்சிகம்:
கவனமாகச் செயல்பட வேண்டிய வாரம். பிறரிடம் பேசுவதில் கவனம் தேவை. போட்டி, பொறாமை அதிகரிக்

29.05.2010 வரை

கும். கடன் பிரச்னை தீரும். மறைமுக எதிர்ப்புகள் இருக்கும். கைப்பொருள் மீது கவனம் தேவை. மனச்சஞ்சலம் போகும். பணிச்சுமை அதிகமாகும். புதிய வேலை தேடி வரும். நீண்ட காலம் முடிவு பெறாத வழக்கு வெற்றி பெறும்.

தனுசு:

மாற்றங்கள் நிகழும் வாரம். தடைபட்ட காரியங்கள் இனிதாய் நிகழும். வீடு மாற்றம் ஏற்படும். தீராத நோய் தீர்ந்துவிடும். குலதெய்வ வழிபாடு பலனளிக்கும். வரவேண்டிய நிலுவை வந்து சேரும். வேலையில் உயர்வு வரும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். உடல் நலம் சீராகும். சிலருக்குப் பணவரவும் உண்டு.

மகரம்:

மகிழ்ச்சி பொங்கும் வாரம். புதிய சொத்துக்கள் வாங்கும் யோகம் சிலருக்கு வந்து சேரும். கடன் பிரச்னைகள் விலகும். புதிய வியாபார முயற்சிகள் வெற்றியளிக்கும். பணவசதிக்குக் குறைவு இருக்காது. வாகன சௌகர்யம் ஏற்படும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். வியாபார முயற்சிகள் நல்ல பலனை அளிக்கும்.

கும்பம்:

இனிமை இதமளிக்கும் வாரம். நீண்ட காலம் முடிவுக்கு வராத காரியம் முடிவுக்கு வரும். பணவரவு உண்டு. வாக்கு வன்மை கூடும். புதிய முதலீடுகள் செய்வீர்கள். சேமிப்பு பெருகும். மனோபலம் அதிகரிக்கும். நீண்ட தூரப் பயணம் தேடி வரும். சிலருக்குப் புதிய சொத்து வந்து சேரும் யோகமுண்டு.

மீனம்:

வெற்றிகள் கிட்டும் வாரம். பூர்விகச் சொத்து விற்பனை ஆகும். சுயசொத்து சேரும். சுபகாரியம் தொடர்பாகப் பேச்சு வார்த்தை நடந்து, பலன் கிட்டும். எதிர்ப்புகள் விலகும். வியாபாரத்தில் வெற்றி உண்டு. கடன் சுமை தீரும். சிலருக்குப் புதிய வியாபார முயற்சிகள் கைகூடும். குடும்பத்தில் மகிழ்வு பொங்கும்.



தஞ்சை பரத்வாஜ்



இளமைப் பாலம் 10

'நான் சொல்வதுதான் ஒரு சொல்லின் பொருள்; அதற்கென்று வேறு பொருள் இல்லை' - லூயிஸ் கரோல்

'புரட்சி' என்ற சொல், பத்தொன்பதாம் நூற்றாண்டுக்குப் பிறகுதான் வழக்காற்றில் வந்த சொல். 'புரட்டு' என்ற வினைச் சொல்லின் அடியாக உருவான தொழிற் பெயர். பழைய மரபைப் புரட்டிப் போட்டு, நாட்டில் ஒரு புது சமூக அமைப்பை உருவாக்க, சாமான்யர்கள் கிளர்ந்து எழுதல்தான் புரட்சி.

முதன் முதலில், அரச அதிகாரத்தை எதிர்த்துச் சாமான்யர்கள் புரட்சி செய்தது ஃபிரான்ஸில், 1789-ல். பதினாறாம் லூயி மன்னன் மகுடம் இழந்து, பிறகு 1793-ல் சிரச்சேதம் செய்யப்பட்டான்.


பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில்தாம், இங்கிலாந்தில் தொழிற் புரட்சி ஏற்பட்டது. விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக, இயந்திரத் தொழில்கள் தலையெடுத்து, பண்ணை அடிமைகளாயிருந்த கீழ்த்தட்டு மக்களுக்குத் தொழிலாளர்கள் என்ற அந்தஸ்தைத் தந்தது. இங்கிலாந்து தொழில் வளர்ச்சியைக் கண்ட கார்ல் மார்க்ஸ், தொழிலாளர் புரட்சி பிரிட்டனில்தான் ஏற்படும் என்று உறுதியாக நம்பினார். ஆனால், தொழிற்துறையில் மிகவும் பின் தங்கியிருந்த ரஷ்யாவில், இப்புரட்சி ஏற்பட்டதுதான் சரித்திர நகைமுரண்(irony of history).

ஃபிரான்சிலும் சரி, ரஷ்யாவிலும் சரி, புரட்சிக்குப் பிறகு நடந்த ஆட்சி வர்க்கம் மக்களுக்கு இழைத்த கொடுமைகளைப் பார்க்கும்போது, தமிழ் லெக்ஸிகனில், 'புரட்சி'க்கு 'அராஜகம்' என்று ஒரு பொருள் கூறியிருப்பது சரியோ என்று தோன்றுகின்றது.

ஒரு ஜெர்மனியக் கவிஞன் சொன்னான்:

"The minority: became the majority
And the dead were voted out'

'சிறுபான்மையினர் பெரும்பான்மையினராகி விட்டனர், இறந்தவர்கள் வாக்கிழந்தார்கள்'. ஒரு பெரும் பாரமாய்த் துன்புறுத்தும் பண்டைய மரபு தோற்று, புதிய சிந்தனைகள் சமூக அரியணை ஏறிய போது, முன்பு சிறுபான்மையினரா



இந்திரா பார்த்தசாரதி



எது புரட்சி?

யிருந்த எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள், புரட்சிக்குப் பிறகு பெரும்பான்மையினரா கினர், வழி வழி வந்த மரபு, வழக்கிழந் தது என்பது இதன் பொருள்.

தமிழ்நாட்டில் போன நூற்றாண்டில் ஒரு சமுதாயப் புரட்சி ஏற்பட்டது. அதன் காரணமாக, சமூகத்திலிருக்கும் அனைத்துத் திறப்பட்டவரும், அது வரை சிறுபான்மை யராக இருந்த படித்தவர்களைப் போலக் கல்வி அறிவு பெறுவதினால், சமூகத்தில் அறிவு ஜீவிகள் பெரும்பான்மையராக இருப்பார்கள் என்றும், காலத்துக்கு ஒவ் வாத மரபுகள் மறைந்து விடும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் நடந்த தென்ன? பழைமை பீடத்திலிருந்து இறக் கப்பட்டு, அதில் ஒரு புதுப் பழைமை ஏறி உட்கார்ந்து கொண்டது. சமயப் பிரபுத்துவ மரபுக்குப் பதிலாக, அரசியல் பிரபுத்துவ மரபு செங்கோலோச்சுகிறது. அதிகாரத்தைப் போல் போதை தரும் லாகிரி வஸ்து எதுவுமில்லை.

போலிஷ் நாடக ஆசிரியர் விஸ்பியான்ஸ்கி என்பவர் 'செருப்புத் தைக்கிறவர்கள்' என்ற ஒரு நாடகம் எழுதியிருக்கிறார். அதில் முதல் காட்சி யில், செருப்புத் தைக்கிறவர்கள் கீழ்த்தளத் தில் உட்கார்ந்து செருப்பு தைத்துக் கொண் டிருப்பார்கள். பிரபுக்கள் மேல் தளத்தில் விருந்துண்டும், நடனமாடிக் கொண்டு மிருப்பார்கள். புரட்சி ஏற்படுகிறது.

இறுதிக் காட்சியில், செருப்புத் தைப்ப வர்கள், விருந்துண்டு, நடனமாடிக் கொண்டுமிருப்பார்கள்; பிரபுக்கள் செருப் புத் தைத்துக் கொண்டு கீழ்த்தளத்தில்

இருப்பார்கள். 'சமுதாய சமதர்மம் ஓங்குக' என்ற கோஷம் ஒலிக்கும். இதுவா சமுதாயப் புரட்சி?

சமூகத்தில் கிடைக்கக்கூடிய சில்லறைப் பலன்களை, ஒரு சிலர் பகிர்ந்து கொள்வதற்கான ஓர் இடைக்கால எழுச்சிதான், புரட்சி என்ற போர்வையை அணிந்து கொண்டது என்று சொல்ல வேண்டியிருக்கிறது. பரவலாகப் பார்க்கும்போது, பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழனுக்கும், இக்காலத் தமிழனுக்கும் கலை ரசனை, சிந்தனை வளர்ச்சியைப் பொறுத்தவரையில் ஒரு மாறுபாடும் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. சமயத்தின் பேரில் கடவுளைக் கோவிலில் வைத்துக் கும்பிட்டான். இன்று ஜனநாயகத்தின் பேரில், அரசியல் தலைவனை/ தலைவியைத் தெய்வமாக்கிக் காலில் விழுந்து வணங்குகிறான். தமிழகத்தில் ஏற்பட்டுள்ள 'சமுதாயப் புரட்சி' இவ்வளவுதான்.

சிவ வாக்கியர் பாடல் நினைவுக்கு வருகின்றது.

'ஊரிலுள்ள மனிதர்காள்! ஒரு மனதாய்க் கூடியே
தேரிலே வடத்தை விட்டுச் செம்பை வைத்து இழுக்கிறீர்'

'செம்பை' வைத்து இழுப்பதினால், சுலபமாகப் பலன்கள் கிடைக்கக் கூடுமென்றால்,ஏன் இழுக்கக்கூடாது என்பதுதான் இயல்பான மனித சுபாவம். 'உலகத்தில் அவ்வப்போது புரட்சிகள் ஏற்பட்டிருக்கின்றனவே தவிர, அதனால் மனிதனின் அடிப்படையான 'psyche'ல் இது பெரும் மாறுதல்களை ஏற்படுத்திவிடவில்லை' என்கிறார் ஆல்டர்.


பிரெஞ்சு புரட்சிக்குப் பிறகு, புரட்சியாளர்கள் ஆட்சியாளர்களாக மாறினார்களே தவிர, சமூகக் கட்டமைப்பில் எந்தப் புரட்சியும் ஏற்பட்டுவிடவில்லை. வறுமையும் பஞ்சமும் தலை விரித்தாடின.

ஒரு புரட்சி இன்னொரு புரட்சிக்கு வித்திடக்கூடும். பிரெஞ்சுப் புரட்சி அமெரிக்காவின் விடுதலைப் போருக்கு வழிவகுத்தது. ஆனால் அமெரிக்க வெள்ளையர்கள், தாங்கள் அடிமைகளாக வைத்திருந்த கறுப்பர்களுடைய விடுதலையைப் பற்றி எண்ணிப் பார்த்ததாகக் கூடத் தெரியவில்லை. அமெரிக்க விடுதலைப் போர் வீரர் ஜார்ஜ் வாஷிங்டனும், ஜெஃப்பர்ஸனும் ஏராளமான கறுப்பர்களை அடிமைகளாகத் தங்கள் பண்ணைகளிலே வைத்திருந்தார்கள். கறுப்பர்கள், 'உடைமைப் பொருள்' என்ற மனோபாவம் வெள்ளையர் அடிமனத்திலிருந்தும் அகன்றதாகத் தெரியவில்லை. ஆப்ரஹாம்லிங்கன் கூட கறுப்பர்களை விடுவித்து, அவர்களை வேறொரு இடத்தில் மொத்தமாகக் குடியேற்ற விரும்பினாரே தவிர, வெள்ளையர்களுடன் சம உரிமைகளுடன் அவர்கள் வாழவேண்டும் என்று விரும்பியதாகத் தெரியவில்லை என்று சமீப காலத்து ஆராய்ச்சிகள் கூறுகின்றன.


'ரஷ்யப் புரட்சிக்குப் பிறகு சோவியத் யூனியனில் ஸ்டாலின், முடிசூட்டிக் கொள்ளவில்லையே தவிர, czar மன்னர்களைக் காட்டிலும் கொடுமையான சர்வாதிகாரியாக இருந்தார்.' 'தொழிலாளி

* ஸ்டாலின்





* கார்ல் மார்க்ஸ்



களின் சர்வாதிகாரம்' (Dictatorship of the proletariat) என்று காரல்மார்க்ஸ் சொன்னதை, பன்மையாகக் கொள்ளாமல் ஒருமையாகக் கொண்டார் ஸ்டாலின்' என்று லூயி ஃபிஷர் எழுதுகிறார்.

மனிதனின் அடிப்படையான 'psyche' விலங்கினப் பாரம்பரியத்தின் வாரிசு. உயிர்த் தோற்றத் தொடக்கக் காலத்தில், பரிணாம விதியின்படி, உணவுப் போராட்டத்தில் வலிமையுடையது எஞ்சும் என்றிருந்தது. பிறகு அதைத் தொடர்ந்து, ஆக்ரமிப்பே தற்காப்புக் கவசம் என்று நினைக்கும் தன்மை உருவாயிற்று. அதிகாரமே சமுதாய நீதிகளையெல்லாம் நிர்ணயம் செய்யும் துலாக்கோல் என்ற கோட்பாடு, அரசியல் நியதியாகி, அரசியல்வாதிகள் சர்வாதிகாரிகளாக ஆவதற்கு அடிகோலிற்று.

சர்வாதிகாரிகள் அனைவருமே அடிப்படையில் கோழைகள். மற்றவர்கள் தங்களைக் கவிழ்த்துவிடக் கூடாதே என்ற அச்சத்தில் வாழ்கிறவர்கள். எத்தனை பேரைக் கவிழ்த்துப் பதவிக்கு வந்தோம் என்ற சொந்த வரலாறு அவர்களுக்குத் தெரியும். அதனால்தான், மற்றவர்கள் தங்களைத் துதி பாடிக்கொண்டே இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். இதுவே அவர்கள் அதிகார உணர்வுக்கு வலுவூட்டும் வைட்டமின்.



உலகமெங்குமே அதிகாரத்தையும் ஸ்தாபனத்தையும் எதிர்த்துப் புரட்சி செய்கிறோமென்று ஆயுதம் ஏந்துகிறவர்களுக்குப் புரட்சிக்குப் பின்பும் ஆயுதத்தைக் கைவிட மனது வராது. ஆயுதப் புரட்சி செய்து பதவி பெறுகின்ற அனைவருமே, பிறகு சர்வாதிகாரிகளாக மாறுகின்றனர் என்பது உலக வரலாறு. பல ஆப்பிரிக்க நாடுகளிலும், ஆசிய நாடுகளிலும் இதை நாம் கண்கூடாகப் பார்த்துக் கொண்டு வருகிறோம்.

வால்மீகி ராமாயணத்தில், (இச்செய்தி கம்ப ராமாயணத்தில் இல்லை) இராமன் வனவாசத்தின் போது, சுதீட்சண முனிவரிடமிருந்து ஆயுதம் பெற்றுக் கொள்வதைக் கண்டிக்கிறாள் சீதை. மரவுரி தரித்து, தாங்கரும் தவமேற்கொண்டு காட்டுக்கு வந்திருக்கும்போது, வன்முறையை நினைவூட்டும் ஆயுதம் எதற்காக என்பது அவள் வாதம். ஒரு முனிவன் தவம் செய்து இந்திர பதவி அடைவதை விரும்பாத இந்திரன், அந்த முனிவனுக்கு ஓர் ஆயுதம் கொடுத்த கதையை இராமனுக்குச் சொல்கின்றாள். கையிலிருக்கும் ஆயுதத்தைப் பயன்படுத்தியாக வேண்டுமென்ற வெறி வந்து, அதைப் பயன்படுத்தித் தன் தவவலிமை முழுவதையும் இழக்கிறான் அம்முனிவன். அதிகாரத்தின் குறியீடு அவ்வாயுதம்.

(அடுத்த வாரம் - மரணம்)

கத்தரியில் இது தான் ஃபேஷன்!

''வெயிலில் கசகசக்காத, துளியும் கசங்காத காகித நகைகள்தான் இப்போது பெண்கள் அதிகம் விரும்பி அணியும் அணிகலன், தெரியுமா உங்களுக்கு?' என்று ஒரு புதிரான புதுமையான கேள்வியை எழுப்புகிறார், காகிதங்களை மட்டுமே கொண்டு விதவிதமான நகைகளை வடிவமைத்து வெற்றிகரமாக விற்பனை செய்து வரும் உஷா.

''கொளுத்திப் போடும் கத்தரி வெயிலில், காகிதங்கள் கசங்கிடாதா, வியர்வை பட்டே களை இழந்து விடாதா?'' என்று கேட்டால்,

* உஷா



''கசங்கல், கலர் போகுதல், களை இழத்தல் போன்ற கதை எல்லாம் இங்கே கிடையவே கிடையாது. இவை எல்லாம் ரீ சைக்ளிங் காகிதங்கள் கொண்டு, இயற்கைச் சாயத்தைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட நகைகள். அதனால, சம்மருக்கும், சருமத்துக்கும் சேர்த்தே பாதுகாப்பானவை இவை.

இன்னொரு முக்கியமான விஷயம். எல்லாருமே இந்த 'க்ரீன் எர்த்' பற்றிப் பேசறோம், அதாவது நமது சுற்றுச் சூழலைப் பாதுகாப்பா வெச்சுக்கணும்னு. ஆனா, அதுக்கான நடவடிக்கைகளை அவ்வளவா யாரும் எடுக்கறதில்லை. இந்த ரீ சைக்ளிங் காகித நகைகள் கொஞ்சம் சுற்றுப்புறச்சூழலின் ஆரோக்கியத்துக்கும் உதவி செய்யுது. ரசாயனம் கொண்டு





தயாரிக்கப்படாததால், இவை உஷ்ணத்தைத் தாங்கக் கூடிய சக்தியை இயற்கையிலேயே கொண்டு உள்ளன.

ஐந்து வருடங்களாகச் சென்னை வாழ் மக்களோடு மெல்ல மெல்ல ஐக்கியமாகி வருகிறது இந்தக் காகித நகைகள். விலை நாற்பத்தைந்து ரூபாய் முதல் 45,000 ரூபாய் வரை. பெண்களுக்குப் பிடித்த நிறத்தில், பிடித்த வண்ணத்தில், பர்ஸைக் கடிக்காத வகையில் காகித நகைகள் கிடைப்பதால், சென்னை பெண்கள் காகித நகைகளின் விசிறிகளாக மாறி விட்டார்கள்'' என்கிறார் உஷா.

கலக்க வருதுப்பா

கல்கி

ரீடர்ஸ் கெட் ரெடி

விருதுநகர் மாவட்ட வாசகர்களே!

இப்ப உங்க ஊருக்கே வருது கல்கி டீம்...



- உடனடித் தேவை?
- உங்கள் ஊர்ப் பெருமை?
- வாட்டம் தரும் வேதனை?
- அமைதி தரும் ஆலயங்கள்?
- பெருமைப்பட வைக்கும் தலைவர்கள்?
- மனசைச் சுத்திகரிக்கும் டூரிஸ்ட் ஸ்பாட்?
- கலை இலக்கியத்தில் உங்க மாவட்டத்தின் பங்களிப்பு?
- அடிப்படைத் தேவைகள் நிறைவேறிடுச்சா... இல்லையா?

வாசகர்களே...



உங்க மாவட்டத்தைப் பத்தி நீங்க அனுப்புற தகவல்கள்தான் கல்கி விருதுநகர் மாவட்ட ஸ்பெஷல் இதழ்களுக்கு அஸ்திவாரம்!

விவரங்கள் எதிர்ப்பக்கத்துல இருக்கு!

விருதுநகர் மாவட்ட வாசகர்களே...

கெட் ரெடி! கெட் ரெடின்னேன்!

ஆமாம்! உங்கள் விருதுநகர் மாவட்டத்துக்கு 'கல்கி' டீம், நேரில் வந்து உங்கள் பிரச்னை / யோசனையை ஆராய்ந்து, உங்கள் வாய்ஸுக்கு 'கல்கி' இதழ் மூலம் மைக் கொடுக்கும்!

சில சிம்பிள் கண்டிஷன்ஸ்...

- கீழே உள்ள கூப்பனைக் கத்தரித்து ஒட்டி அனுப்பப்படும் கடிதம், படைப்புகள் மட்டுமே, பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்...
- ஒரு கடிதத்தில் 5 செய்திகள் / படைப்புகள் மட்டுமே இருக்கலாம்.
- ஒருவரே எத்தனை கடிதம், படைப்புகள் வேண்டுமானாலும் அனுப்பலாம் (தனித்தனிக் கூப்பனுடன்).
- பிரசுரமாகும் கடிதங்கள், யோசனைகள், படைப்புகளுக்குச் சன்மானங்கள் உண்டு.
- வாசகர்கள் தேர்வு செய்யும் மிகச் சிறந்த கடிதம் அல்லது யோசனை அல்லது படைப்புகளுக்குச் சிறப்புப் பரிசும் உண்டு...
- விருதுநகர் மாவட்டத்தின் பிரச்னைகளுக்கு - ☑ பெட்டிஷன் பாக்ஸ், ஆன்மிக, வியாபார, சுற்றுலாத் தலங்களின் சிறப்புக்கு - ☑ நியூஸ் ஏந்தி பவன், சிறுகதைகள், கவிதைகளுக்கு - ☑ வேடந்தாங்கல், நகைச்சுவைக்கு - ☑ ஜோக் ஃபால்ஸ்... என்றவாறு, கூப்பனில் ☑ செய்து கவரின் மேல் ஒட்டி, உங்களின் முழு முகவரி, தொலைபேசித் தொடர்பு எண் ஆகியவற்றைக் கட்டாயம் எழுதி அனுப்பவும்.

கடிதங்கள் வந்து சேர வேண்டிய கடைசித் தேதி : 18.06.2010

கலக்க வருதுப்பா கல்கி
விருதுநகர் மாவட்டம்

☐ நியூஸ் ஏந்தி பவன் ☐ பெட்டிஷன் பாக்ஸ்
☐ வேடந்தாங்கல் ☐ ஜோக் ஃபால்ஸ்

47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

நீங்க ச்சும்மா கோடு போடுங்க...
நாங்க உடனே ரோடு போடுறோம்!


கொரிய மொழி மூலம்: மோர்கன்
ஆங்கில வழி தமிழில்: ஸ்ரீநிவாஸ் பிரபு
அந்த இரவிலும் அவர்கள் நதிக்கரை வழியாக நகரின் எல்லையை அடைந்திருந்தார்கள். நகரத்திலிருந்து யாருக்கும் தெரியாமல் பதுங்கலாய் ஓடி வரவேண்டியிருந்தது. ஜீனியும், காசனும் எங்கே எனக் கேட்ட போது, அவர்கள் திரும்பி விடுவார்கள் என்று மாசூ சொன்னது நினைவுக்கு வந்தது. ஆனால் அவர்கள் வரவில்லை.
போராளியின் காதல்

பிறமொழிக் கதை 9

அவன் உடலெங்கும் களைப்பு பரவி இருந்தது. இலேசாக எழுந்த வலி கால்கள் முழுவதும் பரவி, இனி ஓர் அடி கூட எடுத்து வைக்க முடியாதபடி இருந்தது. குளிர் ஊசியாய் பரவியதால், அவர்கள் நடப்பதை நிறுத்தித் தங்கிவிட முடிவெடுத்தனர்.

வளைந்து வளர்ந்திருந்த ஒரு பருத்த மரத்தினடியில், அவன் சாய்ந்து அமர்ந்து கொண்டான். பக்கத்தில் நெருப்பு மூட்டிக்கொண்டார்கள். அந்த நெருப்பின் வெப்பம் குளிருக்கு இதமாக இருந்தது.

சிறிது நேரத்தில் அவர்கள் களைப்பால் உறங்கிப் போனார்கள். திடீரென்று அவனுக்கு விழிப்பு வந்தது. நெருப்பில் உடையும் மரக்குச்சிகளின் சப்தம் பெரிதாய்க் கேட்டது. கூடவே, உடலில் வலியும் வேகமாகப் பரவியது. பற்கள் அடித்துக்கொள்ளத் துவங்கியது. அதைத் தடுக்க, நாக்கைப் பலமாகக் கடித்துக்கொண்டான். எங்கோ தூரத்தில் ஒரு சலசலப்பு கேட்டது. யாரோ தொடர்வதாக எண்ணினான். அந்த இடத்தை விட்டு நகர முடிவு செய்தான். ஆனால் உடல் வலி அவனைத் தடுத்தது. தன் காலம் நெருங்கி வருவது போல் உணர்ந்தான். தன் இறப்பு கடைசியில் இந்த நிலையில் உலகுக்குத் தெரியக்கூடாது என்று எண்ணினான்.

அவனுக்கு வியர்வை புருவத்தை மீறி வழிந்தது. ஆனால் அந்த அசைவு அவள் மேலாடையின் அசைவாகவே இருந்தது. அவனது நகர்வு அரவம் கேட்டு அவனருகில் எழுந்து வந்தாள். அவன் தன் வலியை முகத்தில் வெளிக்காட்டாதவாறு இருந்தான். நெருப்பில் குச்சிகள் உடைபடும் சத்தம் கேட்டுக்கொண்டே இருந்தது.

''கிரேஸ்...'' அவன் மெதுவான குரலில் அவளை அழைத்தான். அந்தக் குரலில் ஒரு கனிவு இருந்தது. அவளைச் சென்று விடும்படி சொல்ல நினைத்தான், ஆனால் குரல் வரவில்லை.

கிரேஸ் அவனை ஏறிட்டபடி, ''எனக்கு இப்பத்தான் உங்களைப் புரிகிறது!'' என்றாள். நீண்ட நேரம் கழித்து அவள் பேசும் வார்த்தைகள் அவை.

கிரேஸ் தொடர்ந்தாள், ''ஏன் நீங்கள் உங்களைக் குணப்படுத்திக் கொள்ளக் கூடாது என்று எண்ணுகிறீர்கள்? நீங்கள் ஒரு போராளி! ஒரு தூய வாழ்க்கையை, உங்கள் எதிர்காலத்தை மறந்து, மற்றவர்களுக்காகவே வாழ்கிறீர்கள். ஸ்பீராவின் சுதந்திரத்துக்காகப் போராடினீர்கள். உங்கள் வாழ்க்கையைப் பற்றிக் கவலைப்படவே இல்லையே. மற்றவர்களுக்காகவே வாழ்ந்த நீங்கள் உங்களுக்காக வாழப் பயப்படுகிறீர்களோ?!'' என்றாள்.

''நா... நான்...'' என்றவன்

ஆவேசமாய்ச் சுவாசமெடுத்து, ''நான் மாத்திரம் வாழப் பயந்தவன் இல்லை கிரேஸ், பலரும்... ஏன் நீ கூட சில வயதுவரை உன் தந்தையிடம் இருக்கிறாய், பிறகு உன் வாழ்க்கையை வாழத் தீர்மானிக்கிறாய். அது விசுவாசமான வாழ்க்கையா...? பயமில்லாத வாழ்க்கையா...?''

''இருக்கலாம்...'' அவள் சிறிது நிறுத்தி, அவனருகில் குனிந்து, ''நான் இப்போது இங்கே இருக்கிறேன்!'' என்றாள்.

''காரணம், ஜீனி உன்னை என்னுடன் இருக்கச் சொன்னாள்'' என்றான். தான் அப்படிச் சொன்னது அவளுக்குப் பிடிக்கவில்லை என்பதை அவளது அசௌகர்யமான அமர்வே தெரியப்படுத்தியது. மேற்கொண்டு அது பற்றிப் பேசித் தர்மசங்கடத்தை ஏற்படுத்த விரும்பாமல் பேசாமல் இருந்தான்.

இரவின் குளிரில் காற்று மெதுவாக வீசியது. அவள் கூந்தலில் பட்டு நெளிந்தது. அவள் கூந்தலில் நுழைந்து வந்த காற்று ஆப்பிள் நறுமணத்தோடு இருந்தது.

''ஜீனி என்னை உங்களுடன் இருக்கச் சொன்னாள்; காரணம், எனக்கு உங்களுடன் இருக்க வேண்டும் என்ற ஆசை அவளுக்குத் தெரியும் அதனால்தான்'' என்றாள் கிரேஸ்.

''கிரேஸ்'' என்று சிரமப்பட்டுக் கைகளை அவள் முன் நீட்டினான். அவள் அதை ஆறுதலாகப் பற்றினாள். அவன் தன் வலியையும் மீறி அவளைத் தன்னோடு சேர்த்து அணைக்க முற்பட்டான். அவள் விலகி அவன் மார்பில் கைவைத்தாள். அவள் மேல் கவிழ்வதைத் தடுத்தாள். இருந்தும் அவன் அவள் கூந்தல் அவன் முகத்தில் பட்டு ஸ்பரிஸித்து வருடியது.

''நீ சொன்னது சரிதான். நான் எனக்காக வாழ்பவன் இல்லை, ஒருவேளை அதுவே எனக்குப் பயத்தைத் தோற்றுவித்திருக்கலாம்'' என்றான்.



அவனுக்குள் ஒரு சிறு தெம்பு பரவியது.

அவளுக்காக, அவள் அருகாமைக்காக எதையும் செய்யலாம் என்று யோசித்தான். அவள் முகத்தை மிக அருகில் பார்த்தவன், அவளின் தாடை எலும்புகளின் வளைவு ஒரு ஓவியச் சிற்பம் போல் இருப்பதாக எண்ணினான்.

''நான் குணமாக வேண்டுமென்றால்...'' என்றவன் சிறிது நிறுத்தி, ''நீ என் வாழ்க்கையில் இருக்க வேண்டும். நான் உனக்குக் கிடைக்க வேண்டும்'' என்றான். அதைக் கேட்டதும், அவள் தலை அசைவதைக் கண்டான். தன்

மன சொர்க்கத்தின் வாயில் திறப்பது போல் உணர்ந்தான். அவனுள் புது ரத்தம் வேகமாகப் பாய்ந்தது. அவளது கரங்களைப் பற்றினான். அந்த விநாடி, தன்னை விரும்பும் உயிரின் கரங்களில் செத்து விடலாமா என்று தோன்றியது. அதை உடனே மாற்றிக்கொண்டான். ஒரு போராளி சாகக் கூடாது. இந்த இருப்பை விட்டு விலக மனம் வரவில்லை அவனுக்கு.

''ஒத்துக்கொள்கிறேன்... நான் இதை எதிர்த்துப் போராடுவேன்'' என்றான்.

''அபோரன்'' என்று அவனைப் பெயர் சொல்லி அழைத்தாள் கிரேஸ்.

''என்ன?''

''நிஜமாகவே உங்களுக்கு இது தேவைதானா? அதாவது, நீங்கள் உடலுபாதையை எதிர்த்துப் போரிட்டு வென்றால், நான் உங்களுக்குப் பாரமாகிவிட மாட்டேனா... நான் ஒரு சாதாரண வீட்டுப் பெண். ஒரு விடுதியாளனின் மகள். பணக்காரியோ, பிரபலமானவளோ இல்லை. நான் உங்களுக்கு மதிப்பானவளாக இருப்பேனா? இப்போது நான் என் தந்தையின் மகள் கூடக் கிடையாது'' என்றாள்.

கிரேஸின் பயம் கலந்த வார்த்தைகள் நிஜமாவும், எதிர்பாராததாகவும் இருந்தது. அவள் தன்னைப் பற்றிக் குறைவாக மதிப்பிட்டுப் பேசியதே, அவளை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்; அவளுக்குப் பாதுகாப்பு தரவேண்டும் என்ற எண்ணத்தை அபோரனுக்குத் தோற்றுவித்தது.

''என்னைப் பார்'' என்றான்.

கிரேஸ் நிமிர்ந்து பார்த்தாள்.

''இனி நீ ஒரு விநாடி கூட மதிப்பற்றவளாக எண்ணாதே. மதிப்பு மிக்க பெண்ணைத்தான் நான் விரும்புவேன் என நினைத்தாயோ?'' என்றான்.

அவள் பேசாமல் இருந்தாள். அவர்களுக்குள் சிறிது மௌனம் நிலவியது. அவளின் மூச்சுக்காற்றுச் சப்தம் கூடப் பெரிதாகக் கேட்டது.

''கிரேஸ்... நீ சரியாகத் தானே இருக்கிறாய்?'' என்றான்.

கிரேஸ் நிமிராமல், ''நீங்கள் என்னை விரும்புகிறீர்களா?'' என்றாள்.

அதைக் கேட்டு அபோரன் சத்தமாகச் சிரித்தான்.

''இது ஒன்றும் பெரிய நகைச்சுவை இல்லையே...'' என்றாள் சற்றுக் கோபமாக.

அவன் சிரிப்பை அடக்கி, ''இல்லை, அது நகைச்சுவை இல்லை'' என்று கிரேஸின் கண்களைப் பார்த்தவன், ''நான் பேசும் ஒவ்வொரு பெண்ணிடமும்

இப்படி நெருக்கமாக இருப்பேன் என நினைத்து விட்டாய் போலும்'' என்றான்.

''இல்லை... நா...'' என்று அவசரமாக எதையோ சொல்ல வந்து சொல்லாமல் நிறுத்தினாள். அவள் முகம் சிவப்பதையும், நீலக்கண்கள் கலங்குவதையும் அபோரன் கண்டான்.

அவள் முகத்தருகில் மீண்டும் நெருங்கி, ''நீ நம்பினாலும் சரி, நம்பாவிட்டாலும் சரி... நான் உணர்வதை நீ உணர முடியாது. காரணம், அதே போல் நீ உணர்ந்தால் மட்டுமே முடியும்'' என்றான்.

''ஏன்... என்னாலும் உணர முடிகிறது'' என்றாள் அவசரமான குரலில். கிரேஸின் மனம் படபடப்பாய் இருக்கிறது என்பதை அவளது நரம்புகளின் முறுக்குகள் அபோரனுக்குக் காட்டியது.

அபோரன் பேசாமல் இருந்தான்.

அவனுள் பலவாறாக எண்ண அலைகள் ஓடியது. இந்தப் பெண் என்னை நோக்கி வருகிறாள். இவள் தகப்பன் இதற்குச் சம்மதிப்பானா? எந்தப் பெண்ணின் தகப்பன்தான் தன் மகள் ஒரு போராளியுடன் வாழச் சம்மதிப்பான்...?

அந்த மௌனத்தைக் கலைக்கும்

"நீ என்ன முடிவெடுத்தாலும் சரி, நான் உன்னை ஏற்றுக் கொள்கிறேன். உன் தந்தைக்கும் உலகுக்கும் என்னை நிரூபிப்பேன்."




விதமாக, ''நீ உன் தந்தையைப் பற்றிக் கவலைப்படுகிறாயா?'' என்றான்.

அவள் மறுப்பாய்த் தலையசைக்க, தன் விரல்களால் அவள் தாடையை உயர்த்தி, ''நீ என்ன முடிவெடுத்தாலும் சரி, நான் உன்னை ஏற்றுக்கொள்வேன். நான் இந்த உலகத்துக்கும் உன் தந்தைக்கும்கூட என்னை நிரூபிப்பேன். உனக்கு வேண்டிய அனைத்தையும் தருவேன்'' என்றான்.

அந்த வார்த்தைகளைக் கேட்டதும், கிரேஸின் முகத்தில் புன்னகை பரவியது. அபோரனை ஏறிட்டுப் பார்த்து, ''நான் உங்களை மனப்பூர்வமாக விரும்புகிறேன்'' என்றாள் மிருதுவான குரலில்.


அபோரனும் புன்னகைத்தான். இருவரது புன்னகைகளும் கலந்தன. அவளது புன்னகைக்காக இறுதி வரையில் போராட வேண்டும் என்று உறுதியெடுத்தான்.

மூட்டப்பட்டிருந்த நெருப்பில் இருந்த வெப்பம் தணிந்து, குறைந்திருந்த ஒளி இருவர் கண்களிலும் புதிதாய்ப் பரவ ஆரம்பித்தது!



நீங்களும் சாகஸம்
செய்யலாம்...
அண்டார்க்டிக்
அழகன்!
அழ.வள்ளியப்பா நினைவுச்
சிறுகதைப் போட்டி
கோகுலம்
ஜீன் 2010 விலை ரூ.8/-
குழந்தைகளின் குதூகலம்!

இனிது கோடை



அனந்தபத்மநாபன்

சமிக்ஞை விளக்கில் நொடிகள் நகர
உமிழும் புகைக்குள் அமிழும் நகரம்
தேசிய வீதியில் வண்டிகள் பறக்க
தூசி மண்டலம் அடங்குவதில்லை.
தலைக்கு மேலே வெய்யில் வெள்ளம்
உலைப்பெரு மூச்சில் நிழலும் கருகும்.
ஆயிரம் கண்களில் வியர்வைக் கண்ணீர்
வாயது கேட்கும் சொட்டுத் தண்ணீர்

குளிருட்டிகளோ உறுமுகின்றன
வெளியே வெம்மை ஏறுகின்றது.
சாலைகள் சற்றே அகலம் ஆகின
சோலைகள் ஆயிரம் சுவடு அழிந்தன
நிழலில்லாத நெடிய வீதிகள்
சுழலும் காற்றில் சுடுசாபங்கள்.
பறவைகள் தொலைந்த பட்டணத்திலே
உறவுகள் தொடரும் கட்டணத்திலே.

நன்னீர் விலையை வணிகர் சொன்னார்
தண்ணீர் குடிக்க மனம் வரவில்லை.
தேநீர்க் கடையிலோ அழுக்குத் தண்ணீர்
சிறுநீர் ஏனோ மஞ்சள் நிறத்தில்.
நிலத்தடி நீரோ கீழே விரைய
நிலத்தின் மேலே எரிமலை பொரியும்.
தெருவில் தீமிதி தினம்தினம் நிகழும்
இருந்தும் எமது நெஞ்சுரம் வளரும்.

தகிக்கும் மணலில் சுகிக்கும் காதலர்
புடைவையில் சேயைப் பொத்தும் தாயர்
காகா என்றே அழைக்கும் கனியோர்
செடிக்கும் நீரை வார்க்கும் இனியோர்
கண்ணீர் துடைக்கும் நல்லோர் வல்லோர்
வண்ணச் சிரிப்புடன் வாஞ்சை வளர்ப்போர்
இன்னும் இன்னும் இருப்பதனாலே
இனிது கோடை! கொளுத்துக பகலே!



அண்ணா கண்ணன்

படைப்பாளிகளே, வாசக எழுத்தாளர்களே! நீங்கள் அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி வந்தே விட்டது!

முதல் பரிசு - ரூ. 10,000/-
இரண்டாம் பரிசு - ரூ. 7,500/-
மூன்றாம் பரிசு - ரூ. 5,000/-

தவிர, பிரசுரத்துக்குத் தேர்வாகும் ஒவ்வொரு கதையும் ரூ.500 சன்மானம் பெறும். யார் வேண்டுமானாலும், எத்தனை கதைகள் வேண்டுமானாலும் எழுதலாம். என்றாலும், எழுதுபவர் முப்பத்தைந்து வயதுக்குட்பட்டவராகவோ அல்லது அறிமுக எழுத்தாளராகவோ இருந்தால் சிறப்புப் பரிசு உண்டு.



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி-2010

விதிமுறைகள்:

* கல்கியில் நான்கு பக்கங்களுக்கு மிகாமல் இருப்பது நல்லது.
* சொந்தக் கற்பனைதான் என்பதற்கு உறுதிமொழிக் கடிதம் வேண்டும். அது இல்லாத கதைகள் பரிசீலிக்கப்படமாட்டா.
* அறிமுக எழுத்தாளர் எனில், இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லையென்றும், போட்டி முடிவு வெளியாகும் வரை எழுதுவதில்லை என்றும் உறுதிமொழி தர வேண்டும்.
* படைப்பாளி முப்பத்தைந்து வயதுக்குட்பட்டவராக இருந்தால், அதற்கான ஏதாவதொரு அத்தாட்சி (பள்ளியிறுதிச் சான்றிதழ் போன்றவை. நகல் மட்டுமே அனுப்பவும்) கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.
* முழு வெள்ளைத்தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும்.
* தேர்வாகாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய தபால்தலைகள் ஒட்டிய அஞ்சல் உறை இணைக்கப்பட வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
* போட்டிக்கு அனுப்பும் கதையை, முடிவுகள் வெளியாகும் வரை வேறு இதழுக்கோ, இணைய தளத்துக்கோ, போட்டிக்கோ அனுப்பக்கூடாது.
* பரிசுக்குரிய கதைகளை, நடுவர் குழு பரிசீலித்துத் தேர்ந்தெடுக்கும். சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியரின் தீர்ப்பே இறுதி.
* முடிவு வெளியாகும் வரை, எவ்விதக் கடிதப் போக்குவரத்தோ, தொலைபேசி விசாரிப்புகளோ கூடாது.
* 'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி - 2010' என்று உறையின் மேல் தவறாமல் குறிப்பிட்டு, அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர், கல்கி, கல்கி பில்டிங்ஸ்,
47-NP ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032.

* **கதைகள் வந்து சேரக் கடைசித் தேதி: ஜூன் 15.**
* **போட்டி முடிவும், முதல் பரிசுக் கதையும் ஆகஸ்ட் 1 (01.08.2010) ஆண்டு மலரில் வெளியாகும்.**

படைப்பாளிகள், வாசக எழுத்தாளர்கள் அனைவரும் உற்சாகத்துடன் கலந்துகொண்டு சிறப்பிக்க அழைக்கிறோம்.

- ஆசிரியர்

எழுச்சி விதைகள்...

நூல் அறிமுகம்


நீதிபதி வி.ஆர்.கிருஷ்ண அய்யர் - பல்வேறு உலகில் என் பயணம் - தமிழில்: ராணிமைந்தன், விகடன் பிரசுரம், சென்னை-2. விலை ரூ.115.00

நீதிபதி வி.ஆர்.கிருஷ்ண அய்யர், நீதித்துறையில் முப்பது வருடங்களுக்கும் மேலாகப் பணியாற்றிய அனுபவங்களை சுவைபட விவரித்துள்ளார். இந்திரா காந்தி, அவசர கால நிலைமையைப் பிரகடனப் படுத்தியபோது, தனக்கு ஏற்பட்ட அனுபவங்களை, அளித்த தீர்ப்பைக் குறித்த விஷயங்கள் குறிப்பிடத்தக்கன. மேலும், ஆன்மிகத் தேடல் குறித்தும் தமது கருத்துகளைக் கூறியுள்ளார். இவரது சுயசரிதையை, தமிழில், அழகாக மொழிபெயர்ப்பு செய்துள்ளார் ராணிமைந்தன்.



பிசினஸ் ரகசியங்கள் - பி.சீனிவாசன், கற்பகம் புத்தகாலயம், சென்னை-17 விலை ரூ.25.00

பொதுவாக, வியாபாரம் என்பது இன்றைய உலகின் முக்கியத்துவம் பெற்ற தொழிலாயிற்று. குறிப்பாக, இந்தியாவில் வணிகம் இன்று கொடிகட்டிப் பறக்கிறது. இந்நூலாசிரியர் ஏற்கெனவே வங்கிப் பணியில் அனுபவம் பெற்றவர். இங்கே புதிதாகத் தொழில் தொடங்குவோருக்கான ஆலோசனைகளை தனக்கே உரிய நகைச்சுவை கலந்த எளிய நடையில், இந்நூலில் தொகுத்து வழங்கியுள்ளார். சட்டரீதியாகத் தொழில் தொடங்குதல், சட்டப்படிக் கணக்குகளை நிர்வகித்தல், வங்கிகளில் தொழிற்கடன் வாங்குதல் போன்ற விஷயங்கள் இதில் கூறப்பட்டுள்ளன.



தலைநிமிர்வு (கவிதைகள்) பாரதி வசந்தன், அகநாழிகை வெளியீடு, 33, மண்டபம் தெரு, மதுராந்தகம்-603 306. விலை ரூ.130.00



புதுச்சேரியைச் சேர்ந்தவர் பாரதி வசந்தன். நாவல், சிறுகதை, கட்டுரை, கவிதைகள் என்று பல்வேறு தளங்களில் இயங்கும் படைப்பாளி. குறிப்பாகத் தலித்திய இலக்கியத்தில் அதிகமான பங்களிப்பைச் செய்து வருபவர். இக் கவிதைத் தொகுப்பில், சமூகப் போராட்டங்களுக்கான எழுச்சிமிக்க விதைகள் கவிதை வடிவில் ஊன்றப்பட்டுள்ளன. சில கவிதைகளின் தாக்கத்தால், அரசின் அவதூறு வழக்குகளைச் சந்தித்துள்ளார். மக்கள் கவிஞர் இன்குலாப்பின் துள்ளலான முன்னுரையோடு, தமிழியம் சார்ந்த முன்னேற்றத்தை முன்னெடுத்துச் செல்லும் கவிதைகளின் தொகுப்பு இது. மிகவும் எளிமையான மரபு, புதுக்கவிதைகளின் வாயிலாக வாசகர்கள் புதிய அனுபவத்தைப் பெறலாம்.

– வசந்தபாரதி

வாமனதேசங்கள்

கப்பல் கால்வாய்

வட அமெரிக்கா, தென் அமெரிக்கா இரண்டையும் இணைக்கும் நிலப் பகுதியில் உள்ளது பனாமா. பனாமா என்றவுடன், பனாமா கால்வாய்தான் நினைவுக்கு வரும். உண்மைதான். பனாமாவின் பொருளாதார உயிர்த் துடிப்பே அந்தக் கால்வாய்தான். கால்வாயின் சரித்திரத்தை விடப் பனாமா நாட்டின் சரித்திரம் விசித்திரமானது!

கொலம்பஸ் 1502-ல் பனாமாவில் தன் காலடியை வைத்தார். 'இனி பனாமா ஸ்பெய்னைச் சேர்ந்தது' என்று அறிவித்தார். இத்தாலியைச் சேர்ந்த கொலம்பஸ் ஸ்பெய்னுக்கு ஆதரவாக ஏன் குரல் கொடுக்க வேண்டும். புதிய இடங்களையும், வழித் தடங்களையும் கண்டுபிடிப்பதாக அவரை நியமித்தது ஸ்பெய்ன்தான். எனவேதான் அப்படி ஓர் அறிவிப்பு. ஸ்பெய்ன் நாட்டு ராணுவமும் அங்கு வந்து சேர்ந்தது.

ஆனால், காலப்போக்கில் பனாமாவில் சுதந்திர தாகம் எழுந்தது. அதுவும் அண்டை நாடான கொலம்பியா ஸ்பெய்னிலிருந்து சுதந்திரம் பெற்றதைக் கண்டதும் இந்தத் தாகம் பெரிதானது. புரட்சி ஓங்கியது. ஒருவழியாகச் சுதந்திரம் கிடைத்தது. ஆனால், இதில் ஸ்பெயின் எதிர்பாராத ஒரு திருப்பம். அதனிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்ட பனாமா தன்னை கொலம்பியாவின் ஒரு பகுதியாக அறிவித்துக் கொண்டது.



பனாமாவின் மீது பல வல்லரசுகளுக் கும் கண். என்ன ஒரு தனித்துவம் வாய்ந்த பகுதி! வட அமெரிக்காவையும் தென் அமெரிக்காவையும் இணைக்கும் இந்தப் பகுதியில் மட்டும் ஒரு கால்வாய் வெட் டப் பட்டுவிட்டால்? ஆஹா, பசிபிக் கடலையும் அட்லாண்டிக் கடலையும் அது இணைக்குமே. அற்புதமான கடல் வழி அல்லவா இது!

கொலம்பியாவுக்குப் பயம் தோன்றி யது. எந்த வல்லரசாவது பனாமாவை ஆக்ரமித்துக் கொண்டால்? அதுவும் பிரிட் டனை நினைத்தபோது பனாமாவுக்கு மேலும் உதறல். எனவே 1846-ல் அமெரிக் காவுடன் ஓர் ஒப்பந்தம் போட்டுக் கொண் டது. இதன்படி, பனாமா பகுதியில் நடைபெறும் எல்லாவிதமான வணிகங்களுக்கும் அமெரிக்கா பாது காப்பு அளிக் கும்.

இந்த நிலப்பரப்பில் 1850-ல் ஒரு ரயில் பாதையை நிறுவ கொலம்பியா ஒப்புக் கொண்டது. இதற்காக எண்பது லட்சம் டாலர்களை அளித்தது நியூயார்க் வணிகர் கள். காரணம், இந்தப் பாதை காலப்போக் கில் பெரும் லாபம் தரும் என்று கருதிய தால்!

ஓரியந்த் நெப்போலியன் என்ப வருக்கு 1878-ல் பனாமா பகுதியில் ஒரு கால்வாயைக் கட்ட கொலம்பியா அனு மதித்தது. அவர் அந்த உரிமையை வேறொரு நிறுவனத்துக்கு விற்றுவிட்டார். அந்த நிறுவனத்துக்கு ஏற்கெனவே முன்



பனாமா 20

ஜி.எஸ்.எஸ்.

பனாமா என்ற பட்டாம்பூச்சி!

● பனாமா என்ற பெயர் எப்படி வந்தது? அந்தப் பெயர் கொண்ட மரங்களின் காரணமாக என்கிறார்கள் சிலர். வேறு சிலரோ பனாமாவில் முதல் குடியேற்றம் நிகழ்ந்தபோது அங்கு நிறைய பட்டாம் பூச்சிகள் இருந்தன என்பதால் 'நிறைய பட்டாம் பூச்சிகள்' என்று பெயரிட்டதாகச் சொல்கிறார்கள் (உள்ளூர் மொழியில் அதைப் பனாமா என்பார்கள்). மற்றும் சிலர் மாறுபடுகிறார்கள். அந்த நாட்டின் அருகிலேயே உள்ள ஒரு சிறு மீன் பிடி கிராமத்தின் பெயர் பனாமா. பனாமா என்பதால் 'நிறைய மீன்' என்று பொருளாம். ஆக எதற்கு வம்பு என்று பனாமாவில் உள்ள பள்ளிப் பாடங்களில் பனாமா என்றால் 'நிறைய மீன், மரங்கள், பட்டாம்பூச்சிகள்' என்ற விளக்கம் கிடைக்கிறது. இதெல்லாம் போதாதென்று அந்த நாட்டின் உள்ளூர்வாசிகள் 'பனாமா' (வெகு தூரத்தில் என்று பொருள்) கூறியதுதான் நாட்டின் பெயராகி விட்டது என்கிறார்கள்.

● தலைநகர் - பனாமா சிட்டி

● மொழி - ஸ்பானிஷ்

● ஜனாதிபதியின் ஆட்சி - ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்வு

● அரிசியும் பீன்ஸ் காயும் சேர்ந்த குவாசோ என்ற உணவுவகை வெகு பிரபலம்.

● கூடைப்பந்து, கால்பந்து ஆகியவை பிடித்த விளையாட்டுகள்

● முதுகெலும்பு போல் நாட்டின் மத்தியில் மலைத் தொடர்கள் காணப்படுகின்றன.


● சுமார் 500 ஆறுகள். எனினும் அகலமானவை மிகக் குறைவு.

● முக்கிய மதம் ரோமன் கத்தோலிக்கப் பிரிவு (மக்கள் தொகையில் சுமார் 80 சதவிகிதம்). அடுத்தடுத்த இடங்கள் இவான்ஜெலிகல் கிறித்தவப் பிரிவு, பஹாய் பிரிவு.



அனுபவம் இருந்தது. சூயஸ் கால்வாயை உருவாக்கிய அனுபவம். (உலகிலேயே செயற்கை முறையில் உருவாக்கப்பட்ட கால்வாய்களில் மிகப் பெரியது சூயஸ்; அடுத்தது பனாமா).

பனாமா கால்வாய் ஒருவழியாக 1882-ல் உருவாகத் தொடங்கியது. ஆனால், அது பாதி உருவாகிக் கொண்டிருக்கும்போதே, கட்டும் உரிமையைப் பெற்ற நிறுவனம் திவாலாகி விட்டது. எனவே அது 580 லட்சம் கன மீட்டர் பூமி வெட்டப்பட்ட நிலையில் இந்த உரிமையை, அப்படியே 'நியூ பனாமா கெனால் கம்பெனி' என்ற பெயரில் தொடங்கப்பட்ட மற்றொரு பிரெஞ்சு நிறுவனத்துக்கு விற்றுவிட்டது. இந்த நிறுவனமோ 'கால்வாயை உருவாக்குவது எங்கள் நோக்கமல்ல. இது ஒரு நல்ல முதலீடு. மேலும்







அதிக விலைக்கு யாருக்காவது விற்று லாபம் பார்க்கவே இந்த உரிமையை வாங்கினோம்' என்பதை விரைவிலேயே தன் செய்கையால் உணர்த்தியது.

அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி தியோடர் ரூஸ்வெல்ட்டுக்கு அந்தக் கால்வாய் கட்டும் உரிமையைப் பெற ஆசை. 'ஒரு கோடி டாலர் தருவோம். ஆண்டுதோறும் வாடகையாக இரண்டரை லட்சம் டாலர் தரவும் தயார். ஆனால் கால்வாயின் முழு உரிமையுமே எங்களுக்கு வேண்டும்' என்றது அமெரிக்கா. தொகை குறைவு என்று கருதிய கொலம்பியா ஒப்புக் கொள்ளவில்லை.

தமக்குக் கிடைக்கக்கூடிய கொழுத்த பணம் கைவிட்டுப் போய்விடுமோ என்று எண்ணிய பிரெஞ்சு நிறுவனம், பனாமா மக்களுக்குத் தூபம் போட்டது. நவம்பர் 1903-ல் கொலம்பியாவுக்கு எதிராகப் பனாமாவின் பெரும்பான்மை மக்கள் புரட்சியில் ஈடுபட்டனர். 'இனி பனாமா சுதந்திர நாடு' என்று அறிவித்தனர்.

பனாமாவை தனி நாடாக அங்கீகரித்த அமெரிக்கா, அதனுடன் மேற்படி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

இதைத் தொடர்ந்து, பனாமா கால்வாயின் முழுக் கட்டுப்பாடும் அமெரிக்காவுக்குச் சென்றது. ஆனால் இந்த நிலை மாறவேண்டும் என்று தென் அமெரிக்க நாடுகள் தொடர்ந்து குரல் கொடுத்து வந்தன. வேறுவழியின்றி 1977-ல் புதிய ஒப்பந்தம் ஒன்றுக்கு அமெரிக்கா ஒப்புக் கொண்டது. இதன்படி டிசம்பர் 31, 1999 அன்று பனாமா கால்வாயின்மீது தமக்குள்ள முழு உரிமையையும் அது பனாமாவுக்கு மாற்றித் தந்துவிட வேண்டும். அதேபோன்று 1999-ம் ஆண்டின் இறுதியில் தன் உரிமையை பனாமா நாட்டுக்கு அளித்தது.

அமெரிக்காவிடமிருந்து கிடைத்த வருமானத்தைவிட, இப்போது பனாமாவுக்கு அதிக வருமானம். பின் என்ன, 8.16 கிலோமீட்டர் நீளம் கொண்ட பனாமா கால்வாயில், தினமும் செல்லும் கப்பல்களின் எண்ணிக்கை சுமார் 15,000!

(அடுத்து - இரு வல்லரசுகள் ஆளும் நாடு)



ஏ.ஏ.ஹெச்.கே.கோரி

வலுக்கட்டாயமாய் என்னுடைய வாயைப் பிளந்து, கேக் துண்டுகளைத் திணித்தார்கள் பேரனும், பேத்தியும்.

மகனும் மருமகளும் கைதட்டல். கேக் வெட்டுவதற்கோ கைதட்டுவதற்கோ அவசியமேயில்லை.

எழுபத்தஞ்சு வயசு ஆகிவிட்டதே ஆண்டவனே. வயோதிகம் வளர்ந்து கொண்டே போகிறதே, மரணத்தை நோக்கி நான் இன்னுமொரு எட்டு எடுத்து வைத்து விட்டேனே என்று நான் விசனப்பட்டுக் கொண்டிருக்கிறபோது, இவர்கள் என்னைக் குறித்துக் குதூகலிக்கிறார்கள்.

மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவனுக்கும், எதிர்காலம் என்பது மரணம்தான் இல்லையா?

எனக்குப் பிறந்த நாள் கொண்டாடிய நம்ம மகனுக்கும் மருமகளுக்கும் இன்னும் நாற்பது வருஷமோ, நாற்பத்தஞ்சு வருஷமோ?

கேக் ஊட்டி விட்ட நம்ம பேரக் குழந்தைகளுக்கு அறுபது வருஷமோ, எழுபது வருஷமோ! ராத்திரி உறக்கம் பிடிக்கும்வரை ஒரே மரண சிந்தனையாயிருந்தது.

காலையில் வாக்கிங் கிளம்புகிற போது, கதவு திறந்திருந்த எதிர்த்த ஃப்ளாட்டுக்குள்ளேயிருந்து உற்சாகமாய் ஒரு குரல்.

''ஸார், சித்த இருங்கோ. உங்களுக்கு நேத்து பர்த்டேயாமே, சொல்லவேயில்லை?''

எதிர்த்த வீட்டுத் தாத்தா, என்னைப் போல் இன்னொரு தாத்தா.

வாக்கிங் போகிறபோது எப்போதாவது எதிர்த்தாற்போல் வருவார். சிக்கனமாய்ப் புன்னகைகளைப் பரஸ்பரம் பரிமாறிக் கொள்வதோடு சரி.

இப்போது என்னமோ, டெய்லி நாங்கள் ரெண்டு பேரும் கட்டித் தழுவி சிநேகங் கொண்டாடுகிற மாதிரி குழைகிறார்.

என்னுடைய பிறந்த நாளின் மேலே நானே வெறுப்பிலிருக்கிற போது, எதற்காக இந்த ஆளுக்கு அழைப்புக் கொடுக்க வேண்டுமாம்? என்று அலட்சியமாயிருந்த போது, அவரே எனக்கு அழைப்புக்



க்ளிப்பில்

கொடுத்தார்.

''உள்ள வாங்கோ ஸார். கம்மா வாங்கோ. உங்களுக்கு பர்த்டேன்னு உங்காத்து வாண்டு எங்காத்து வாண்டு கிட்ட சொல்லித்தாம். எழுவத்தஞ்சு வயசு ஆயிடுத்தாமே. கங்கிராட்ஸ்!'' கையைப்

பிடித்து இழுக்காத குறையாக என்னை வீட்டுக்குள் நடத்திச் சென்று சோஃபா வில் அமர்த்தினார்.

'எதுத்தாத்ல குடியிருக்கிறவன், வாக் போறச்சே பல நாள் பார்த் திருக்கான். மொகங்குடுத்துப் பேசினதே இல்லைன்னு எம் பேர்ல கோவமோ என்னமோ தெரியலை' என்று சிரித்தார்.



சேர வேண்டிய தகுதி!

''கங்க்ராட்ஸ் சொன்னதுக்கு உங்ககிட் டேயிருந்து ஒரு தாங்க்ஸ் கூட வரலை..''

இதற்கு மேலும் வாயை மூடிக் கொண்டிருக்க வேண்டாமென்று பேச முனைந்தேன்.

''என்னத்துக்கு சார் கங்ராட்ஸ்?''

''என்னத்துக்கா? எழுபத்தஞ்சு வரு ஷம் இந்த லோகத்துல வாழ்ந்து சாதனை படைச்சிருக்கேள்!''

''மரணத்தை நோக்கி ஒரு எட்டு கூடு தலா எடுத்து வக்கிறது ஒரு சாதனையா சார்?''

''அப்படிப் பார்த்தா நேக்கு எழுபத்தெட்டு வயசாறது. உங்களை விட மூணு வயசு மூத்தவன். லேஸா, உங்களை விட மூணு ஸ்டெப் முன்னாடி இருக்கேன். நா எவ்ளோ சியர்ஃபுல்லா இருக்கேன் பாருங்கோ. தட்ட வேண்டிய எடத்துல தட்டி, நீட்ட வேண்டிய எடத்துல நீட்டி, உங்கள ஒரு ஷேப்புக்குக் கொண்டு வந்துடலாம், எங்க க்ளப்புக்கு வாங்கோ.''

''உங்க க்ளப்பா? அதாவது, பிராமணர் சங்கமா?''

''சோகத்துலயும் ஒரு ஜோக் அடிச்சுட்டேளே ஸார்! நம்ப க்ளப்ல சேர்றதுக்கு மூணாவது தகுதியும் உங்களுக்கு வந்தாச்சு.''

''மூணாவது தகுதியா?''

''ஆமா. முதல் தகுதி, ஆத்துக்காரி இருக்கப்படாது. பாச்சலராயிருக்கணும். அந்தத் தகுதி உங்களுக்கு ஏற்கெனவே இருக்கு. ரெண்டாவது தகுதி, எழுவத்தஞ்சு வயசு ஆகியிருக்கணும். அந்தத் தகுதி நேத்தே ஒங்களுக்கு வந்துடுத்து. மூணாவது தகுதி, ஙேன்னு இருக்காம ஜோக் அடிச்சி மத்தவாளைச் சிரிக்கப் பண்ணணும். அதையும் இப்ப நீங்க பண்ணிட்டேள்.''

''ஐய, நா ஜோக்கெல்லாம் அடிக்க மாட்டேன் ஸார். என்னமோ வாய் தவறி ஒரு வாக்கியம் வந்துருச்சு! அதை நீங்க ஜோக்கா எடுத்துக்கிட்டீங்க. நா எப்பவும் ஙேன்னுதான் இருப்பேன்.''

''அதையுந்தான் பாத்துருவோமே. இன்னிக்கி நீங்க வரேள் நம்ம க்ளப்புக்கு. எங்க மெம்பர்ஸையெல்லாம் பாருங்கோ, பேசுங்கோ. அதுக்கப்புறமும் நீங்க ஙேன்னு இருக்க முடியறதா பாப்போம்.''

வேறே வழியே இல்லாமல் சாயங்காலம் அந்த ஆளோடு கிளம்பினேன். வழியெல்லாம் தொணதொணப்பு.

'சார், ஒங்க பேர் நேக்குத் தெரியும். எம்ப்பேர் உங்களுக்குத் தெரியுமோ தெரியாதோ. எம்ப்பேர் ஷங்கர நாராயணன். ஷார்ட்டா, ஷங்கர்' என்று ஆரம்பித்தவர், அவருடைய வாழ்க்கை வரலாற்றை, ஸ்ரீரங்கத்தில் அந்தக் காலத்தில் அவர் கிண்டலடித்த தாவணிப் பெண்கள் வருகிற அத்தியாயம் உட்பட, என் மேலே இறக்கி வைத்து விட்டுத் தன்னுடைய இந்த க்ளப்பைப் பற்றிப் ப்ரஸ்தாபித்தார்.

க்ளப்பின் பெயர் ஒய்.எம்.ஸி.ஏ.வாம்.

''ஒய்.எம்.ஸி.ஏ.?''

''யெஸ், யங் மென்ஸ் காஸ்மாப்பாலிட்டன் அசோஸியேஷன்.''

காஸ்மாப்பாலிட்டன் ஓக்கே. யங் மென்ஸ்?

உறுப்பினர்கள் எல்லாரும் எழுபத்தஞ்சைக் கடந்த யங்மென்னாம்!

நாங்கள் ரெண்டு பேரும் ஒய்.எம்.ஸி.ஏ.வைச் சென்றடைந்தபோது, வேறு ரெண்டு நரைத்த மண்டைகள் எங்களுக்கு முன்பாய் வந்து காத்திருந்தன.

'வாடா சங்கரா' என்று ஒரு பெரிசு, என்னோடு வந்த ஷங்கரை ஏகவசனத்தில் வரவேற்றதைக் கண்டு அசந்து போன நான், அடுத்து என்னை அவர் 'வாடா அப்துல்லா' என்று வரவேற்றதைப் பார்த்து அதிர்ந்துபோனேன்.

''என்ன சங்கரா, அப்துல்லா ஷாக் ஆகி நிக்கிறான், நீ சொல்லிக் கூட்டிட்டு வரலியா?''

''என்னது தாலாட்டு விழாவா?''

''ஆமாம்... எங்க தலைவருக்குப் பேரன் பிறந்திருக்கான். அவனுக்குத் தொட்டில் கட்டி தாலாட்டு விழா ஏற்பாடு பண்ணியிருக்கோம்.''

- எஸ். முகம்மது யூசுப்

''அவர் இன்னும் நம்ம க்ளப்புல மெம்பர் ஆகலியே, ஆனப்புறம் சொல்லிக்கலாம்னு இருந்தேன்.''

''மெம்பர் ஆகலியாவது! நீ எப்ப ஃபோன்ல இவன் பேர் அப்துல்லான்னு சொன்னியோ, அப்பவே ஆட்டமேடிக்கா இவன் மெம்பராயாச்சு. ஏன்னா, ரஸாக் போனப்புறம், நம்ம க்ளப்புல முஸ்லிம் மெம்பரே கெடையாது. அப்துல்லா, நம்ம க்ளப் ரூல்ஸ்படி மெம்பர்ஸ் எல்லாம் வாடா போடான்னுதான் பேசிக்கணும். பை த வே, நா பீட்டர். இவன் சானா கானா என்கிற சங்கர கணபதி. எனி



க்வெஸ்ச்சன்ஸ்?''

''வந்து... ரஸாக் போய்ட்டான்னு சொன்னீங்களே, உங்க வாடா போடா புடிக்காம...''

''தப்பு அப்துல்லா. இந்த வாடா போடாவ அமுலுக்குக் கொண்டு வந்ததே ரஸாக்கால்தான். நம்ம க்ளப்ல ராஜினாமா கெடையாது. ரஸாக் ட்ரான்ஸ்ஃபர்ல போய்ட்டான்.''

''மெட்ராஸ்லயிருந்து வேற ஊருக்குப் போய்ட்டாரா?''

''இல்ல. வேற உலகத்துக்கு. எப்பவாவது கனவுல வருவான்.''

''ரஸாக் செத்துப் போய்ட்டார்ன்னா சொல்றீங்க? என்ன சார் மரணத்தை இவ்ளோ லைட்டா சொல்றீங்க?''

''சார் மோர்னுல்லாம் பேசினா ஸ்பாட் ஃபைன் போடுவோம். வாடா போடா போடு.''

போடுவதற்குத் தயக்கமாய்த்தானிருந்தது. ஆனாலும், இவர்கள் வித்தியாசமான மனிதர்கள் என்று புரியத்தலைப்பட்ட போது, போட்டுப் பார்க்கலாம் என்று ஓர் உந்துதல் தலையெடுத்தது.

''சானா, கானா! நோக்கும் உன்னோட மாட்டுப் பொண்ணுக்கும் பனிப்போர் எந்த லெவல்ல இருக்கு?'' என்று ஷங்கர் கேட்க, ''பனிப்போர் பகிரங்கப் போரா ஆயிருச்சு'' என்று சானாகானா சோகமயமானான்.

''நேத்து எம்மகங்கிட்ட எம்மருமக ரகசியமாச் சொல்லிக்கிட்டிருந்ததை ஒட்டுக் கேட்டேன். மாமாவைக் கடைக்கி அனுப்பிச்சா, அதுல கமிஷன் அடிக்கிறார். இனிமே நீங்களே கடைக்குப் போய்ட்டு வந்துருங்கன்னு இவ சொல்ல, அவனும் சரின்னு தலையாட்டறான்.''

''அட அநியாயமே, ஒரு நேர்மையான நாணயமான மாமனார் மேல இப்படியொரு தீராப் பழியா!''

''பழி ஒரு பக்கம் இருக்கட்டும். இப்ப எனக்கு ஸைடு இன் கம் கட் ஆயிருச்சேடா!''

சானா கானா கமிஷன் அடித்த கதை அம்பலமானதற்கு ஷங்கரும் பீட்டரும் வாய்விட்டுச் சிரிக்க, நானும் ஜாய்ன் ஆகிக் கொள்ளலாமா என்று யோசித்த போது, 'தற்கொலை, தற்கொலை' என்றொரு கூக்குரல் கேட்டது.

''யாரும் தடுக்காதீங்க. நான் தற்கொலை பண்ணிக்கப் போறேன்.''

குரலுக்குரியவன், அங்கே புதிதாய் வந்த ஒரு முதியவன். கமிஷன் கட் ஆனதுக்கு நானே தற்கொலை பண்ணிக்கலை. நீ ஏன் மச்சி தற்கொலை பண்ணிக்கப் போறே?'' என்று சானகானா அவனைச் சீண்ட, ''அதுக்காக இல்லடா. காதல்

தோல்வி'' என்று பதில் வந்தது.

''என்னோட ஆள் என்னக் கட்டிக்க மாட்டேன்னு சொல்லிட்டா. இனிமே யாருக்காக நான் உயிர் வாழணும்!''

''அருமையான வாழ்க்கையை அவசரப்பட்டு முடிச்சிக்காதடா ப்ரேம். ஆள மாத்து. நம்ம க்ளப்லேயே ஜூனியர் மோஸ்ட் நீதான். எம்பத்தெட்டு வயசுக் காரன். இன்னும் பன்னிரெண்டே வருஷத்துல செஞ்சுரி போடப் போற. கோலாகலமா உனக்கொரு நூற்றாண்டு விழா எடுக்கணும்னு நாங்கள்லாம் பேராசையாயிருக்கோம்.''

''நீங்கள்லாம் எனக்கு விழா எடுக்கறதாயிருந்தா நான் தற்கொலை முடிவை மாத்திக்கிறேண்டா. ஆனா, செஞ்சுரி இன்னும் பனிரெண்டு வருஷம் இருக்கேடா! பனிரெண்டு வருஷம் நீங்க எத்தனை பேர்டா இருப்பீங்க? நீ இருப்பியாடா அப்துல்லா?''

எதிர்பாராத வேளையில் நான் முன்னிலைப்படுத்தப்பட்டதில் நிலைகுலைந்து போகவிருந்தேன். ஒரு மாதிரி சமாளித்துக் கொண்டு அவசரமாய் ஒப்புதல் அளித்தேன்.

''இருப்பேன். இன்ஷா அல்லா, இருப்பேன்.''

இந்த எண்பத்தியெட்டு வயசுக் காதல் மன்னனின் கம்பெனியில், இன்னும் பனிரெண்டு வருஷம் வாழ்ந்திருக்கப் போகிறதை நினைக்கிறபோது இனிமையாகவும் இளமையாகவும் உணர முடிந்தது.

''ஹும்ம். நீங்கள்லாம் இருப்பீங்க. நாந்தான் இருக்க மாட்டேன்'' என்றொரு முதிய குரல் இல்லை - புதிய குரல் கேட்கவும், எல்லோருடைய பார்வையும் அந்தத் திக்கில் திரும்பியது. குரலுக்குரியவனின் கையை எட்டிப் பற்றினான் பீட்டர்.

''வாடா இளவரசன் கண்ணா. உன்னை நாங்க போக வுட்றுவோமா? நீயும் இருப்ப, இன்ஷா அல்லா.''

எழுபத்தஞ்சு வயதைத் தாண்டியவனுக்கு இளவரசன் என்று ஒரு பெயரா!

அந்தப் பெயரின் இளமையே என்னை ஒரு தூக்கு தூக்கியது.

''நான் இந்த உலகத்தை விட்டுப் போறதைச் சொல்லலை மச்சி. இந்த க்ளப்பை விட்டு, ஏன்னா, நான் கல்யாணங்கட்டிக்கப் போறேன்.''

''ஹை! பேஷாக் கட்டிக்க. நம்ம க்ளப் ரூல்ஸ மாத்தி, பாட்டியையும் க்ளப்ல மெம்பரா சேத்துக்குவோம்.''



" நான் இந்த உலகத்தைவிட்டுப் போறதைச் சொல்லலை மச்சி! "

''பாட்டி கீட்டின்னேன்னா கெட்ட கோபம் வரும் படுவா.''

''சரிடா. பாட்டி வாபஸ். இளவரசன் காதலி இளவரசின்னு வச்சிக்குவோம். இளவரசி வாழ்க!''

''நிறுத்துங்கடா, நிறுத்துங்க. என்னோட இளவரசி நம்ப க்ளப்ல மெம்பராகப் போறதில்லை.''

''ஏன்? ஏன்? ஏன்?''

''ஏன்னா பசங்களா, உங்களையெல்லாம் நம்ப முடியாதுடா!''

இளவரசன் அவர்களுடைய இளமையை உசுப்பி விடவும், ஆனந்தமாய் அங்கே ஒரு சிரிப்பலை எழுந்தது.

உடன் சேர்ந்து நானும் சிரித்தேன், மனம் விட்டு. ●



"என்னங்க, டாக்டர் உங்களை எண்ணெய்ப் பதார்த்தங்களே சேர்த்துக்கக் கூடாதுன்னு சொல்லியிருக்கார்."

"ஐயோ! சரியான 'ஆயில்' தண்டனையா இருக்கே!"

- எச்.அஜிரா

'ஆயில்' தண்டனை!



"டாக்டர், நீங்களே தயாரித்த காலாவதியான போலி மருந்தை எதுக்காக அந்த பேஷன்டுக்குக் கொடுத்தீங்க..?"

"அவன் சொந்தமாக அடிச்ச ரூபா நோட்டை பீஸா கொடுத்தான் அதான்."

- சொக்கம்பட்டி தேவதாசன்



"மேஜிக் நிபுணருக்கு வீட்டை வாடகைக்கு விட்டது தப்பாப் போச்சு..."

"ஏன்?"

"வாடகை கேட்கப் போகும்போது மாயமா மறைஞ்சுடறார்..."

- வி.சாரதி டேச்சு





வீட்டுக்குள் குற்றாலம்!

'என்னது வெயிலில் வீட்டுக்குக்கூட ஃபேஷனா...? எனத் திகைப்பவர்கள், இன்டீரியர் டிஸைனர்களிடம் பேசினால் தெரியும், கோடையில் நம் கண்களுக்கும், மனசுக்கும் ஏற்றபடி வீட்டைக் குளுமையாக வைத்துக் கொள்ள எத்தனை எத்தனை வழிகள் இருக்கிறதென்று. 'ரிச் டச் டெகார்ஸ்'ஸின் விஜய் கூறும் சில இனிமையான கோடை ஃபேஷன் குளுகுளு டிப்ஸ் :

கோடைக்கு ஏற்றவாறு வீட்டின் பெயின்ட் நிறத்தை மாற்றினாலே போதும். பாதிக்குப் பாதி, கதிரவனின் கொடுமையான வெப்பத்திலிருந்து தப்பித்துக் கொள்ளலாம். வெள்ளை, வெளிர்... நிறங்கள் இரண்டுமே கோடைக்கு ஏற்றவை. முக்கியமாக வீட்டு மேற்கூரையை இந்த நிறத்தைக் கொண்டு அமைப்பதால், கதிரவனின் தாக்கத்தை என்பது சதவிகிதம் நிச்சயமாகக் குறைத்து விடும்.

சம்மர் கூல் பெயின்ட்டை வீட்டுக் கூரையின் மீது அடிப்பதன் மூலமாகவும் வெயிலின் அடியிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம்.

பெருவாரியான மக்கள் நாடுவது, ஃபால்ஸ் சீலிங்கைதான். தெர்மோகோல் கொண்டு அமைக்கப்படும் இந்த ரூஃபிங், கதிரவனின் வெப்பம் வீட்டுக்குள் இறங்காமல் இருக்க உதவிடும். ஒரு சதுர அடிக்கு இருபத்தைந்து முதல் இருபத்தேழு ரூபாய் வரை விலை.

ஃபெனெஸ்டா கதவுகளும் பெருமளவில் வெயிலின் தாக்கத்தைக் குறைக்கும்.

வீட்டு முற்றத்திலோ அல்லது மாடியிலோ, சின்னச் சின்னச் செடிகளை நட்டு வைப்பதை டெரஸ்







✱ விஜய்



கார்டன் அல்லது பால்கனி கார்டன் என்று அழைக்கிறோம். புற்கள், பல விதமான பூச்செடிகள் தொடங்கி பல வீடுகளில், தங்களுக்குத் தேவையான காய்கறிச் செடிகள், இலை மட்டுமே கொண்ட செடிகள் என வளர்த்து கண்களுக்கு விருந்தும், குளிர்ச்சியும் ஒரு சேரப் பெறும்படி பார்த்து கொள்கின்றனர்.

வீட்டு வரவேற்பறையில் புதிதாகப் பறித்த மலர்களைக் கொண்டு தினமும் அலங்கரிப்பது வீட்டுத் தரையில் கார்ப்பெட்டுக்களைப் போடாமல் அப்படியே வெறும் தரையாக விட்டு விடுவது, வாசலில் போடும் டோர் மேட் தொடங்கி ஜன்னலுக்குப் போடும் கர்டன்கள் வரை அனைத்துமே சின்னச் சின்னப் பூக்கள், இலைகள் கொண்டு அமைக்கப்பட்டவையாக இருப்பின், சம்மரில் வீடு குற்றாலம் போல மனசுக்குள் சாரல் தெளிக்கும்.



சட்னி பனா



லதாசேகர்

டைனிங் டேபிளில் விதவிதமாக பொரியல், கூட்டு, சாம்பார் என இருந்தாலும், டக்கென அட்ராக்ட் பண்ணும் ஒரு ஐட்டம் துவையல். பசியைத் தூண்டும்; ருசியைக் கூட்டும். இலேசா சாதத்தை ஒதுக்கி அதன் தலையில் காரசார துவையலைப் பரத்தி, மேலே ஒரு டேபிள் ஸ்பூன் நல்லெண்ணெய் விட்டுச் சாப்பிட்டால்... ஆனந்தம்! துவையல் இருக்கும் போது அதை அலட்சியப்படுத்தி விட்டு, யாருமே டைரக்டாக சாம்பார் சாதம், ரசம் சாதம் சாப்பிட மாட்டார்கள்.

நமக்குத்தான் சட்னி, துவையல் என இரண்டு பெயர். இட்லி, தோசை, பொங்கலுடன் என்றால் சட்னி, சாதத்துடன் என்றால் துவையல். வடநாட்டில் சட்னி என்று ஒரே திருநாமம். சைட் டிஷ்ஷாக இருந்தாலும், மெயின் டிஷ்ஷையெல்லாம் ஓரம் கட்டும் பவர் சட்னிக்கு உண்டு.

காரசாரமாக, கரகரவென்று அரைக்கப்படும் சட்னிகளில் ஏக வெரைட்டி. தேங்காய், புதினா, கொத்துமல்லி, வெங்காயம், மாங்காய், கத்தரிக்காய், தக்காளி... என சட்னிகள் ஏராளம். எந்தக் காய்கறியையுமே வதக்கிவிட்டு, கடுகு, உளுத்தம் பருப்பு, பெருங்காயம், புளி, மிளகாயையும் வதக்கி, அரைப்பது (அம்மி என்பதில் நம் மம்மிகள் அரைத்தார்கள்) பேஸிக் சட்னி.

அவ்வப்போது ஃப்ரெஷ்ஷாக அரைத்துச் செய்யப்படும் சட்னிக்கு ருசி அதிகம். ஊறுகாய் போல யாரும் இதை மாதக்கணக்கா வருஷக்கணக்கா செய்து வைப்பதில்லை.

பல ஆயிரம் வருடங்களாக இந்தியாவின் ரெஸிபியான சட்னி பதினேழாம் நூற்றாண்டிலிருந்து இங்கிலாந்து மற்றும் ஃபிரான்ஸிலும் அறிமுகப்படுத்தப்பட்டது. கமர்ஷியலாக 'மேஜர் க்ரேஸ் சட்னி' என்பது மிக மிக பாப்புலர்.

காரசாரமாக செம டேஸ்டான அல்லம் பச்சடி ரெஸிப்பி இதோ:

தேவையான பொருள்கள்:

இஞ்சி - 1 கப், புளி - 2 டேபிள் ஸ்பூன், சிவப்பு மிளகாய் - 8 (அவரவர் விருப்பம்போல்) வெல்லம் - 1/4 கப், உப்பு - தேவையான அளவு

செய்முறை: இஞ்சியை நன்றாகக் கழுவி தோலைச் சீவிப் பொடியாக நறுக்கவும். புளியைத் திக்காகக் கரைத்து, இஞ்சி, புளி, வெல்லம், உப்பு மிளகாயை மிக்ஸியில் ஒட்டித் துவையலாக்கவும். வாணலியில் எண்ணெயை ஊற்றி அதில் கடுகு, பெருங்காயம், கறிவேப்பிலை போட்டு பிறகு அரைத்த விழுதையும் போட்டு மிதமான தீயில் ஐந்து நிமிடம் கிளறி, பிறகு இறக்கி விடவும். சாதத்தில் பிசைந்து சாப்பிட அருமை. இஞ்சி உடம்புக்கு நல்லது. ஜீரணத்துக்கு ஏற்றது.



காரட், முட்டைகோஸ், பீர்க்கங்காய்... என்று எந்தக் காய்கறியையுமே வதக்கித் துவையலாக அரைத்துச் சாப்பிடலாம். டேஸ்டி, டாங்கி, ஸ்பைஸி துவையல் இருந்தால் திடீர் கெஸ்டைச் சமாளிக்கலாம்.

தென் ஆப்பிரிக்காவினர் 'அமேலியாஸ் சட்னி' என்ற வகைக்கு ஏக ஆதரவாளர்கள். அமேரலியா என்ற மூதாட்டி தன் தொண்ணூற்று ஏழு வயதில் 1962-ம் வருடம் இறந்து போனார். ஆனால் அவர்

தூங்கா...

பிஸினஸாகச் செய்து வந்த சட்னியில், அவர் கொள்ளுப் பேரன் டெஸ்மண்ட் அமேலியாவின் புகைப்படத்தையும் பாட்டிலில் போட்டிருக்கிறார். ''ஐந்து தலைமுறைகளாக சட்னி பிஸினஸில் இருக்கிறோம். எல்லாம் எங்கள் பாட்டி கற்றுக்கொடுத்தது...'' என்கிறார் டெஸ்மண்ட்.

தக்காளி, புதினா, கொத்துமல்லி போன்ற சட்னி வகைகளை அரைத்து வைத்துக்கொண்டால் இட்லி, தோசை, சாதம் + அவ்வப்போது சான்ட்விச் என்று பிரெட் நடுவிலும் வைத்துச் சாப்பிடலாம்.

வடநாட்டில் யாரையாவது மிரட்ட வேண்டுமென்றால், சண்டை போட்டால் கண்டிப்பாகச் சொல்லும் வாக்கியம், ''சட்னி பனா தூங்கா...'' (சட்னியாக்கிடுவேன்)

ஆந்திராவில் நம் துவையலையே பச்சடி என்கிறார்கள். 'பச்சடி அன்னம்' முதலில் சாப்பிட்ட பிறகுதான் 'பப்பு அன்னம் சாரு அன்னம்... எல்லாமே. (அன்னம் என்பது அத்தைப் பெண்ணல்ல சாதம்...) ●



"**கோ**வையின் க்ளைமேட் மட்டு மல்ல, ஆடைகள் தயாரிப்பில் கூட நிறைய ஜில்,ஜில், குளு,குளு விஷ யங்கள் இருக்குதுங்க" என்கிறா க்ரைம் கதை மன்னர் ராஜேஷ்குமார்,

இவர் எண்பதுகளில் இருந்து தொண்ணூறுகள் வரை கோவை காட்டன் சேலைகள் உற்பத்தியிலும் விற்பனையிலும் வட இந்தியா முழுக்க சின்னச்சின்னக் கிராமங்களில் நுழைந்து புறப்பட்டவர் என்பது பலருக்குத் தெரிந்திருக்காது!

"கோவை காட்டன், முழுக்க முழுக்க ஹாண்ட்லூம் (கை நெச வுங்க). அப்பத்தான் வித்தியாசமான டிஸைன்கள், அழுத்தமான கலர் காம்பினேஷன் (நிறங்களின் கலக்கல்) மென்மை அதே சமயம் உறுதி எல்லாம் கிடைக்கும்" என்கிறார் இவர்.

எவ்வளவு கடுமையான கோடையாக இருந்தாலும், உடல் வெப்பத்தைச் சீராக வைத்திருக்கும்; வியர் வையை உறிஞ்சிக்கொள் ளும்; கம்பீரமான தோற்றம் தரும்; உடல் ஆரோக்கியத் துக்கு ரொம்ப ரொம்பப் பாதுகாப்பு கோவை காட் டன் புடைவைகள்.

வடநாட்டில் இந்தச் சேலைகளுக்கு அதிகமான வரவேற்பு இருக்கிறது. அங்கு வயல்களில் அறு வடை நடக்கும் காலங் களை மகரசங்கராந்தி என் பர்.

அந்தத் திருவிழாவுக்கு சிவப்பும் பச்சையும், மஞ்சளும்



✱ ராஜேஷ்குமார்

பச்சையும், சிவப்பு மஞ்சளும் கலந்த சேலைகள் ஆயிரக்கணக்கில் விற்கும். அங்கு குழந்தைகளுக்குக் கட்டும் தூளிகளைக் கூட இந்தச் சேலைகளில் கட்டிப் போடுவார்கள். அந்த அளவுக்கு மென்மையும், குளுமையும் உடையது. சேலைகள் கிழியும் வரை நிறம் போகாது, மங்காது'' என்கிறார் ராஜேஷ்குமார்.

வேண்டாம். பராமரிப்பதும் எளிது.

''கோவை தேவாங்கப் பேட்டையில் பல வருடங்களுக்கு முன் ஆயிரத்துக்கும் அதிகமான கடைகளும் பல ஆயிரம் நெசவாளர்களும் இருந்தனர்.

கோடைக்கு... கோவை காட்டன்!

நமது முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி, சோனியா காந்தி, பல வி.வி.ஐ.பி.கள் விரும்பி உடுத்தும் சேலை இது தானாம்.

இதில் கோரா, வீகோ, எம்போஸிங், சாமுத்திரிகா டிஸைன்ஸ், அன்னம், கோபுரம், மயில், தாமரை பார்டர்கள் என ஏகப்பட்ட டிஸைன்களாம்.

''கல்லூரிப் பேராசிரியைகள், மருத்துவர்கள், உயரதிகாரிகள், வரவேற்பாளர்கள் இவர்களிடம் அதிக வரவேற்பு இருக்கிறது'' என்கிற ராஜேஷ்குமார்,

''வடநாட்டினர், யாத்ரீகர்கள் கோவை வந்தால் அள்ளிச் செல்வது காட்டன் புடவைகளைத்தான். நூறு சதவிகிதம் பருத்தி இழைகளுடன், பட்டுச் சேலைகளின் டிஸைனுடன் எல்லோராலும் மிகவும் விரும்பி வரவேற்கப்படுகிறது. கஞ்சி போட

இன்று நூல் விலை ஏற்றம்; சரியான உதவிகள் இல்லை. வேறு வேலைகள் அதிகமாக வந்து விட்டன.

தரம், விலை புரியாமல், மக்களும் போலிகளை வரவேற்பதால், பல நெசவாளர் குடும்பங்களில் வாரிசுகள் இந்தத் தொழிலைச் செய்வதில்லை'' என்றவரின் கண்களில் வருத்தம் பளிச்சிடுகிறது.

- செய்தி, சித்திரம்: ஆர்.பாலா



31 ஞானக் கடல்

ஸ்ரீ லலிதா - நான்காம் பாகம்

த்ரிபுராஸ்ரீவசங்கரீ - பத்துவிதமான யோக முத்திரைகளுக்கும் தேவதைகள் உண்டு. அதிலே த்ரிபுராஸ்ரீ என்று ஒரு தேவதை. அந்த த்ரிபுராஸ்ரீயைத் தன்வசப்படுத்தக் கூடியவள் **த்ரிபுராஸ்ரீவ சங்கரீ.** ஒன்பதாவது முத்திரைக்கு அதி தேவதை த்ரிபுராஸ்ரீ. அவளை வசப் படுத்தக் கூடியவள் என்றால், யோக முத்திரைகளினாலான ஆராதனையில் அனைத்தையும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வள்.

ஞானமுத்ரா - ஞானமுத்திரையாக இருக்கக்கூடியவள். **தக்ஷிணாமூர்த்தி ரூபிணி** என்று ஒரு திருநாமம் வந்தது அல்லவா...? தக்ஷிணாமூர்த்தியின் கையிலே இருக்கக்கூடிய முத்திரைக்கு ஞான முத்திரை என்று பெயர். ஆள் காட்டி விரலும் பெருவிரலும் சேரக்கூடிய முத்திரை ஞானமுத்திரை அல்லது சின்முத்திரை. பகவத்கீதை ஆரம்பிக்கிற போது, பகவான் கிருஷ்ணன் ஞான முத்திரையோடு பேச ஆரம்பித்தான் என்று வரும்.

சைவ சித்தாந்தப்படி இந்தச் சின் முத்திரைக்கு ஒரு விளக்கம் உண்டு: ஆணவம், கர்மம், மாயை என்ற மூன்று மலங்களையும் விட்டுவிட்டால், ஜீவன் பரமாத்மாவை அடைந்துவிடும். ஆள் காட்டி விரலும் பெருவிரலும் சேருவது ஜீவ-பரம ஐக்கியத்தைக் குறிக்கும். உயர்ந்து இருக்கும் மற்ற மூன்று விரல் களும் விட்டு விலக்கிய மும்மலங்களைக் குறிக்கும்.

ஞானத்தையே தன் முத்திரையாகக் கொண்டவள் **ஞானமுத்ரா** என்றும் எடுத்துக்கொள்ளலாம்; சர்வக்ஞாவாக இருப்பதனால், ஞானத்தைத் தன் முத்தி ரையாகக் கொண்டாள் எனவும் எடுத்துக் கொள்ளலாம்.

ஞானகம்யா - ஞானத்தைத் தரக்கூடிய வள். ஞானத்தையே இருப்பிடமாகக் கொண்டவள் அம்பிகை.

ஞானஞேயஸ்வரூபிணி - ஞானம் - அறிவது. ஞேயம் - அறியப்படுகிற பொருள். அவளே ஞானமாக இருக் கிறாள். அவளே அந்த ஞானத்தின் தேடுபொருளாக - அடையப்படுகிற பொருளாக இருக்கிறாள்; இறுதி நோக்காக இருக்கிறாள்.

யோனிமுத்ரா - யோக முத்திரைகளில் ஒன்பதாவது முத்திரைக்கு யோனி முத்திரை என்று பெயர்.

த்ரிகண்டேசி - பத்தாவது முத்திரைக் குத் திரிகண்டம் என்று பெயர். த்ரிகண்ட முத்திரையின் தலைவி என்று பொருள்.

த்ரிகுணாம்பா, த்ரிகோணகா - த்ரி கோணத்துக்குத் தலைவியாக இருக்கக் கூடியவள். எந்த த்ரிகோணமாகவும் இருக்கலாம் - ஸ்ரீ சக்கரத்தின் மத்தியில் இருக்கக் கூடிய த்ரிகோணம் அல்லது சிருஷ்டியின் முதலாவதாக இருக்கக் கூடிய த்ரிகோணம்.

அனகா - துக்கமே இல்லாதவள்;

சுதா சேஷய்யன்


ஸ்ரீ பெரியநாயகி அம்மன்
தீயத்தூர்
(புதுக்கோட்டை மாவட்டம்)

துன்பம் இல்லாதவள்.

கேட்பதற்கும் மேல் அருள்பவள்

அத்புத சாரித்ரா - அற்புதமான சரித்திரங்களைப் படைத்தவள். அவள் சரித்திரங்களைச் சொல்லச் சொல்ல அற்புதமாக இருக்கும்.

வாஞ்சிதார்த்த பிரதாயினி - கேட்டால், கேட்டதைவிட அதிகமாகத் தரக்கூடியவள். கொஞ்சமாகக் கேட்டால் கூட "ஐயோ! குழந்தைக்குக் கேட்கத் தெரியவில்லையே!" என்று வருந்தி, "கொஞ்சமாகத்தான் கேட்கத் தெரிந்தது" என்று கவலைப்பட்டு, கேட்டதைவிட அதிகமாகத் தரக்கூடியவள். அம்பிகையைச் சரண் புகுந்தால், அதிக வரம் பெறலாம்.

அம்பாளை எப்படி வழிபடுவது என்பதைச் சொல்வதுதான் அடுத்த திருநாமம் - **அப்யாஸா திசயஞா தா.** பயிற்சியின் மூலமாக அவளை வழிபடலாம். அம்பாளைப் பற்றிய உபாஸனை எல்லாமே ரகசிய பூர்வமானவை என்பது உண்மை. கௌலாசார மந்திரங்களையும், சமயாசார மந்திரங்களையும் முழுமையாகச் சொல்ல முடியாது என்பது உண்மை. அதனால்தான், சௌந்தர்ய லஹரியையே பகிரங்கமாக மேடையில் சிந்திக்கலாமா என்றெல்லாம் கேள்வி கேட்பவர்கள் உண்டு.

ஆனால், மஹாஸ்வாமி (காஞ்சி பரமாச்சார்யார்) ஒரு விஷயம் சொல்லுவார் - சில சுலோகங்களை எல்லோருமாகப் பேசி அளவளாவ முடியாது என்பது உண்மைதான். ஆனால் மந்த்ர பூர்வமான இந்த சுலோகங்களை

தக்ஷிணாமூர்த்தியின் கையிலிருக்கும் முத்திரைக்கு ஞானமுத்திரை என்று பெயர்

குருமுகமாகப் பெற்றிருந்தால் சரி. அப்படிப் பெற முடியாத நிலையிலும், அவற்றை உயர்ந்த மந்த்ரங்கள் என்று நினைத்துப் பாராயணம் பண்ணினாலே போதும், அதற்கான அனுக்ரஹத்தை அம்பாள் கொடுத்து விடுவாள் என்பார்.

அந்த விதத்தில், ரகசியபூர்வமாக இருக்கக் கூடிய ‘சில திருநாமங்கள் உண்டு. மிக மிக ரகசியபூர்வமான சில திருநாமங்கள் உண்டு. சில திருநாமங்கள், மேலோட்டமாகப் பார்க்கும்போது சில பொருளைத் தரும். ஆனால், மார்க ரீதியாகப் பார்க்கும்போது கிடைக்கக் கூடிய பொருள் வேறு மாதிரியாக இருக்கும். மார்க ரீதியாக இருக்கக் கூடிய பொருளையெல்லாம் பொதுவில் பேச முடியாது; மேடையில் சிந்திக்க முடியாது என்றாலும், அம்மாவை எப்படிக் கூப்பிட்டாலும் அம்மாவுக்குச் சந்தோஷம்தானே! அவளுடைய முழுமையான பெயரைச் சொல்லிக் கூப்பிடுவதைவிட, அம்மாவுக்கு எது சந்தோஷத்தைத் தரும்...? குழந்தை மழலையில் கூப்பிடுவதுதானே மகிழ்ச்சி தரும்! சொல்லத் தெரியாமல் மழலையில் சொல்கிறபோது, அதைத்தான் ஒரு தாய் மகிழ்வுடன் ஏற்றுக் கொள்வாள்.

பயிற்சியே பிரதானம்

இப்படிப்பட்ட அம்பாள், பயிற்சியினால் அடையப்படக் கூடியவள் **(அப்யாஸா திசயக்ஞா தா)** என்றால், முதலில் நமஸ்காரம் பண்ணுவது என்பதுகூட நமக்குச் சரியாகப் பண்ண வராது. ஆனால் பத்து தடவை பண்ணிய

பிறகு அதுவே சரியாக வரும். இப்படி நாம் மெள்ள மெள்ளக் கற்றுக் கொண்டு செய்கிற காரியத்துக்குக்கூட அம்பாள் சந்தோஷப்படுகிறாள்.

ஆசார்யர் ஆதிசங்கரர் பாடுகிறபோது, ''ஜபே ஜல்ப'' என்று பாடுகிறார். எது ஜபம்...? ஜல்பம் என்றால் உளறல்! நாம் ஜபம் என்ற பெயரில் உளறலாக மந்திரங்களைச் சொன்னால்கூட அம்பாள் அதை ஏற்றுக் கொள்கிறாள். நாம் வெறுமே நடந்தால்கூட அதை பிரதக்ஷிண மாக அவள் ஏற்கிறாள்! தரையில் படுத் துக் கொண்டிருந்தால், அதையே நமஸ் காரமாக அவள் ஏற்றுக் கொள்ளக் கூடியவள் - ஆகவே பழகிப் பழகிக் கற்றுக் கொள்ளும் அப்யாஸங்களினால் அடையப்படக்கூடியவள்.

அனைத்தும் கடந்து ஒளிர்பவள்

ஷட் அத்வாதீத ரூபிணி - அத்வாக் கள் ஆறு என்று சொல்வதுண்டு. சைவ சித்தாந்தத்தில் அத்வாக்கள் நிறைய உண்டு; சாக்தத்திலும் அத்வாக்கள் உண்டு - ஆறு அத்வாக்கள். வர்ணம், பதம், மந்த்ரம், கலை, தத்வம், புவனம் ஆகியன ஆறு அத்வாக் கள்.

வர்ணம் என்றால் அக்ஷரம் என்று பார்த் தோம். பீஜாக்ஷரங் களுக்கே வர்ணங்கள் என்றுதான் பெயர். ஐம்பத்தொரு அக்ஷரங் களுக்கும் மாத்ருகா வர்ணங்கள் என்று பெயர். இந்த வர்ணங் கள் தனித்தனியே இருப்பது என்பது ஓர் அத்வா. வர்ணங்கள் சேர்ந்து 'பதம்' உருவாகிறபோது, அந்தப் பதம் இரண்டாவது அத்வா. இரண்டு - மூன்று அக்ஷரங்கள் சேர்கிறபோது ஒரு வார்த்தை, ஒரு சொல் கிடைக்கும். அவை தான் பதம் அல்லது இரண்டாவது அத்வா.

பதங்களையெல்லாம் கோக்கும்போது, மாலை மாதிரி சேர்க்கிறபோது, மந்திரம் கிடைக்கும். மந்த்ரம் என்பதே மூன்றா வது அத்வா.

மந்த்ரங்களையெல்லாம் சரியாக வகைப்படுத்தும்போது, கலை கிடைக் கும். கலை என்பது நாலாவது அத்வா. இந்தக் கலையிலிருந்து கிடைக்கக்கூடிய உட்பொருள் அல்லது ஸாரம்தான் ஐந்தா வது அத்வாவான தத்துவம். தத்துவங் களையெல்லாம் திரட்டிச் சேர்த்தால் அது புவனம் என்கிற ஆறாவது அத்வாவாக அமைகிறது.

இந்த ஆறு அத்வாக்களின் ரூபமா கவும் அவற்றால் வழிபடக் கூடிய வளாகவும் இருப்பவள்தான் **ஷடத்வா அதீத ரூபிணி** - அதாவது அத்வாக் களுக்கும் அடங்காமல், அவற்றுக்கு அப்பாற் பட்டு, அதீதமாகவும் இருக்கக் கூடியவள்.

அவ்யாஜ கருணா மூர்த்தி - பாரபட்சமில்லாமல் கருணை காட்டக் கூடியவள். இவர்கள் வேண்டப்பட்டவர்கள், இவர்கள் வேண்டப் படாதவர்கள் என்கிற பாரபட்சமின்றி அருள்பவள்.



(அடுத்த இதழில் நிறையும்)

கோவை விமான நிலையம் அருகேயுள்ள சுகுணா பத்மாலயா இண்டர்நேஷனல் பப்ளிக் பள்ளியில் படிக்கும் சிறுமி அஸ்லேஷாவுக்கு, துணை முதல்வர் ஸ்டாலினை மிகவும் பிடிக்கும். ஏன் என்றால், ''அது தெரியவில்லை; பேனரில், போஸ்டரில் அந்த அங்கிள் படத்தைப் பார்ப்பேன்'' என்கிறாள். அதிர்ஷ்டவசமாக ஸ்டாலின் வீடு இருக்கும் சாலையிலேயே அஸ்லேஷாவின் உறவினர் வீடும் இருக்கவே, ஸ்டாலினைப் பார்க்கும் ஆசையில் சென்னைக்கு வந்து விட்டார். சிறுமியின் உறவினர் பெண்மணி, அஸ்லேஷாவுடன் காலை எட்டு மணிக்கெல்லாம் துணை முதல்வர் வீட்டுக்குச் சென்று விட்டார். அன்று சட்டமன்றம் இருக்கும் நாள். ஏகப்பட்ட வி.ஐ.பி. விஸிட்டர்கள். இருந்தாலும், சிறுமியை வீட்டுக்குள் அழைத்து தேநீர் கொடுத்து உபசரித்து ''உனக்கு என்ன வேணும்மா?'' என்று ஸ்டாலின் கேட்க ''அங்கிள்! புது சட்டமன்றம் பார்க்கணும்'' என்று அவள் சொல்ல, உடனே அடுத்த நாள் ஏற்பாடு செய்யப்பட்டது. அன்று தொழில்துறைக்கான மானியக் கோரிக்கையை அவையில் சமர்ப்பிக்க வேண்டும் பதற்றமான அந்த நேரத்தில் கூட, ''சிறுமியும் அவருடன் வந்தவர்களும் அவைக்கு வந்து விட்டார்களா' என்று விசாரித்தாராம் ஸ்டாலின். சட்டசபை நடப்பதையும், தனக்குப் பிடித்த அங்கிள் சுறுசுறுப்பாகச் செயல்படுவதையும் பார்த்த மகிழ்ச்சியில், இப்போது அஸ்லேஷா தன் நண்பர்களிடம் ஸ்டாலின் படத்தைக் காண்பித்து ''இந்த அங்கிள் கூட என் ஃப்ரெண்ட் தான்'' என்று பெருமை பொங்கச் சொல்லிக் கொண்டிருக்கிறாள்.

* * *

ராஜ்யசபா தேர்தல், தமிழகக் கூட்டணிகளை மாற்றிப் போடுமா? அ.தி.மு.க., கம்யூனிஸ்ட் கட்சிகள், ம.தி.மு.க. சேர்ந்தால், ஆறு இடங்களில் இரண்டு இடங்கள் பெற முடியும். அப்படிப் பெற்றால் வைகோவுக்கு ஒன்று; தனக்கு ஒன்று என்பது ஜெ.வின் திட்டம். ஆனால், இடையில் இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் தா.பாண்டியன் மூக்கை நுழைக்கிறார். ஜெயலலிதா இரண்டையும் கூட்டணிக்கு ஒதுக்கும் சாத்தியமில்லை. எனவே பாண்டியன் தி.மு.க. தலைமைக்கு வலை வீசிப் பார்க்கிறாராம். இதற்காகத்தான் சட்டமன்றத்தில் இந்திய கம்யூனிஸ்ட் உறுப்பினர்கள் கொஞ்சம் மயிலிறகால் கலைஞரை வருடிக் கொடுத்தார்களாம். பா.ம.க.வும், இந்திய கம்யூனிஸ்டும், தி.மு.கவோடு சேர்ந்தால், ஆறில் ஐந்து இடங்கள் அவர்களுக்குத்தான். அந்த நிலையில் தி.மு.க-2, காங்கிரஸ்-1, பாண்டியன், அன்புமணிக்கு மீதி இரண்டும். கூட்டணி நிலைப்பாடும் மாறி தி.மு.க. கூடுதல் எனர்ஜியைப் பெறும். இந்தச் சூழலில் தி.மு.க.வில் கடலூர் புகழேந்தி, ஆர்.எஸ்.பாரதி, ஜோதி, தமிழச்சி, கே.எஸ்.ராதாகிருஷ்ணன் உட்பட 15 பேர் தூண்டிலைப் போட்டுப் பார்க்கிறார்களாம்.

- சஞ்சயன்

''அங்கிள் புது சட்டமன்றத்தைப் பார்க்கணும்!''



கல்கி

இணைந்து வழங்கும்

Sri Pyssani JEWELS

கோடைக்கால கொண்டாட்டம்

ஆறு வார அதிரடி போட்டி!

கல்கி வழங்கும் கோடைக்கால கொண்டாட்டம், அதிரடியான போட்டிகளோடும், அசத்தலான தங்கக் காசு பரிசுகளோடும் வருகிறது வாசகர்களே... அந்தந்த வாரம் ஸ்பெஷலை அடிப்படையாக வைத்தே போட்டிகள்...

இந்த வாரம் கோடைக்காலக் கொண்டாட்டத்தில் 'சம்மர் ஃபேஷன் ஸ்பெஷல்' என்பதால், கோடை ஃபேஷன்களை அடிப்படையாகக் கொண்ட

கோடைக்கால போட்டி - 5

இதோ...



விதிமுறைகள்:

வாசகர்களே! நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இவைதான்.

- கல்கி வழங்கும் கோடைக்கால கொண்டாட்டம் ஆறு வாரப் போட்டி இந்த இதழோடு சேர்த்து ஆறு வாரங்கள் வெளியாகும். (போட்டி-1, மற்றும் போட்டி - 2, 3, 4 முறையே மே 2, மே 9, மே 16, மே 23 இதழ்களில் இடம்பெற்றன)
- ஒவ்வொரு வாரமும் வெளியாகும் போட்டிக்கான விடைகளை நிரப்பி, போட்டிப் பக்கங்களைக் கத்திரித்துப் பத்திரப்படுத்தவும். (81 - 82 பக்கம் முழுவதையும்).
- ஆறாவது வாரம் ஸ்பெஷல் போட்டியும் உண்டு.

- ஆறுவார போட்டிப் பக்கங்களை ஒன்றாக இணைத்து அனுப்ப வேண்டும்.
- ஆறு வாரப் போட்டிப் பக்கங்கள் வந்து சேரக் கடைசித் தேதி : **17.06.2010**
- சரியான விடை எழுதிய வாசகர்களுள், குலுக்கல் முறையில் தேர்வாகும் ஆறு அதிர்ஷ்டசாலிகளுக்கு, தலா கால் சவரன் தங்கக் காசு பரிசு.
- சரியான விடை எழுதி, ஸ்பெஷல் போட்டியின் அடிப்படையில் தேர்வாகும் ஓர் அதிர்ஷ்டசாலிக்கு ஒரு சவரன் தங்கக் காசு பரிசு.
- ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

கோடைக்காலப் போட்டி, கல்கி

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 32

சரியான விடையை ✓ செய்யவும்

1. ஃபேஷன் தலைநகரம் எனப்படுவது எது?
   ☐ வாஷிங்டன் ☐ பாரிஸ்
2. இப்போது இங்கே நகையணிவதுகூட ஃபேஷனாகி வருகிறது!
   ☐ மூக்கு ☐ புருவம்
3. இன்றைய மகளிர் ஃபேஷனுக்கு முன்னோடி ஓவியங்கள், இங்குள்ளன
   ☐ அஜந்தா ☐ எல்லோரா
4. நிஃப்ட் (NIFT) சென்னையில் அமைந்துள்ள இடம்
   ☐ தரமணி ☐ எழும்பூர்
5. பண்டைய நாகரிகங்கள் தோன்றிச் செழித்தது எங்கே?
   ☐ மலைப்பகுதியில்
   ☐ நதிக்கரையில்
6. ஃபேஷன் என்று ஹை ஹீல்ஸ் அணிவது, இதற்குப் பாதிப்பை ஏற்படுத்தும்?
   ☐ முதுகு ☐ இதயம்
7. பீட்ஸா போன்ற உணவு வகைகளைத் தொடர்ந்து உட்கொண்டால் உடலில் அதிகமாவது?
   ☐ வெள்ளை அணுக்களின் எண்ணிக்கை ☐ கொலஸ்ட்ரால்
8. மாடல்களின் மேடை அணிவகுப்பு நடையை இந்தப் பெயரில் அழைக்கின்றனர்
   ☐ அன்ன நடை ☐ பூனை நடை

உருவாக்கம் : ஜி.எஸ்.எஸ்

கோடைக்காலப் போட்டி - 5

பெயர் : ....

முகவரி : ....

....

....

தொலைபேசி : ....



பள்ளியென்றும் பழக்காடு

ஒருநாள் நள்ளிரவுக்கு கொஞ்சம் முந்தி செல் ஒலித்தது. கணினியிலிருந்து சன்னமாய் விலகி செல்லை எடுத்தால், கார்மேகம் சார்தான். 'பட்டத்திபாளையம் கிராமத்துல, நான் படித்த தொடக்கப் பள்ளியில் ஆண்டு விழா. ஒரு நல்ல நாடகக் கலைஞன் வேண்டும். அவர் மேடையை விட்டு இறங்கும் வரைக்கும் குழந்தைகள் கொண்டாடிக் குதூகலித்துக் கூத்தாட வேண்டும்.' என்றார். திருப்பூர் மாவட்ட தாராபுரம் வட்டத்தில் இருக்கிறது பட்டத்திபாளையம்.

விழாவுக்குக் கூட்டி வரப்பட்ட நாடகக் கலைஞன் வேலுசரவணன், உள்ளே ஒப்பனை செய்து கொண்டிருந்த போதுதான் நானும் சாரும் வேலு சரவணனை எப்போது மேடை ஏற்றுவது, மேடையில் செய்ய வேண்டிய மாற்றங்கள் என்ன என்பது குறித்தும் பேசிக் கொண்டிருந்தோம். அந்த நேரம் பார்த்து நீர் முட்டவே, கழிவறை எங்கிருக்கிறது என்று ஸாரிடம் எப்படிக் கேட்பது என்று தயங்கி நெளிவதைப் புரிந்து கொண்ட சார் ''என்ன பிரச்சினை?'' என்றார். தயங்கித் தயங்கி ஒருவழியாய்ச் சொல்லவும் ''இதுக்குத் தானா இவ்வளவு தயக்கம்?'' என்றவர் ''நாம் இப்போது நிற்பதே கழிவறை தானே'' என்றார்.

புடனியில் அறை வாங்கியது போல் இருந்தது. ஏறத்தாழ அரைமணி நேரமாக அங்குதான் நின்று பேசிக் கொண்டிருக்கிறோம். கழிவறை என்பதற்கான அறிகுறியே இல்லை. அங்கு நின்று கொண்டு தான் தேநீர் குடித்திருக்கிறேன். அவ்வளவு சுத்தம். மூக்கைப் பிடிக்காமல், முகத்தைச் சுளிக்காமல் அதற்குப் பிறகும் அங்கு நின்றுதான் பேசிக்கொண்டிருந்தோம்.

பெரிய பெரிய பள்ளிகளில், வெளிப்படையாகப் பேசி விடுவதெனில், கோடீஸ்வரக் குழந்தைகள் கொட்டி அழுது படிக்கும் தனியார் சர்வதேசப் பள்ளிகளில் கூட காணக் கிடைக்காத சுத்தம், உள்மறைந்து கிடக்கும் ஒரு சிற்






றூரில், ஏழைக் குழந்தைகளே பெருமளவு படிக்கும் ஒரு ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியின் கழிவறையில் எப்படி சாத்தியம்? கேட்டே விட்டேன்.

''நம்ம பள்ளிக்கூடம்ங்கிற அக்கறையும் அர்ப்பணிப்பும், அதோடு கொஞ்சம் திட்டமிடலும் இருந்தா எல்லாமே சாத்தியம்தான் சார்,'' சொல்லிக்கொண்டே நகர்ந்துவிட்டார் அந்தப் பள்ளியின் உதவி ஆசிரியர் பொன்ராஜ்.

வேலு சரவணன் தயாரா எனப் பார்க்கலாம் என உள்ளே நுழைந்தால்... ஒன்பது கணினிகள். ஒவ் வொன்றும் தனித்தனியே யூ.பி.எஸ். உடன் இணைக்கப்பட்டு. ஆச்சரியம் கண்களிலிருந்து முழுதாய்க் கழன்று போவதற்கு முன்னமே மேடையில் இன்னோர் ஆச்சர்யம். ஆண்டறிக்கையை மூன்றாம் வகுப்பு படிக்கும் ஒரு மாணவன் வாசிக்க ஆரம்பித்திருந்தான். ஒரு ஸ்டூலில் அவனை ஏற்றி மைக் ஸ்டேண்டுக்கு சமப்படுத்தி இருந்தார்கள். இந்த வேலை எவ்வளவு கடினம் என்பது பல பள்ளிகளில் ''வேண்டாம் விடுங்கப்பா'' என்று பாய்ந்து ஓடும் ஆசிரியர்களின் வேகத்தைப் பார்த்தாலே புரியும். எந்தப் பயமும் இன்றி பொடிசு சும்மா பிரித்து மேய்ந்து கொண்டிருந்தான்! ஒவ்வொரு விஷயமாய் அவன் முடிக்கும் போதும், யுவராஜின் 'சிக்ஸர்'களைக் கண்டு கொந்தளிக்கும் ரசிகர்களைப் போல் கூடியிருந்த கூட்டம் ஆர்ப்பரித்தது.

''ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிகளுக்கு அமெரிக்காவில் உள்ளது போல் மலர்களின் பெயரைச் சூட்டுங் கள்'' என்று அவன் கோரிக்கை வைக்க, தங்கள் குழந்தையின் நியாயமான கோரிக்கையை மக்கள் மிக நீண்ட கரவொலியால் ஆமோதிக்கிறார்கள்.



''எங்கள் பெற்றோர்களும் பெரியோர்களும் கேஸ் அடுப்பு வாங்கித் தந்து, ஈர விறகோடும் புகையோடும் அல்லல் படும் லட்சுமி அக்காவை



எல்லாரும் போட்டியை வச்சுட்டு யாரு முதல் பரிசு என்று தீர்மானிப்பார்கள். நாங்க இந்த புள்ள முத பரிசு வாங்க என்ன போட்டி வைக்கலாம்ன்னு யோசிச்சோம்.

(ஆயம்மா) காப்பாற்ற வேண்டுமாய்'' அவன் சொன்ன போதும் அனைவரும் ஆர்ப்பரித்தனர்.

பரிசளிப்பின் போது நாங்கள் வியப்பின் எல்லையைத் தாண்டினோம். ஒவ்வொரு குழந்தையும் ஐந்தாறு பரிசுகளாவது அள்ளிச் சென்றனர். ஒவ்வொரு குழந்தையும் ஒன்று அல்லது இரண்டு முதல் பரிசுகளாவது வாங்கினர்.

எங்களது வியப்பைத் துடைக்க முன் வந்தார் அந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியை. ''கொஞ்சம் மாத்தி யோசிச்சா வழி பிறக்கும். எல்லாரும் போட்டியை வச்சுட்டு யாரு முதல் பரிசு என்று தீர்மானிப்பார்கள். நாங்க இந்தப் புள்ள முத பரிசு வாங்க என்ன போட்டி வைக்கலாம்னு யோசிச்சோம். பலன் கிடைச்சது.''

'எதுக்குமே லாயக்கு இல்லாத...' என யாரும் உலகத்துல இல்லீங்க சார். ஒவ்வொருத்தனுக்குள்ளேயும் ஒரு திறமை இருக்கு. உடுக்கு அடிக்கிறது அல்லது ஓணான் பிடிக்கிறது. இப்படி அவனுக்கு தோதான ஏதாவது ஒண்ணு வச்சு, அவன பரிசு வாங்க மேடை ஏத்திடுவோம்.''

நன்றியுரை சொல்ல வந்த குழந்தை சொன்னாள்:

''ஊரோரம் கிளிக்காடு
ஒவ்வொன்றும் பஞ்சவர்ணம்
பஞ்சவர்ணக் கிளி உறங்க
பழுத்தாலே கூடு செஞ்சோம்''

சமூகம் பொதுப்பட முதல் நிபந்தனை, கல்வியும் மருத்துவமும் பொதுப்பட வேண்டும். தமிழ்நாட்டில் தோராயமாக 34,500 ஊ.ஒ.துவக்கப் பள்ளிகளும், 10,000 ஊ.ஒ.நடுநிலைப் பள்ளிகளும், 4,500 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளும் உள்ளன. எழுபது சதவிகிதம் மாணவர்கள் இவற்றிலும், பத்து சதவிகிதம் மாணவர்கள் அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகளிலும் படிக்கிறார்கள். இந்தப் பள்ளிகள் எல்லாம் பட்டத்திப்பாளையம் பள்ளியைப் போல் பழக்காடுகளாக மாறி விட்டால், பொதுக் கல்வி தானாய் வெற்றி பெறும்.

என்ன செய்யலாம்?

- இரா.எட்வின்

'சோப்பு போட்டால் என்ன, வார்த்தைகளால் சாமரம் வீசினால் என்ன, இரண்டும் ஒன்றுதான்' என்று கமலஹாசனுக்கு நெத்தியடியாய்ப் பதில் தந்த தராசின் துணிவைப் பாராட்டியே தீர வேண்டும்.

- எஸ்.கே.மூர்த்தி, கும்பகோணம்

''எலி'' எளிய கதையல்ல... மனத்தை அழுத்தும் வலிய கதை.

- எஸ்.உதயகணேஷ், மதுரை-2

வேப்ப எண்ணெய்க்கு கொசுக்கள் வராது என்பது மட்டுமல்ல, அதைப் பெண்கள் தலையில் தேய்த்துக் கொண்டால் பசங்களும் பக்கத்தில் வரமாட்டார்கள்!

- சி.எம்.குமார், மதுரை

விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்புகளுக்கும் கடவுள் செயல்பாடுகளுக்கும் ஒரு விசித்திரமான தொடர்புள்ளதாக இந்திரா பார்த்தசாரதி நிறுவிய சான்றுகள் மறுக்க முடியாதவை.

- வைடூரியன், திருவண்ணாமலை

'திரையுலகம் விழா எடுத்ததே டி.வி. மூலம் ஃபிலிம் காட்டத்தானே' என்ற தராசு வரிகள் சரியான நெத்தியடி.

- என்.காளிதாஸ், சிதம்பரம்

கிராமப்புற எளிய மக்களின் மேம்பாட்டுக்காக அர்ப்பணிப்பு உணர்வுடன் தொண்டாற்றிவரும் செந்தில் கோபாலன் பெரிதும் பாராட்டுக்குரியவர்.

- எஸ்.எம்.பாலசுப்ரமணியன், தேனி

'இரும்புக்கோட்டை முரட்டு சிங்கம்' படத்தின் விமர்சனம் படித்தேன். படு கலக்கலா கலக்கிட்டீங்க... தலைவா! படத்தின் தரத்தைப் பிரிச்சி மேய்வதில் கல்கிக்குதான் முதலிடம்.

- எம்.கே.அருள்ராஜா, முனியங்குறிச்சி



பரிசுக்கடிதம்

கிழக்கு பதிப்பகம் வழங்கும் ரூ.250 மதிப்புள்ள நூல்கள் பரிசு பெறும் கடிதம் :

தமிழையும் பக்தியையும் பிரித்து எண்ண முடியாத நிலையில், தன் வறட்டுத் தனமான கொள்கையைப் புகுத்தும் வண்ணம், செம்மொழி மாநாடு நடத்துவது. தவறான பாதையை நோக்கித் தமிழ்நாடு செல்வதைத்தான் காட்டுகிறது. தமிழ்ப் புத்தாண்டை மாற்றியது, தற்போது அரசின் சின்னத்தை மாற்றக்கோரி, தோழமைக் கட்சிகள் மூலம் முயற்சிப்பது ஆகியவை, தமிழ்நாட்டின் தற்போதைய அரசின் அரசியல் நோக்கத்தைத் தெளிவுபடுத்துகிறது. பக்தியில்லாத தமிழ் இலக்கியம், மொழிக்கு நிச்சயம் பெருமை தராது.

- ஜி.ராமச்சந்திரன், திருவனந்தபுரம்

பன்முக எழுத்தாளரான அருண் சரண்யாதான், ஜி.எஸ்.எஸ். என்று அறிய

மேஞ்சிட்டீங்க...



மிக்க மகிழ்ச்சி.

- ஆர்.ஜானகிரங்கநாதன், சென்னை-4

பிறமொழிகளில் பிரசித்தி பெற்ற சிறந்த கதைகளை ஒவ்வொரு வாரமும் தமிழாக்கம் செய்து பிரசுரிக்கிறீர்கள். ஆனால், அயல்நாட்டு இசை மெட்டுக்களை சிங்காரித்துக் கொடுத்து நம்மை மயக்கி விடுவதாக ஏ.ஆர்.ரஹ்மானிடம் குற்றம் கண்டுபிடித்து, ''கட்ட பழம் வேண்டாமே'' என்கிறீர்கள். பிறமொழிக் கதை ஓ.கே., பிற நாட்டு இசை நோ - என்பது முரண்பாடாக இருக்கிறதே? ரசனைக்கு மொழியோ, எல்லையோ உண்டா என்ன?

- கே.தெய்வசிகாமணி, திருவல்லிக்கேணி-5

மொழிபெயர்ப்புக் கதைகள் மூலக்கதாசிரியரின் பெயரோடு, தற்காலத்தவர் எனில் உரிய அனுமதியோடு வெளியிடப்படுகின்றன; கவனியுங்கள் வாசகரே! (ஆர்)

'பனிக்கோடை' கட்டுரை ரொம்பவே ஹெல்தியா இருந்தது.

- மயிலை கோபி, சென்னை - 83

ஒரு விடியலின் விதை - செந்தில் கோபாலனைப் போல், காந்திய சிந்தனை மிக்க நிறைய கோபாலன்கள் ஒவ்வொரு கிராமத்திலும் தோன்ற வேண்டும்!

- க.ஸ்ரீகாந்த், நெய்வேலி

''ஏற்கெனவே கத்திரி வெயிலின் தாக்கம் தூக்கலா இருக்குது; இதுல நீங்க வேற 'இ.கோ.மு.சி' படத்தை நல்லா வறுத்து எடுத்துட்டீங்களே!

- அனன்யா, திருச்சி

புதர் மனிதர்கள் பற்றிய செய்தியும் படங்களும் ஆஃப்ரிக்க பாலைவனப் பகுதிக்கு இழுத்துச் சென்று விட்டது.

- எம்.செல்லையா, சாத்தூர்

ஆளுயர



எங்க தோட்டத்து வாழைத்தாரை வெட்டி, பத்திரமா கீழிறக்கி, கடை வீதியிலக் கொண்டு போயி பார்வைக்கு வெச்சார் என் கணவர்.
திருக்காட்டுப்பள்ளி சுத்துவட்டாரக் கிராமத்து சனங்க எல்லாரும், திரண்டு வந்து க்யூவில நின்னு பார்த்துட்டுப் போனாங்க. கடைத் தெருவுல, மூணு நாளா அந்தப் பக்கமா போன பஸ்கங்க எல்லாமே, அந்த எடத்துல கொஞ்ச நேரம் நின்னுதான் போச்சு. அப்படி என்ன அந்த வாழைத்தாரு அம்புட்டு உசத்தின்னு நீங்க மனசுக்குள்ளார யோசிக்கிறீங்க இல்லே!'' என்று சஸ்பென்ஸோடு கேட்கிறார் மகாராஜபுரம் கிராம விவசாயி எஸ்.சுந்தரம் என்பவரின் மனைவி எஸ்.விஜயலெட்சுமி.

திருவையாறு அருகே மகாராஜபுரம் கிராமத்தில் வசித்து வருபவர் சுந்தரம். ''பத்து ஏக்கர்ல வாழை சாகுபடி பண்ணி வர்றேன். நான் வெறும் அனுபவ விவசாயி மட்டுமல்ல. ஆராய்ச்சி விவசாயியும் கூட. எதையுமே பரீட்சார்த்தமா செய்யறதுல துணிஞ்சு செயல்படுற ஆளு நானு. அப்படித்தான் இந்த வாழைத்தாரு சாதனையும்.

போதாவூர்ல தேசிய வாழை ஆராய்ச்சி மையம் இருக்கு. 'உதயம்' என்கிற பேரு கொண்ட, வாழை இனத்தின் கற்பூரவள்ளியில மேம்படுத்தப்பட்ட மிக வளர்ப்பு வாழைக்கன்னு ரகத்தினை, புதிதாக ஆய்வு செய்து உருவாக்கியிருந்தார் அந்த ஆராய்ச்சி மைய விஞ்ஞானி டாக்டர். உமா.

உழவர் தின விழாவுல, அந்த வாழைக்கன்றினை 'மாதிரி சாகுபடி'க்காகத் தந்தார்கள். அதனைப்



> “வாழைத்தாரோட உசரம் எட்டு அடி, இருபத்தொன்பது சீப்பு, எழுபது கிலோ.”

பெற்று வந்து வாழைத் தோட்டத்தில் தனித்துத் தெரியுமாறு ஓரமாக ஊன்றி வைத்தேன்.

வளரும்போதே அது பிரமிக்க வைத்தது. சாதாரண வாழைகள் பதினைந்திலிருந்து பதினெட்டு அடி உயரம் வளரும். இந்த ரக வாழையோ

இருநூற்றைம்பது காய் இருக்கும். இந்தப் புதிய ரக வாழைத்தாரு எப்படியிருக்கும்னு எதிர்பார்ப்பு நெறைய எங்களுக்கு.

மரம் பெரிய பெரிய இலைகளைத் தள்ளி வரும்போதே பிரமிச்சுப் போனோம். அதுபோட்ட வாழைத்தாரோட உசரம் எட்டு அடி. இருபத்தொன்பது சீப்பு. சுமார் அறுநூறு காய்கள். எழுபது கிலோ எடை. அதன் இனிப்புத் தன்மையும் வித்தியாசமா, நல்லா இருந்திச்சு. வாழைத்தாரு வெட்டி, தட்டி ரிக்ஷாவுல போட்டு ஊருக்குள்ளாரக் கொண்டாந்தா ஊரு சனமே அதிசயமாப் பார்த்தாங்க.

வாழைத்தாரு!



இருபத்தைந்து அடி உயரத்துக்கு வளர்ந்தது. தார் போடுறதுக்கு முன்பாக, பாதுகாப்பாக, மரம் சாய்ந்து விடாமல் இருக்க வேண்டி, நான்கு கழிகளை முட்டுக் கொடுத்துக் கட்டினோம்.

தார் வுடுற பருவத்தை நெருங்கியது. சாதாரண வாழைத் தார்ல பதினைஞ்சு சீப்பு காய் வரும். மூணரை அடி உசரத்துக்கு தார் வளரும்.

அதான் கடை வீதியில மூணு நாளைக்குப் பார்வைக்காக வெச்சிருந்தேன்! இப்ப எல்லார்க்கும் இந்த ரகத்தைத்தான் தொடர்ந்து சிபாரிசு செஞ்சுக்கிட்டு வர்றேன்'' என்கிறார் வேளாண் விஞ்ஞானி எஸ்.எஸ்.நாகராஜன்.

செய்திச் சித்திரம்:
ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



''மின்துறை அமைச்சருக்குப் பாராட்டுத் தெரிவித்துப் பொதுமக்கள் எல்லாம் மாலை போடுகிறார்களே... ஏன்?''

''மின்சாரக் கட்டணம், பவர் கட்டால் வெகுவாகக் குறைஞ்சிருச்சே... அதுக்காம்...''

- என்.காளிதாஸ்



''தலைவர் அசட்டுத்தனமாகப் பேசி 'பப்ளிக்'கிட்டே நல்லா வாங்கிக் கட்டிக்கிட்டாராமே?''

''ஆமா! 'நம் கட்சி ஆண்களுக்காக 67 சதவிகித இடஒதுக்கீட்டைப் பெற்றுத் தரும்' என்று பேசினாராம்.''

- அ.இராஜப்பன்





''அது ரொம்ப நம்பகமான ஃபைனான்ஸ் கம்பெனின்னு எப்படிச் சொல்றீங்க?''

''அந்தக் கம்பெனி உள்ளே இருக்கிற ஃபேன், கடிகாரமெல்லாம் கூட ஓடாதுன்னா பாருங்களேன்...''

- வி.சாரதி டேச்சு

''ஹலோ... போலீஸ் ஸ்டேஷனா இங்கே ஒரு கொலை நடந்துக்கிட்டிருக்கு...''

''யாரை... யாரு... எங்கே... கொலை பண்றாங்க?''

''மேடையிலேதான். தமிழை ஒருத்தர் கொலை பண்ணிக்கிட்டிருக்கார் சார்.''

- எஸ்.கோபாலன்



கொள்ளை அடிக்கிறதெல்லாம் கொசு அடிக்கிற மாதிரி...



''இன்னிக்கு உங்களுக்கு ஆபரேஷன் கடவுளை வேண்டிக்கோங்க!''

''எதுக்கு டாக்டர்.. அதான் நேரிடையாகவே பார்க்கப் போறேனே?!''



''டாக்டர், எனக்கு மறதி ரொம்பவும் அதிகமாக இருக்கு...''

''எப்படிச் சொல்கிறீர்கள்?''

''ஒரு நல்ல டாக்டரிடம் போகணும்னு கிளம்பினா கடைசியா உங்களிடமே வந்துட்டேனே...''

- என்.எஸ்.பாலசுப்பிரமணியன்



''தலைவரைப் பொறுத்த வரையில் பெரியப் பெரிய காரியமெல்லாம் மிகச் சாதாரணம்...''

''தெரியும்... கொள்ளையடிக்கறதே அவருக்குக் கொசு அடிக்கிற மாதிரி தானே...''

- ஜே.தனலட்சுமி

வாணி குப்தா



ஹேர் பேண்டுக்கு மேட்ச்சா ஹேண்ட் பேக்!



லண்டனில் டிசைனிங் படித்துவிட்டு, கடந்த ஏழு வருடங்களாக விதவித வண்ண மயமான பைகளை வடிவமைத்துத் தயாரித்து வருகிறார் வாணி குப்தா. இவரது பைகளுக்கு இந்தியாவில் மட்டுமின்றி வெளிநாடுகளிலும் ஏகப்பட்ட ரசிகைகள் இருக்கிறார்கள். சம்மர் கலெக்ஷன் என்றால் என்ன, கோடை ஃபேஷனில் பைகளின் பங்கு என்ன என்று கேட்டால், ''சம்மர் ஃபேஷனுக்கு ஏற்ற அற்புதமான பருவம். அதில் முக்கியமாக நீங்கள் அணியும் உடை, தொப்பி, செருப்பு என்பன எவ்வளவு முக்கியமோ, அதைவிட அதிக அளவு முக்கியத்துவம் வாய்ந்தது தோளில் தொங்கும் பை. அதனால் வெயிலில், வெளியில் செல்லும்போது நீங்கள் கொண்டு செல்லும் பையின் மீது அதிக கவனம் செலுத்த வேண்டும். வெறும் பைதானே என்ற அலட்சியம் கூடாது. அதிகமாக வெளியில் சுற்றுவது கோடை காலத்தில் தானே? அதற்கேற்றபடி, பெரிய பூக்கள் இலைகள் என டிசைன் செய் பைகளை நமது கோடைக்கா ஸ்டைல் ஸ்டேட்மென்டா வைத்து கொள்ளலாம்'' என்கிறா வாணி.

''என்ன, பையில் கூடவா ஃபேஷன் எனப் பலர் கேட்பார்கள்.

ஒரு பை அழகுக்கோ ஆடம்பரத்துக்கோவா பொருள் என்று மட்டும் அல்லாமல், நமது தேவையைப் பூர்த்தி செய்யும் விதமாகவும் இருக்க வேண்டும். சுட்டெரிக்கும் வெயிலில், குடை, தண்ணீர் பாட்டில், தொப்பி, ஏன் சில சமயங்களில் மாற்று உடை என எல்லாவற்றையும் எடுத்துச் செல்ல ஏதுவாக பை இருக்க வேண்டும்'' என்றவர், ''பருத்தி, ஆடைகளுக்கு





மட்டும் அல்ல
பைக்கும் அதுதான்
க்யூட் 'சாய்ஸ்'. நல்ல அழகான,
கண்களை உறுத்தாத மென்மை
யான நிறத்தில், காட்டன்
பைகளின் கலெக்ஷன் செய்ய ஆரம்
பித்து. நீங்கள் போட்டிருக்கும் உடை
யின் நிறத்துக்கு காண்ட்ராஸ்ட் நிறத்தில்
உங்களுக்கான பையை செலக்ட்
பண்ணினால் பார்க்க பளிச்சுன்னு
இருக்கும். பையின் நிறம், அணிந்
திருக்கும் செருப்பின் நிறத்தை
ஒத்தோ அல்லது தலையில்
போட்டிருக்கும் ஹேர் பேண்
டின் நிறத்தை ஒட்டியோ
இருந்தால் போதும். உங்கள்
ஊரின் செம சம்மர் ஸ்டைல்
சிம்பல் நீங்கள்தான்'' என
பை ஸ்டைல் தத்துவம்
சொல்லித் தருகிறார் வாணி
குப்தா.

அசட்டுத் துணிச்சல்

தமிழக அரசியலின் சமீபத்திய சலசலப்பு - குஷ்பு. அவர் சேர்ந்த கட்சியின் தலைவராலேயே, 'பெண்களின் முன்னேற்றத்துக்காகப் பாடுபடுபவர் குஷ்பு' என்று சொல்லப்பட்ட போது, அதீதமான மீடியா வெளிச்சம் அவர் மீது... அவரின் ப்ளஸ் என்ன, மைனஸ் என்ன?

பிளஸ்

* மும்பையில் குழந்தை நட்சத்திரமாகச் சின்னச்சின்ன வேடங்களில் தலைகாட்டிக் கொண்டிருந்த குஷ்பு என்ற நக்கத்கான், தெற்கத்தியத் திரையுலகத்திற்கு அறிமுகமானது தெலுங்குப் படத்தின் மூலம்தான்.

* களையான முகம்; பூசினாற்போல உடல்வாகு. தமிழ் ரசிகர்கள் மனத்தில் பச்சக்கென ஒட்டிக் கொண்டார் குஷ்பு.

* கோயில் கட்டிக் கொண்டாடும் அளவுக்கு ரசிகர்கள் மனத்தில் ஊடுருவியவர்.

* சின்னத்தம்பி, கிழக்கு வாசல், வருஷம் 16, வெற்றி விழா, நாட்டாமை, அண்ணாமலை என்று குஷ்புவின் கிரீடத்தில் பல வெற்றிமணிகள். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி என்று நூறுக்கு மேற்பட்ட படங்களில் நடித்தாயிற்று.

* கிசுகிசு எழுதும் பத்திரிகையாளர்களை நேரிடையாகக் கூப்பிட்டு, "நீங்க எழுதறது தப்பு" என்று சொல்லும் துணிச்சல் உண்டு.

* பத்து வருட காலம் கோலோச்சிய பின், கோடம்பாக்கம் மார்க்கெட் சரியத் துவங்கியது. சின்னத்திரையில் குங்குமம், ஜனனி, கல்கி போன்ற தொடர்களால் பெண்களை கொள்ளை கொண்டவர். ஜாக்பாட், அவரது ஆடை அலங்காரத்தில் 'ஜாக்பாட்' என்று விமர்சிக்கப்பட்டது.

* தன்னம்பிக்கை அதிகம். காய்ச்சல், சாதாரண உடல்நலக் குறைவுகளுக்காகப் படப்பிடிப்பை ரத்து செய்ய மாட்டார்.

* படப்பிடிப்புக்குச் சரியான நேரத்தில் ஆஜராவது, தன் சம்பளத்தைக் குறைத்துக் கொண்டாலும், தன் உதவியாளர்களுக்கு தயாரிப்பாளர்களிடம் தகுதியான சம்பளத்தை வாங்கிக் கொடுப்பது போன்றவை குஷ்பு பிடிவாதம் காட்டும் விஷயங்கள்.

* வார்த்தைகள் மாற்றிப் பேசப்பட்டால் வந்துவிடும் கோபம் குஷ்புவுக்கு. (அம்மணி... அரசியலுக்கு சரியா வருமா?)

* படப்பிடிப்பை விடக் குடும்பத்திற்கு; குழந்தைகளின் படிப்பிற்கு முன்னுரிமை கொடுப்பவர்! இரவுப் படப்பிடிப்பை கூடியவரை தவிர்ப்பார்.

* இவரைக் கவர்ந்த தலைவர் ராஜீவ் காந்தி.

* பெண் சுதந்திரம்; பெண்களின் சுயகௌரவம் ஆகியவற்றுக்காகத் தயங்காமல் குரல்கொடுப்பவர்.

மைனஸ்

* அவருக்கு வரும் கோபத்தால், சர்ச்சை உருவாகிவிடும். பல வருடங்களுக்கு முன், ஒரு நட்சத்திர ஹோட்டல் ஊழியரை அடித்து விட, ஏக ரகளைதான்.

[+] ப்ளஸ் [-] மைனஸ் = பெரும்புள்ளி

அரசியல் பாய்ச்சல்!

* தமிழ்ப் பண்பாட்டுச் சூழல் தெரி ாமல் பேசி வம்பில் மாட்டிக் கொண்ட அனுபவம்.

* அவர் 'அரசியலில் குதிக்க இருக் றார்' என்று கேள்விப்பட்டவுடன், சில னிமா பத்திரிகையாளர்கள் அவரது 'உதவியாளர்களை' அப்ப நீங்க அமைச்சராகி விடலாம்'' என்று கிண்டலடித் னர். உதவியாளர்கள் குஷ்புவிடம் கலாட்டா வைச் சொல்ல அவர் கெவும் ஸீரியஸாகி, ''ஏன், நான் முதல்வராக வரக் கூடாதா?'' என்று கேட்டாராம். இப்படியான யதார்த்தம் பிறழ்ந்த சிந்தனை/பேச்சு, மைனஸில் பெரிய மைனஸ்.

* பாஸிட்டிவ்வான அவரது தன்னம்பிக்கையும் துணிச்சலும், வெளிப்படையான பேச்சும் கூட, வெட்டி பந்தா, தலைக்கனம், திமிர் பிடித்தவர் என்ற நெகட்டிவ் மெஸேஜைப் பரப்பும் நிலை.

* சின்னத் திரையில் கண்ணியமான கேரக்டர்களில் வெளுத்து வாங்கும் குஷ்பு 'வில்லு' படத்தில் குத்தாட்டம் போட்டது.

- ஸ்ரீநி



கல்கி
27.06.2010 இதழ்

செம்மொழி மாநாடு சிறப்பிதழ்!

செம்மையாய்த் தயாராகுது...

அடுத்த இதழிலிருந்து...

செந்தமிழ்ப் போட்டி


அமர்க்களமாய் ஆரம்பம்

போடுங்கய்யா தீர்மானம்-5

திராவிட இயக்கம் என்பதே தென்னிந்திய மொழிகளான தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம்... போன்ற மொழிகள் பேசுவோர் முன்னேற்றத்துக்காக ஆரம்பிக்கப்பட்டது. தமிழ்தான் தெலுங்கு, கன்னடம், மலையாள மொழிகளுக்கு ஆணிவேர். எனவே, திராவிட இயக்கத்தில் இருந்து உதித்த அரசியல் பேரியக்கமான தி.மு.க. தலைமையேற்றிருக்கும், தமிழக அரசின் முயற்சியில் நடக்கும் உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாட்டுக்கு கன்னட மொழி, மலையாள மொழி, தெலுங்கு மொழியைச் சேர்ந்த அறிஞர்கள், எழுத்தாளர்கள் சிறப்பான முறையில் வரவேற்கப்பட்டு, அவர்களுக்கு உரிய கௌரவம் அளிக்கப்பட வேண்டும்! அம்மொழி வல்லுனர்களைப் பாராட்டி தீர்மானமும் நிறைவேற்ற வேண்டும்.



- டி.செல்வன்,
நெல்லையப்பபுரம்





போத்தீஸ்
பசுமை கொண்டாட்டம்
www.gogreenatpothys.com
பசுமையான உலகம் படைத்திட,
இளம் பிஞ்சுகளின் மனதில்
பசுமை சிந்தனை விதைக்க,
போத்தீஸின் பசுமைக் கொண்டாட்டம்.
போத்தீஸில் திரும்பும் திசை எங்கும்
கண்ணைப் பறிக்கும் விதமாக
பழங்கள், பூக்கள், காய்கள், இலைகள்
என்று இயற்கை வண்ணங்களில்
சிறுவர்களுக்கான ஆடை ரகங்கள்
அளவிட முடியாமல்
அலங்கரிக்கப்பட்டுள்ளன
போத்தீஸில் ஆடைகள் வாங்கும்
ஒவ்வொருவருக்கும் ஓர்
உயர்ந்த ரக மரக்கன்று இலவசமாக
கொடுக்கப்படுகிறது.
இதை, "My Tree, My Family"
என்று பெயரிட்டு மகிழுங்கள்.
போத்தீஸின்
www.gogreenatpothys.com
இணையதளத்தைப் பாருங்கள்.
உங்கள் கருத்துகளைப்
பதிவு செய்யுங்கள்.
Enter "Go Green" Contest
Win exciting prizes at
www.gogreenatpothys.com
போத்தீஸ்
திருநெல்வேலி • சென்னை • மதுரை
அழகிய ஜவுளிகளின் ஆலயம்